ஊலக் அசிவுசார் சொத்துரிமை
வர்த்தகத் தொடர்

இலக்கம் : 4









ஆக்கத்திறன் தோற்றம்

சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையாளர்களுக்கு பதிப்புரிமை மற்றும் அதனோடு இணைந்த உரிமமங்கள் பற்றிய ஓர் அறிமுகம்

WIPO
WORLD
INTELLECTUAL PROPERTY
ORGANIZATION

முகவுரை

“வர்த்தகத்திற்கான அறிவுசார் சொத்துக்கள்“ வழிகாட்டல்கள் தொடரின் நான்காவது வழிகாட்டலே இதுவாகும். இது வர்த்தகத்திலுள்ள பல்லேறு பங்குதாரர்களுக்கு (உற்பத்தியாளர், உரிமையாளர்,முகாமையாளர், நிறைவேற்று பணிப்பாளர்,முதலீட்டாளர் மற்றும் வர்த்தக ஆலோசனையாளர்) சாத்தியமான ஆக்கத்திறன் தோற்றத்தின் முக்கியத்துவத்தினை விளக்கும்.

வர்த்தகநாம கட்டமைப்பு திட்டமிடலின் முக்கிய பகுதியாக பதிப்புரிமை முகாமைத்துவம் இருக்க வேண்டும். புதிய சந்தைகளின் தோற்றம் மற்றும் இணையத்தின் வளர்ச்சி என்பன பெறுமதியான வர்த்தக இலச்சினைகள் மற்றும் புதிய வர்த்தக மாதிரிகளின் தயாரிப்பை அதிகரித்துள்ளதுடன் நிறுவனம் தெளிவாக வெளிப்பட்டு தெரிவதையும் உறுதிசெய்யும். அவ்வாறே வர்த்தக இலச்சினை உரிமையினை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு இல்லாவிடின் அவை பிறரால் துஸ்பிரயோகம் செய்யப்படும்.பதிப்புரிமையானது அதன் வர்த்தக தன்மையை, அதன் வர்த்தக வாடிக்கையாளர் இலக்கினை மற்றும் அதன் தொழிற்துறையின் நிபந்தனைகனை மற்றும் குறிப்பிட்ட வர்த்தகத்தின் சிறப்பியல்பினை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். அத்துடன் வர்த்தகநாமமாக, சந்தையில் விற்பனை திட்டமிடல் மற்றும் வர்த்தக வெற்றி போன்ற பரிணாம வளர்ச்சிக்கு உகந்ததாகவும் இருக்க வேண்டும்.

இக்கையேடு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கு உதவும் முகமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இது சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு கீழுள்ள காரணிகளை தெளிவு படுத்தும்.

- அவர்கள் தயாரிக்கும் சுயமானவற்றின் உரிமைகளை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.
- உரிமங்களின் முழுப்பயனையும் பெற வேண்டும்.
- உரிமங்கள் சம்பந்தமான துஸ்பிரயோகங்களை தவிர்த்தல்

தேசிய நிறுவனங்கள் மற்றும் பங்காளிகளுடன் இணைந்து தேசியரீதியில் பொருத்தமானதை அமைத்துக் கொள்ளலாம். இதற்கான WIPO வினை இலவசமாக நாடலாம்.

”வியாபாரத்திற்கான நுண்ணறிவாளர் உடைமை” பிரசுரங்களின் தொடர்:

1. **இலக்கினை ஏற்படுத்தல்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில் முயற்சி களுக்கான வியாபாரச் சின்னத்தின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல:900.

2. **பார்வைக்கு நேர்த்தியான:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிகளுக் கான கைத்தொழில் வடிவமைப்பின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல:498.

3. **எதிர்காலத்தின் உருவாக்கம்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிக ளுக்கான காப்புரிமைகளின் அறிமுகம். உ.நு.உ.ஒ பிரசுர இல:917.

4. **ஆக்கத்திறன் தோற்றம்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிகளு க்கான பதிப்புரிமையின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல:918 (எதிர்பார்க்கப்படுகின்றது)

உ.நு.உ.ஒ. (WIPO) மின் புத்தகசாலையில (e - bookshop)
www.wipo.int/ebookshop இல் சகல பிரசுரங்களும் கிடைக்கும்.

கோரிக்கை கைவிடல்: இவ்வழிகாட்டியில் அடங்கியுள்ள தகவல், தொழில்சார் சட்ட மதியுரைக்கு பதிலீடாகாது. இதன் பிரதான நோக்கமானது இவ்விடய அடிப்படை தகவலை அளிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

உலக நுண்ணறிவாளர் உடைமை ஒன்றியத்தின் (உ.நு.உ.ஒ) முன்பு தெளிவாய் குறிப்பிட்ட அனுமதியுடன் இந்த பிரசுரமானது மொழி பெயர்க்கப்பட்டு மீள் அளிக்கப்பட்டுகின்றது, பதிப்புரிமை உரிமையாளரின் மூல ஆங்கில கூற்றானது www.wipo.int/sme/en/documents/guides/ இல் உள்ளது. எனவே, உ.நு.உ.ஒ. ஆனது, மொழிபெயர்க்கப்பட்ட கூற்றின் பிரசுரத்தின் செம்மை அல்லது திருத்தத்தன்மைக்கும் பொறுப்பாளியோ அல்லது கடமைப்பட்டவராக இருக்கமாட்டாது, ஏனெனில் பொறுப்போ அல்லது கடமையோ இலங்கை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தியாளர்களிலேயே (செயல்திட்ட சி.ந.தொ.மு.அ.) முழுமையாக தங்கியிருப்பதினாலாகும்.

”சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தியாளர்கள் (செயல்திட்ட சி.ந.தொ. மு.அ.) (பதிப்புரிமை 2010)” உ.நு.உ.ஒ. ஆனது (2006) மூல ஆங்கில மொழி கூற்றின் பதிப்புரிமைக்கு உரிமையாளியாக உள்ளது. இப்பிரசுரத்தின் எப்பகுதியினையாகிலும் எவ் வடிவிலும் அல்லது எவ்விதத்திலும், பதிப்புரிமை உரிமையாளரின் எழுத்துமூல அனுமதி யின்றி மின்னணு மூலமோ அல்லது பொறிவழி மூலமோ மீள் அளித்தலோ அல்லது பரப்புதலோ சட்டத்தால் அனுமதிக்கப்பட்டவாறாக அன்றி ஆகாது.

பதிப்புரை உரிமையாளரிடமிருந்து எழுத்துமூல அனுமதியின்றி, இப்பிரசுரத்தின் எப்பகுதி யையும் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறன்றி மின்னணு சார்பாகவோ அல்லது பொறி முறையாகவோ அல்லது எவ்வகையாகவோ அல்லது எவ்வடிவமாகவோ பதிப்புரிமை யாளரின் எழுத்துமூல அனுமதியின்றி மீள் தயாரித்தல் ஆகாது.

பொருளடக்கம்

பக்கம்

1. பதிப்புரிமை மற்றும் அதனோடு இணைந்த உரிமைகள் 3

2. பதிப்புரிமையின் கால எல்லை 8

3. உங்கள் மூலபடைப்புகளை பாதுகாத்தல் 24

4. பதிப்பரிமையின் உரிமை 31

5. பதிப்புரிமை மற்றும் இணை உரிமைகள் மூலம் அனுகூல மடைதல் 35

6. மற்றவர்களுக்கு உரிமையான வேலைகளை உபயோகித்தல் 44

7. பதிப்புரிமத்தினை நடைமுறைப்படுத்தல் 52

1. பதிப்புரிமையும் அதனுடன் இணைந்த உரிமைகளும்

பதிப்புரிமை என்றால் என்ன?

நூலாசிரியர், பாடலாசிரியர், கணினி செயற் பாட் டுவரையுனர்(Programers), இணையத்தள வரையுனர், இலக்கிய, அழகுக்கலை, நாடகக்கலை போன்ற படைப்புக்களை ஆக்கியவர்களுக்கு பதிப்புரிமை சட்டமானது சட்டரீதியான பாதுகாப்பு தருகின்றது.

புத்தகங்கள், சஞ்சிகைகள், புதினப்பத்திரிக்கைகள், சங்கீதம், ஓவியங்கள், நிழல் படங்கள், சிலைகள், கட்டட நிர்மாணங்கள், சினிமாப்படங்கள், கணினிசெயற்பாட்டு வரைபுகள், வீடியோ விளையாட்டுகள், மூல தரவுத்தளங்கள் போன்ற பரந்துபட்ட பல்வகை மூலப் படைப்புக்களை பதிப்புரிமை சட்டம் பாதுகாக்கின்றது.(மேலதிகமான பட்டியலை பக்கம் 8ல் காண்க)

இப்பதிப்புரிமை சட்டமானது ஒரு ஆசிரியனுக்கோ அல்லது அதன் ஆக்கியோனுக்கோ குறுகிய ஆயினும் நீண்ட காலத்திற்கு பல தரப்பட்ட **பிரத்தியேக உரிமைப் பொதியை** பெற்றுக்கொடுக்கின்றது. இச்சட்டமானது அக் கலைப் பொருட்களின் மேல் **பொருளாதார அபிவிருத்தி பாவிப்பிற்கான அதிகாரத்தையும்** பணம் பெறுவதற்கான அதிகாரத்தையும் பெற்றுக்கொடுக்கின்றது. இதற்கு மேலாக இச்சட்டம் ஆக்கியோனின் மற்றைய பாதுகாப்புக்களோடு **நியாய உரிமையும்** பெற்றுக் கொடுக்கின்றதால் அவரின் கீர்த்திக்கும் நேர்மைக்கும் பாதுகாப்பளிக்கின்றது





பல்வகை மூலப் படைப்புக்களை பதிப்புரிமை சட்டம் பாதுகாக்கின்றது

பதிப்புரிமையும் வியாபாரமும்

அனேக வியாபார தாபனங்களில் அவர்களின் சிற்சில அம்சங்கள் பதிப்புரிமை சட்டத்தின் பாதுகாப்பை பெற்றுள்ளன. இதற்கு உதாரணங்களாக கணினி செயற்பாட்டு வரைபுகள் அல்லது மென்பொருள், இணையத்தளத்தின் தரவுகள், உற்பத்திப்பொருள் விபரக்கோவை (Catalogs) செய்தித்திரட்டுக்கள், செய்முறை குறிப்புக்கள் அல்லது இயந்திரத்தை அல்லது பாவனைப் பொருட்கள் இயக்குவதற்கான கையேடு, பலதரப்பட்ட உபகரணங்களுக்கான பாவிப்பு, திருத்துதல் மற்றும் பராமரித்தல் சம்பந்த கையேடு, சித்திர வேலைப்பாடு, உற்பத்திப் பொருள் சார்பான விவரணம், பொருளின் மேல் ஒட்டப்படும் பொதியிடல், bill boards, இணையத்தளங்கள், போன்றவைகளை கொள்ளலாம். அனேக நாடுகளில் உற்பத் திப் பொருளின் வடிவமைப்பின் வரிவடிவ சித்திரங்கள், வரைதல்கள் போன்றவற்றையும் பதிப்பு உரிமை சட்டம் பாதுகாக்கின்றது.

இணைந்த உரிமைகள் எவை?

நடிப்பவர்கள், இசை வல்லுநர்கள், ஒலிபரப்பாளர்கள் போன்றவர்க ளுக்கு கிட்டும் பாதுகாப்பே "இணைந்த உரிமைகளாம்". பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இவை பதிப்புரிமையுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் தனியான அயலவர் உரிமைக்கூடாக இதனை பாதுகாக்கின்றன.

இணைந்த அல்லது அயல் உரிமை மூவகைப்படும்.

- ஒருபடைப்பை மேடையேற்றும் போது அதில் பங்குபெறும் **செயலாற்றுபவர்களின்** உரிமை (உதாரணத்திற்கு நடிகர்கள் மற்றும் பாடகர்கள்). இது இதற்கு முன் இருந்த ஒரு கலை அல்லது நாடக அல்லது இசை வெளிப்பாட்டை, நேரிடையாக அல்லது ஏற்கெனவே உள்ள ஒரு இலக்கிய படைப்பை மனனம் செய்து ஒப்புவித் தல் போன்றவையும் அடங்கும். அவரினால் ஒப்புவிக்கப் பட்டது ஏற்கெனவே ஏதாகிலும் பொது மேடையேற்றப் பட்டிருக்காவிட்டாலும் அது பதிவுரிமை சட்டத்தின்படி பாதுகாக்கப்பட்டோ அல்லது பொது மக்களுக்கு உரியதாயிருக்கலாம். அந்நிகழ்ச்சி முற்றிலும் புதியதாக அல்லது முன்னரிருந்த ஒரு நிகழ்ச்சியின் தழுவலாக கூட இருக்கலாம்.

- **ஒலிப்பதிவாளர்களின்** ஒலிப்பதிவுகளின் மேலுள்ள உரிமை (உதாரணம்: இறுவட்டு)

- **ஒலிபரப்பு தாபனங்களின்** வானலையில் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி ஊடாக ஒலி ஒளி பரப்பும் உரிமை. சில நாடுக ளில் கேபிள் மூலம் பரப்பப்படுவதும் இதற்குள் அடக்கப்படுகின்றது. (மேலதிக இணைந்த உரிமைகளை பக்கம் 17ல் காண்க).

பதிப்புரிமை மற்றும் இணைந்த உரிமைகள் வெவ்வேறு பிரிவினரின் உரிமைகளை பாதுகாக் கின்றது. படைப்பாளர்களின் உரிமையை பதிப்புரிமைக்கூடாக பாதுகாக்கப்பட்டாலும் இணைந்த உரிமைகள் **பதிப்புரிமையினால் பாதுகாக்கப்படாத** ஆனால் அப்படைப்போடு தொடர்புள்ள மற்றவர்களுடைய அல்லது தாபனங்களின் தொடர்பாடல், அல்லது பரப்பு தல் வியாபார மூல உரிமையை காக்கின்றது.

உதாரணம்: ஒரு பாடலை எடுத்துக்கொண்டால் பதிப்புரிமை, இசையமைப்பாளரினதும் பாடலாசிரியரினதும் உரிமையை காத்துகொள்ளும் போது அதனுடனிணைந்த உரிமைகள்

- அப்பாடலை பாடியவரினதும், சங்கீத வாத்தியங்கள் வாசிப்போரினதும் உரிமையும்
- தயாரிப்பாளரின் ஒலிப்பதிவிலும்
- அப்பாடல் இணைக்கப்பட்ட ஒரு நிகழிச்சியை தயாரித்து ஒலிபரப் பிய தாபனத்திற்கும் பாதுகாப்பளிக்கும்.





www.wipo.int/sme/

பதிப்புரிமையும் அதனோடு இணைந்த உரிமைகளும் உங்கள் வியாபாரத்திற்கு எவ்விதத்தில் ஏற்றதாகும்?

புதிப்புரிமை ஒரு தயாரிப்பின் அல்லது சேவையின் இலக்கிய, கலைநுட்ப, நாடகபாணியான, அல்லது மற்றைய ஆக்கத்திறன் பகுதிகளை பாதுகாக்கின்றதால் அதன் உரிமையாளர் வேறொருவர் அதை பாவிப்பதை தடுக்க வியலும். எனவே பதிப்புரிமையும் அதனோடி ணைந்த உரிமைகளும் ஒரு வியாபாரத்தினை:

- **மூலஆக்கத்திறனைப் பிரதிசெய்வதன் மூலம் ஏற்படும் வியாபார சுரண்டலை தடுக்க:** புத்தகங்கள், சங்கீதம், சினிமாப் படங்கள், கணினித் திட்ட வரைபுகள், மூலதரவுத் தளங்கள், விளம்பரங்கள், இணையத்தளத் தரவுகள், வீடியோ விளையாட்டுக்கள், ஒலிப்பதிவுகள், தொலைகாட்சி ரேடியோ நிகழ்ச்சிகள் அல்லது வேறு ஏதாகிலும் புதிதாக படைத்திருத்தல். பதிப்புரிமை மற்றும் அதனோடி ணைந்த உரிமைகளாலும் பாதுகாக்கபட்ட ஒரு ஆக்கத்தை வேறொருவர் முன் அனுமதியின்றி வியாபார நோக்கிற்காக பயன்படுத்தல் கூடா து. இவ்விதம் பதிப்புரிமையும் அதனோடி ணைந்த உரிமையும் வியாபாரத்தைப் பாதுகாத்தால் இவை போட்டி சந்தையில் மேம்பாட்டிற்கான முக்கிய காரணியாகும்.

- **வருமானத்தை உருவாக்க:** சொத்தொன்றின் சொந்தக்காரரைப் போன்று பதிவுரிமை மற்றும் அதனோடிணைந்த உரிமையினை பெற்ற ஒருவர் அதனை பாவிக்கவோ, விற்கவோ அல்லது தானமாக கொடுக்கவோ, வாரிசாக பெறவோ முடியும். அதில் ஒரு உரிமை தான் இப்பதிப்புரிமை. இணைந்த உரிமையூடாக ஒரு வேலை யினை செய்யவோ அல்லது பிரதி எடுக்கவோ முடியும் (உ-ம் நிழல்படத்தின் பிரதிகள்) உங்கள் உரிமைகளை வேறொரு நபருக்கோ தாபனத்திற்கோ விற்றல் மற்றைய முறையாகும். இன்னொரு முறையாக பணத்தை பெற்று சில நிபந்தனைகளுடன் உங்கள் உரிமையை மற்றொருவர் பாவிக்க அனுமதியளித்தல் மிக அனுகூலமானதாகும். (36-ம் பக்கத்தை பார்க்க)

- **மூலதனத்தை கூட்ட:** பதிப்புரிமையோ அல்லது அதனோடிணைந்த உரிமைகளை பெற்ற ஒரு தாபனம் (உ-ம் சினிமாப் படங்கள் சேகரித்து விநியோக உரிமை பெற்ற) அந்த அனுமதிப் பத்திரங்களை நிதி தாப னமொன்றில் "உத்தரவாதமாக" பாவித்து வேண்டிய பணத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

- **சட்டவிரோத அத்து மீறுதல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க:** பதிப்புரிமையோ சட்டமானது உரிமையாளருக்கு சட்ட விரோதமாக எவராகிலும் அத்து மீறும் பட்சத்தில் அவரிடமிருந்து நட்ட ஈட்டையும் அத்துமிறி உருவாக்கியவற்றை அழிக்கவும் சட்ட வல்லுனர்களின் கட்டணத்தையும் பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கின்றது. சில நாடுக ளில் வேண்டுமென்று பிரதி செய்ததை உறுதிப்படுத்தினால் அபராதமும் விதிக்கலாம்.

- **மற்றவர்களுக்கு உரித்தான உருவாக்கங்களை பாவித்தல்:** பதிப்புரிமையோ டிணைந்த உரிமைகள் பெற்ற மற்றையவர்களின் உருவாக்கங்களை வியாபார நோக்கிற்காக பாவிக்க நடவடிக்கை எடுத்தல் உங்கள் வியாபாரத்தின் சாமர்த்திய பெறுமதியையும் வியாபார சின்னத்தின்

பெறுமதியையும் கூட்டுகின்றது. உதாரணத் திற்கு ஒரு சாப்பாட்டுக்கடையிலோ, மதுபான சாலையிலோ சில்லறைக் கடையிலோ அல்லது விமானநிலையத்திலோ சங்கீத த்தை இசைப்பது ஒரு வாடிக்கையாளர் சேவையினை பெறும் வேளையில் அல்லது வெளியேறுகையில் அவரின் அனுபவத் தைக் கூட்டுவதாகும். அனேகமான நாடுகளில் இவ்விதம் சங்கீதத்தை பாவிப்பதற்கு அதன் பதிப்புரிமை பெற்ற நபரிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றிரு த்தல் அவசியம். புதிப்புரிமை சட்டத்தினை சரியாக புரிந்து கொண்டால் எப்போ எவ்விதம் உரிமை பெற்றவரிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்து கொள்ளலாம். பதிப்பு ரிமை மற்றும் இணைந்த உரிமை பெற்றவர் களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட காரணத் திற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக கொள்ளல் தேவையற்ற பிரச்சனைகளை தவிர்ப்தோடு வீண் நேர மற்றும் பண விரயத்தையும் தவிர்க்கும்.



அனேக வர்த்தகங்களின் துண்டுப் பிரசுரங்களும் அச்சு விளம்பரங்களும் பதிப்புரிமம் பெற்றவை

பதிப்புரிமையையும் இணைந்த உரிமைகளையும் எப்படி பெற்றுக்கொள்ளலாம்?

உலக அரங்கில் அநேக நாடுகளில் பதிப்புரிமை மற்றும் இணைந்த உரிமைகள் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட சட்ட வாக்கங்கள் உள்ளதைக் காணலாம். நடுகளில் காணப்படும் பதிப்புரிமை மற்றும் இணைந்த உரிமைகள் குறித்த சட்டங்களுக்கிடையில் அனேக முக்கிய விடயங்களில் வேறுபாடுகள் காணப்படுவதால் ஒரு வியாபார நடவ டிக்கையை ஆரம்பிக்கு முன் இச்சட்டங்களை நன்கறிந்த நிபுணரின் ஆலோசளையை பெற்றுக்கொள்ளல் உசிதமானது.

அனேக நாடுகள் பதிப்புரிமை மற்றும் இணைந்த உரிமைகள் தொடர்பாக கைச்சாத்திட்டிருப்பதினால் ஓரளவிற்காவது ஒருங்கிணைக்கக் கூடியதாயுள்ளது. அதிகளவான நாடுகளில் இதனால் பதிப்புரிமை பாதுகாப்பானது **சம்பிரதாயங்களும் பதிவுகளும் இன்றி** பெற்றுக்கொள்ளக் கூடியதாயுள்ளது. பின்னிணைப்பு III ல் முக்கிய **சர்வதேச ஒப்பந்த வகைகளைக்** காணலாம்.

மூலப்படைப்புக்களை பாதுகாக்க வேறு மார்க்கங்கள் உண்டா?

உங்களுடைய படைப்பின் குணாம் சங்களைப் பொருத்து பின்வரும் ஒன்றின் அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மூலமாக பாதுகாக்கப்படலாம்.

- **வியாபார சின்னம்:** ஒரு வியாபார தாபனத் தின் வியாபார சின்னமானது (சொற்கள், சின்னம் அல்லது இவ்விரண்டும் கலந்த) அத்தாப னத்தின் உற்பத்திப் பொருட்கள் போட்டி சந்தையிலுள்ள அற்றைய பொருட் களில் நின்று வேறுபடுத்தி காட்டும்.

- **கைத்தொழில் வடிவமைப்புக்கள்:** கைத் தொழி வடிவமைப்பு பாதுகாப்பினூடாக அப்பொருளின் வெளித் தோற்ற அழகியல் நிலையை பாதுகாத்துக் கொள்ளலாம். சில நாடுகளில் இதனை வடிவமைப்பு உரிமை என்றும் அழைப்பர்.

- **ஆக்க உரிமை:** புதுமையானது என்ற நிலையுடைய எந்த ஒரு பொருளையும் இதனூடாகப் பாதுகாக்கலாம்.

- **இரகசிய வியாபார செய்திகள்:** பெறுமதிவாய்ந்த வியாபார இரகசியங்களை பாதுகா க்க அதன் உரிமையாளரினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இம்முறை யினூடாக பாதுகாக்க முடியும்.

- **முறையற்ற போட்டி:** உங்கள் வியாபார போட்டியாளரினால் மேற்கொள்ளப்படும் முறையற்ற போட்டிகளுக்கு எதிராக இம்முறையின்படி பாதுகாப்புப் பெறலாம். இம்முறைக்கூடாக ஒரு உற்பத்தியாளர் போட்டியாளரினால் அனுமதிக்கப்பட்ட தற்கும் மேலாக தனது உற்பத்தியின் மாதிரியை உற்பத்தி செய்வதையும் விற்பனை செய்வதனையும் தடுக்கலாம். ஆயினும் பலதரப்பட்ட அறிவுசார் சொத்த திகாரத்தின் வெவ்வேறு பகுதிகளுக் கூடாக பாதுகாப்பு பெற்றுக் கொள்ளல் தனியே முறையற்ற போட்டி பாதுகாப்பிலும் மிக உன்னதமானதாகும்.



சிலவேளை பல வகையான அறிவுசார் சொத்ததிகாரத்தின் மூலம் படைப்புக் களை பாதுகாத்தல் நடைமுறை படுத்தப் படுகின்றது. (ஏக காலத்தில் அல்லது ஒன்றன்பின் ஒன்றாக) உதார ணத்திற்கு "மிக்கி மவுஸ்" பாத்திரத் தை பதிவுரிமை சட்டமும் வியாபார சின்ன சட்டங்களும் பாதுகாப்பளிக் கின்றன. ' Disney Enterprises, Inc. வோள்ட் டிஸ்ணி தாபனத்தின் அனுமதியுடன் டிஸ்னி என்ரபிறைஸ் பாவிக்கின்றது.

2. பாதுகாப்பின் வியாபகமும் கால எல்லையும்

என்னென்ன வகையான படைப்புக்கள் பதிப்புரிமையினால் பாதுகாக்கப் படுகின்றன?

அனேகமான நாடுகளின் நடவடிக்கையை நோக்கில், அவை படிப்படியாக அனேக படைப்புகளுக்கு பதிப்புரிமையை விஸ்தரித துள்ளன. தேசிய பதிப்புரிமை சட்டங்கள் என்னென்ன வகை உற்பத்திப்படைப்புக் களுக்கு பாதுகாப்பளிக்கின்றனர் என்ற ஒரு பட்டியல் வைத்திராதால் அவை பரந்த தும் நெகிழ்வுத் தனைமையுள்ளதுமான பட்டியலை கொண்டுள்ளன. அனேகமான நாடுகளில் பின்வரும் வவகைகளில் பதிவுகள் நடைபெறுகின்றன.

- இலக்கிய படைப்புக்கள்: (உ+ம் புத்தகங் கள், சஞ்சிகைகள். புதினப்பத்திரிகைகள், தொழில்நுட்ப ஆவணங்கள், அறிவுறுத்தல் குறிப்புக்கள், விபரப்பட்டியல்கள், இலக்கிய ப்படைப்புக்களின் அட்டவணைகளும் தொகுப்புகளும்)
- சங்கீதப் படைப்புக்கள் அல்லது தொகுப்பு க்களும் சம்மதங்களும்.
- நாடகப் படைப்புக்கள் (நாடக மேடையேற்ற ங்களும் வீடியோ பட்டிமூலம் பயிற்சியளித் தலும்)
- அழகிய சித்திரப் படைப்புக்கள் (உ+ம் கேலிக்கித்திரங்கள், படவரைபுகள், சித்திர ங்கள், சிற்பவேலைகள், கணினி சித்திரங் கள் போன்றவை)
- நிழல்படங்கள் (காகிதத்தி லுள்ளதும் டிஜிட்டல் முறையானதும்)
- கணினி மென்பொருளும் செயற்திட்ட ங்களும். (9-ம் பக்கத்திலுள்ள அட்டவணை யைப் பார்க்கவும்).
- சிலவகை தரவு தளங்கள் (11-ம் பக்க அட்டவணையைப் பார்க்க)
- தேசப்படங்கள், புவிகோளம், கடற்படங்கள், வரிவடிவப்படங்கள், திட்ட வரைபடங்கள், தொழில் நுட்ப வரைபடங்கள் போன்றவை.
- விளம்பரங்கள், வியாபார நோக்கான அச்சுப் பிரதிகள், லேபல்கள்.
- சினிமாப்பட தயாரிப்புக்கள், இவற்றில் சலன ப்படங்களும், தொலைகாட்சி நிகழ்ச்சிகளும் இணையத்தள செய்தி பரப்புக்களும் அடங்கும்.
- தோடர்புசாதன வேலைகள் (24-ம் பக்க அட்டவணைணை பார்க்கவும்)
- சிற்சில நாடுகளில் பிரயோக சித்திரங்கள் (உ+ம். அழகிய நகைகள், சிவர்களில் ஒட்டும் சித்திரக்காகிதமும் நில விரிப்புக் களும்) (14-ம் பக்க அட்டவணையை பார்க்கவும்.

அச்சேற்றப்பட்ட மற்றும் **எலக்ரோணிக் முறை யில் அல்லது டிஜிட்டல் முறையில்** களஞ்சியப் படுத்தப்பட்டவைகள் அனைத்தையும் பதிப்பு ரிமை பாதுகாக்கின்றது. ஒன்றாலும் பூஜ்ஜியங்களாலும் ஆன டிஜிட்டல் துறையானது கணினியால் மாத்திரமே வாசிக்க கூடுமானாலும் பதிப்புரிமையை பாதிக்காது.



தேசப்பட வரைபுகள் *சங்கீதம் மற்றும் வீடியோ*

கணினி திட்டங்களையும் மென்பொருளையும் பாதுகாத்தல்

டிஜிட்டல் முறையில் அச்சுக்கும், சப்தத்திற்கும், விளக்க வரைபடத்திற்கும், நிழல்படங்களுக்கும், சங்கீதத்திற்கும் உயிரூட்டமான சித்திரங்களுக்கும், வீடியோக்களுக்கும் இடையில் எவ்வித வித்தியாசமும் காட்டுவதில்லை ஆயினும் கணினி திட்டவங்களில் மற்றைய திட்டவரைபு களோடு ஒப்பிடுகையில் ஒரு முக்கிய வேறுபாட்டை காணலாம். வாக்கியங்கள், சப்தங்கள், கிரவிக் படவரைபுகள் போன்றவை **செயலற்ற** தன்மையுள்ளனவாயும் கணினித் திட்டங்கள் **செயலாற்றும்** தன்மையுள்ளனவாயும் இருக்கி ன்றன. எனவே கணினி திட்டவரைபுகளுக்கான பதிப்புரிமை பாதுகாப்பானது ஆழமாக ஆலோசிக்கப்பட வேண்டியதாயுள்ளது.

கணினி திட்ட வரைபுகளின் பல்வேறு பிரிவுகளை பதிவு செய்வதற்கு பல வழி முறைகள் உள்ளன.

- பதிப்புரிமையானது ஆசிரியனின் மூல வெளிப்பாட்டான கணினி திட்ட வரைபை ஒரு 'இலக்கிய தொழில்பா டாக' பதிவுசெய்து பாதுகாக்கின்றது. எனவே அவரின் மூலசங்கேத பாயை மனிதர் வாசிக்கக்கூடிய அனுமதி யளித்த மென்பொருள் பொறியியலாளர்களின் ஒரு இலக்கிய செயற்பாடாக பதிகின்றது. மனிதனால் வாசிக்கக்கூடிய எழுத்து உருவங்களும் (source code) அதேவேளை இயந்திரம் வாசிக்கக்கூடிய செயல்படு சங் கேத பாயையிலான (object code) எழுத்துருவமும் இலக்கிய படைப்புக்களாகவே கருதப்படுகின்றதால் அவை **பதிப்புரிமை** சட்டப்படி பாதுகாப்பை பெறுகின் றன. ஆயினும் மென்பொருளின் பொருளாதார பெறுமானம் அதை பாவிப்பதிலேயே தங்கியுள்ளது. உங்கள் கணினியை இயங்க வைப்பது சங்கேத பாஷ்யிலான உறுவங்களானபடியால் அதையே மக்கள் பாவிப்பிற்கு வெளியிடலாம். இப்படிப்பட்ட மென்பொருள் கள் ஒரு கால இடைவெளி கொடுக்கப்பட்டுள்ளதால் போட்டியாளர்களை இக்கால இடைவெளியில் வெற்றி கொள்ள இயலும். புதிப்புரிமை அதன் உரிமையாள ருக்கு சாதாரண கால எல்லை பாதுகாப்பு வழங்கி பாதுகாக்கின்றது.

- சில நாடுகளில் கணினி திட்டவரை பின் செயல்பாடு நிலையினை **பேட்டன்ட்** (patent) தனியுரிமை பாதுகாப்பின் மூலம் பாதுகாக்கின்ற வேளையில் மற்றைய நாடுகள் அவற்றிற்கு அவ்விதம் பாதுகாப் பளிப்பதில்லை.

- கணினி மென்பொருளுக்கான திட்ட வரைபுகளை பதிப்புரிமை செய்வதுடன் அவற்றை **வியாபார இரகசியமாகவும்** பாதுகாத்தல் சாதாரண செயல்பா டாகும்.

- சிலநாடுகள் கணினி யன்னலில் பொருத்தப்படும் ஐ-கொன்ஸின் (icons) சில வடிவங்களை **கைத்தொழில் வடிவமைப்பாக** பதிவுசெய்கின்றன.

- **ஒப்பந்த சட்டங்களின்** படியான ஒப்பந்தங்கள் சட்ட பாதுகாப்பில் அறிவுசார் சொத்து உரிமையின் பாதுகாப்பை ஈடுசெய்வதற்கும் அல்லது பிரதியீடு செய்வதற்கும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இப்படிப்பட்ட ஒப்பந்த அடிப்படை யிலான அல்லது அனுமதியளித்தலின் மூலமாக 'உயர்ந்த நிலையிலான பதிப்புரிமையை' தாபனம் பெற்றுக்கொள்ளும். இவ்வித கூடுதலான பாதுகாப்பானது தேசிய ரீதியில் அனேகமாக எதிர்மறையான அவதானத்தை ஏற்படுத்துவதால் முதன்மை நிலையினை துஸ்பிரயோ கம் செய்வதாக எண்ணப்படலாம்.

- அண்மைக் காலங்களில் அனேக நாடுகள் கணினி மென்பொருள் அடங்கலாக தகவல் தொழில் நுட்ப தகவல்கள் பெறுவதற்கெதிராக **கிரிமினல் சட்டத் தினை** (criminal law) பாவிக்க ஆரம்பித்துள்ளன.

- சட்ட பாதுகாப்பிற்கு மேலாக புதிய **தொழில் நுட்ப** முகமொன்று கூட தற்போது பாதுகாப்பளிக்கின்றது. உதாரணத்திற்கு கதவடைப்பு முறையையும் இரகசிய அறையில் பூட்டப்பட்ட முறையையும் (lockout programs and use of encryption methods) சொல்ல லாம். எனவே தொழில் நுட்பம் கூட அதனூடாக புத்தியுள்ள உற்பத்தி யாளருக்கு மேலதிக பாதுகாப்பைத் தருகின்றது. இதற்குதாரணமாக வீடியோ விளையாட்டுக்கள் உற்பத்தி யாளர்கள் பூட்டப்பட்ட முறை (lockout technology) மூலமும் பதிப்புரிமை சட்டத்தின் மூலமும் பாதுகாப்பை பெறுகின்றனர்.

அதேவேளை மென்பொருளின் சிற்சில பகுதிகள் பதிவுரிமை பெற்றுக்கொள்ள முடியாதவை களாம். செயல்முறை நடவடிக்கைகள் (உம். இயக்கமுறை திட்ட ஆணைகள் -menu commands) மிக பிரத்தியேகமான அழகியல் வேலைப்பாடுகள் இல்லாவிட்டால் பதிவுரிமை செய்ய முடியாதவைகளாம். அதேவேளை கிரவிகல் பாவனையார் இன்டவேஸ் (GUI) தெளிவுபடுத்தும் பகுதிகள் இல்லையெனில் பதிப்புரிமை பெற தகுதியுடையவையாகாது.

பதிபுரிமை மூலம் தெளிவுபடுத்தும் பகுதிகளை பாதுகாத்தல்:

- பதிய வேண்டியதில்லை (பக்கம் 24-ஐ பார்க்கவும்).
- இதனைப்பெறுவது செலவில்லாதது.
- நீண்டகாலம் நீடிக்கும்.(23-ம் பக்கத்தை பார்க்கவும்)

- வரையறுக்கப்பட்ட பாதுகாப்பையே தருகி ன்றது. அது மென்பொருளில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணக்கருத்துக்கள், கட்டுமான அமைப்பு, மற்றும் செய்கை ஒழுங்குமுறை என்பவற்றை குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலில் **வெளிப்படுத்தப்பட்டவை**. (13ம் பக்கத்தை பார்க்கவும்)

- ஒரு எண்ணக்கருவை, கட்டுமான அமைப்பை அல்லது செய்முறை போன்ற வற்றை பதிப்புரிமை பாதுகாக்காது. வேறு விதத்தில் கூறுவதானால் பதிப்புரிமை மூல அல்லது நோக்கு சங்கேத மொழி நடைமுறைப்படுத்தக்கூடிய நிகழ்ச்சி த்திட்டம், இடைமுகங்கள், பாவனையாள ருக்கு கொடுக்கப்படும் செயல்முறை குறிப்புகள். என்பவற்றை ஆனால் எண்ணக்கரு நடைமுறைகள் செய்முறைகள் செயற்படுமுறைகள் மென்பொருளின் உபயோகப்படும் நுட்பம் என்பன தவிர்ந்தவற்றின் அதிகாரபூர்வமில்லாது பிரதி செய்தலை அல்லத உபயோகிப்பதை தடை செய்கிறது. இது ஆக்க உரிமை முறையிலோ அல்லது வியாபார இரகசியமாக பேணுவதன் மூலம் பாதுகாக்கப்படலாம்.

தற்காலத்தில் சட்டப்படியும் தொழில்நுட்ப ரீதியாகவும் வியாபார தந்திரமாக பாவிக்க எண்ணும் மென்பொருள் உற்பத்தியாளர் களுக்கு புதுமையான பாதுகாப்பு பெற்றுக் கொடுக்கின்றது. அவர்களுக்கு அதனுடனி ணைந்த சவால் ஒன்றும் உள்ளது. தனிப்பட்ட கணினியும் இணையத்தனமும் இணைந்து ஒரு

சில மவுஸ் அல்லது Keystroke தட்டுவதன் மூலம் உலகின் எப்பாகத்திற்கும் டிஜிட்டல் வேலைத்திட்டத்தின் பிரதி ஒன்றை அனுப்ப கூடியதாகவுள்ளது.

சிக்கலான கணினி திட்டவரைபுகளில் சொல்லி ற்கு சொல் பிரதிசெய்தலும் அனுமதியற்ற கணனி நிகழ்வுகளின் விநியோகம் தற்கால சட்டவிரோத ஆக்கிரமிப்புகளாம்.

அனேக தருணங்களில் வெளிபாட்டில் ஒத்துள்ளமை (பதிப்புரிமை பெற்ற) அல்லது செயல்பாடு (பதிப்புரிமை பெறாத) பற்றி கவனத்திலெடுக்க தேவையில்லை.

தரவுதளங்களின் பாதுகாப்பு

இலகுவாக பெறக்கூடியதாக பெறப்பட்ட தரவு களை ஒழுங்காக நிரல்படுத்தி வைக்கப்பட்டு ள்ள இடமே தரவு தளமாகும். அது கடதாசியிலோ அன்றேல் இலத்திரனியல் முறையில் அமையலாம். புதிப்புரிமை சட்டம் தரவு தளங்களை பதுகாக்கின்றது. **எல்லா தரவு தளங்களும் பாதுகாக்கப்பட்டிருப்ப தில்லை.** பாதுகாக்கப்பட்டவையும் **வரையறுக்க ப்பட்ட பாதுகாப்பையே பெற்றுள்ளன.**

- ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் தரவுதளங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டு **மூலமானது** (original) எனக்கருதினால் மாத்திரமே பதிவுரிமை செய்யப்படும். பிரத்தியேக தளங்களும் அகர வரிசையில் ஒழுங்கமைக்கப்பட்ட தளங்க ளும் பதிப்புரிமை சட்டத்தின்படி பதிவு செய்யப்படுவதில்லை. (சில வேளைகளில் அவை **முறையற்ற போட்டி சட்டத்திற்க மைய** பாதுகாக்கப்படலாம்)
- வேறு சில நாடுகளில் விசேடமாக ஐரோப்பிய யூனியன் நாடுகளில் தரவு **தளவுரிமை திட்டத்தின்** (database right) படி **மூல மற்ற தரவு தளங்கள்** (non original databases) கூடிய பாதுகாப்பை பெறுகின் றன. இச்சட்ட வரைபூடாக தாபனங்கள் தமது **நியாயமான பணச்செலவுடன்** (substantial investment) உருவாக்கி பாதுகாக்கின்ற தரவு தளத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை பாவிக்கும் தானங்களுக் கெதிராக வழக்கு தாக்கல் செய்யவியலும். தரவு தளம் உண்மை யாகவே மூலப்பிரதியாயிருந் தால் அது பதிப்புரிமை சட்டத்தினாலும் பாதுகாக்கப்படும்.

ஒரு தரவு தளமானது பதிப்புரிமை மூலம் பாதுகாக்கப்பட்டிருந்தால் அப்பாதுகாப்பு அத் தளத்தின் திரட்டுக்களை அல்லாது **அது திரட்டப்பட்ட விதத்தையும் அது எவ்வாறு அறிமுகஞ்செய்யப்பட்டுள்ளது** என்பதனையே பாதுகாக்கின்றது.

ஒரு செயல்பாடு பாதுகாப்பைப் பெற என்னென்ன தராதரத்தினை எட்ட வேண்டும்?

பதிப்புரிமை பாதுகாப்பினை பெறுவதற்கு அது **அசலான மூல** (original) பிரதி யாயிருக்க வேண்டும். மூலம் என்னும் பொழுது அது ஆக்கியோனின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். அதாவது அவ்வேலைப்பாடு வேறு யாருடைய வேலையை அல்லது பொதுத் தளங்களிலிருந்து பிரதிசெய்ததாக இருக்கக கூடாது. மூலை பிரதியின் அர்த்தம் நாட்டிற்கு நாடு சிறிது வேறுபடும். எவ்வாராயி னும் மூலஆக்கம் அதன் **வெளிப்பாடாக** (form of expression) இருக்கவேண்டுமே யொழிய அதின் எண்ணப்பாடாக கொள்ள முடியாது. (13-ம் பக்கம் பார்க்கவும்)

சில நாடுகள் ஆக்கங்களை ஏதாவது ஒரு **பவடிவில்** கோருகின்றன. பவடிவம் என்னும் போது காகிதத் தில் எழுதப்பட்ட, இறுவட்டில் களஞ்சிய ப்படுத்தப்பட்ட, கித்தான் துணியில் (canvas) வரையப்பட்ட அல்லது நாடாவில் பதியப் பட்டதாக இருக்கவேண்டும். Choreographic வேலைகள், முன்அறிவிப்பின்றி பேசும் பேச்சுக்கள், பதியப்படாத சங்கீதங்கள் பாதுகாக்கப்படுவதில்லை. சாதாரணமாக அடிகொருதரம் திரையில் காட்சிப் படுத்தப் படுத்தப்படும் சிறுகாட்சிகள், தொலைகாட்சியில் காட்டப்படுபவவை, அல்லது கணினியின் ஞாபக த்திலிருந்து திடீரென வெளிப்படுபவை ஒன்றும் பதியப்படுவதில்லை. ஒரு படைப்பை ஆக்கி யோனால் அல்லது அவரால் அனுமதிய ளிக்கப்பட்டவர் பதியலாம். சப்தமும் பிரதி பிம்பமும் ஒன்றாக ஒலிபரப்பம் போது பதியப்பட்டால் அது பதியப் பட்ட நிகழ்ச்சியாக கருதப்படும். அப்படிப்பட்ட பதிவுகள் ஒலிப்பதிவு க்கருவி மூலம் அல்லது பிரதிகள் எடுத்தல் ஆகிய இருவகைகளில் பதியப்படலாம். பிரதிகள் என்னும் போது வெளிப்படையான (அச்சடித்த அல்லது கணினி சிப்கள்) அல்லது டிஜிட்டல் முறையானதாக (கணினி செயல் திட்டங்கள் மற்றும் தகவல் தளங்கள்) அமையலாம்.

பதிப்புரிமையானது வெளியீடு செய்தவற்றையும் வெளியீடு செய்யாததையையும் பாதுகாக் கின்றது.

அசல் மூல பிரதி ஒன்றை உருவாக்குவதற்கு உழைப்பு, திறமை, நேரம், சாமர்த்தியம், தெரிவு அல்லது மூளைவேலை என்பன அவசியம். அப்படியிருந்தும் ஒரு ஆக்கமானது பதிப்புரிமையை பெற அதன் **ஆக்குத்திறன், தரம், அல்லது மதிப்பு என்பற்றில் தங்கியிராததுடன்** இலக்கிய நயத்திலோ அழகியலிலோ பெற்றிருத்தல் அவசியமில்லை. பொதி செய்யும் லேபல்கள், மருந்து சிட்டைகள், தொழில் நுட்ப வழிகாட்டிகள், வழிகாட்டல் குறிப்புகள், பொறியியல் வரைபடங்கள், ஏன் 3 வயது குழந்தையின் வரைபடம் கூட பதிப்புரிமை மூலம் பதியலாம்.





பௌதிக, கட்டக்கலை, இயந்திரங்கள், விளையாட்டு பொருட்கள், ஆடைகள், போன்றற்றின் வரைபடங்கள் பதிப்புரிமை யினால் பாதுகாக்கப்படுகின்றன

என்னென்ன பகுதிகள் பதிப்புரிமை மூலம் பாதுகாக்கப்படுவதில்லை?

- **எண்ணங்களும் கருதுகோள்களும்:** ஒரு ஆக்கத்தில் எண்ணங்களும் கருதுகோள்களும் வெளிப்படுத்தும் விதத்தையே பதிப்புரிமை பாதுகாக் கின்றது. அவ்ஆக்கத்துக்கான எண்ணம், கருதுகோள், கண்டுபிடிப்பு, செயல்படுமுறை, நியதி, நடைமுறை, கட்டுமான அமைப்பு போன்றவை எவ்விதத்தில் தொடர்வுபடுத்தப்பட்டுள்ளன என்பவற்றை பாதுகாப் பதில்லை. ஒரு கருதுகோள் அல்லது செயல்படு முறை பதிப்புரிமைக்கு உட்படாதபோதும் அவற்றை இயங்க செய்வதற்கான குறிப்பு கட்டளைகள் அல்லது வரைபடங்கள் பதிப்புரிமை மூலம் பாதுகாக்கப் படுகின்றன.

உதாரணம் : உங்கள் தாபனம் பியர் பானம் தயாரிப்பு என்பதற்கான கையேட்டின் மேல் பதிப்புரிமை கொண்டுள்ளது. பதிப்புரிமை மற்றவர்கள் உங்கள் கை யேட்டில் நீங்கள் கூறியவற்றை அப்படியே பிரதி செய்தலை அல்லது நீங்கள் பாவித்த வரைபடங்களை, சொற்தொடர்களை அப்படியே பாவித் தலை தடுக்கும் வேளை மற்றைய போட்டியாளர்கள் (அ) நீங்கள் கூறிய படி இயந்திராதிகள், முறை என்பவற்றை பாவித்து வியாபாரத்தில் ஈடுபடுவதையோ அல்லது (ஆ) பியர் தயாரிப்பதை பற்றி இன்னுமொரு கையேடு தயாரிப்ப தையோ தடுக்கும் உரிமையை தராது.

- **உண்மைகள் அல்லது தகவல்கள்:** பதிப்புரிமை உண்மைகளுக்கும் தகவல்களுக்கும் பாதுகாப்பு தராது - அது விஞ்ஞான, வரலாற்று, சுயசரிதை, அல்லது செய்தியாக இருந்தாலும் - அது வெளியிடப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட முறை என்பவற்றுக்கு மாத்திரமே பாதுகாப்பளிக்கின்றது. (11-ம் பக்கத்தி லுள்ள தரவுதள பாதுகாப்பு பற்றிய அட்டவணையை பார்க்கவும்)

உதாரணம் : சுயசரிதை ஒரு மனிதனின் வாழ்க்கையின் பல உண்மைகளை வெளிப்படுத்தும். ஆக்கியோன் இதற்கு முன் அறியா அனேக உண்மைகளை கண்டுகொள்ள அதிக நேரத்தை செலவிட் டிருக்கலாம். எனினும் மற்றவர்கள் அந்த உண்மைகளை அவர் வெளிப் படுத்தியவற்றை அப்படியே பாவிக்காதவரை எடுத்து பாவிப்பதற்கு தடையில்லை. அதேவேளை ஒரு சமையல் குறிப்பில் உள்ளவற்றைப் பார்த்து ஒருவர் ஆகாரம் தயாரிக்கலாம் ஆயினும் அந்த குறிப்பை அனுமதியில் லாமல் பிரதி செய்ய முடியாது.

- **பெயர்கள், தலைப்புகள், மற்றும் சிறு சொற்தொடர்கள்:** பெயர்கள், தலைப்புகள், மற்றும் சிறு சொற்தொடர்கள் சாதாரணமாக பதிப்புரிமையினின்று விலத்தப்பட்டு ள்ளன. ஆயினும் சில நாடுகள் அவை அதி சிருஷ்டித் தன்மையினை (creative) கொண்டதென கருதினால் பதிவாக்கும். ஒரு உற்பத்தியின் பெயர் அல்லது விளம்பர சுலோகம் பதிப்புரிமையினால் பாதுகா க்கப்படாத போதும் அவை வியாபார சின்னத்தின் மூலம் (7-ம் பக்கம் பார்க்கவும்) அல்லது முறையற்ற வியாபார போட்டி சட்டமூலம் பாதுகாப்பை பெறலாம். தாபனத்தின் அடையாள சின்னம் (Logo) பதிப்புரிமை சட்டப்படியும் வியாபார சின்ன சட்டப்படியும் அதனதன் தேவைகளை பூரத்தி செய்தால் பாதுகாப்பை பெறலாம்.

- **உத்தியோகபூர்வ அரச நடவடிக்கைகள்:** உத்தியோக பூர்வ அரச நடவடிக்கைகள் (சட்டவாக்கசாதனம் அல்லது நீதிசார்பான அபிப்பிராயங்கள்) சில நாடு:களில் எவ்வித பதிப்புரிமையும் பெறுவதில்லை. (32-ம் பக்கத்தை பார்க்கவும்)

- **பிரயோக சித்திர வேலைகள்:** சில நாடுக ளில் பிரயோக சித்திரவேலைகளுக்கு பதிப்புரிமை கொடுப்பதில்லை. அந்நாடு

களில் அச்சித்திரத்தின் அழகியல் வேலைப்பாடுகள் கைத்தொழில் வடிவமைப்பு சட்டப்படி பாதுகாக்கப்படுகின்றன (கீழே அட்டவணையைப் பார்க்கவும்). ஆயினும் பதிப்புரிமை அதன் படங்களையும், வரைபட அல்லது சிற்ப வேலைப்பாடுகளை அதன் 'பாவனை தொழில்பாட்டிலிருந்து வேறுபடுத்தி பாதுகாக்கின்றது.

பதிப்புரிமையினால் பெறப்படும் உரிமைகள் என்ன?

பதிப்புரிமை இருவகை உரிமைப்பொதிகளை தருகின்றன. ஆக்கியோனின் அல்லது உரிமையாளரின் வியாபார முன்னேற்றத்தை பாதுகாத்து பொருளாதார பாதுகாப்பளிக்கின்றது. ஒழுக்கப்பாதுகாப்பானது (moral rights) அதனூடாக ஆக்கியோனின் சீரியநிலையையும் கீர்த்தியையும் பாதுகாக்கின்றது.

பொருளாதார உரிமை என்றால் என்ன?

பதிப்புரிமையின் உரிமையாளருக்கு/ பெற்றிருப்பவருக்கு அவ்வேலையினை வேறு யாராவது பாவிப்பதை அனுமதிப்பதற்கு அல்லது தடைசெய்வதற்கு **சம்பூர்ண அதிகாரத்தை** பெறுகின்றார். **சம்பூர்ண** என்னும் போது உரிமையாளரின் முன் அனுமதியில்லாது எவரும் இவ்வதிகாரத்தை பாவிக்க முடியாது. இவ்வுரிமையின் வீச்செல்லை, அதன் வரையறை, விதிவிலக்குகள் என்பவை என்னென்ன செயல்பாடுகள் தொடர்புள்ளன என்பதற்கும் நாட்டுக்கு நாடும் வேறுபடும். பொருளாதார உரிமை என்னம் போது பிரதிசெய்யும் உரிமை மட்டும் என்ற நிலைக்கும் அப்பாற்பட்டது. இதன் முக்கியத்துவம் என்னவெனில் பொருளாதார உரிமைக்கும் மேலாக வேறு யாரும் ஆக்கியோனின் சிரமத்தை நீதியற்ற முறையில் சுரண்ட இடமளிக்காது மற்றும் பல உரிமைகளுக்கு கொடுக்கின்றது. உதாரணமாக பொருளாதார உரிமை பின்வரும் உரிமைகளையும் உள்ளடக்குகின்றன.

பிரயோக சித்திரங்களுக்கு - புதுப்பு முற்றும் வடிவமைப்பு ஆகுமுகுள் ஒன்றை ஒன்று மேவுதல்

கைத்தொழிலாக தினசரி பாவிப்புப் பொருள்களில் பிரயோக சித்திர வேலைகள் பாவிக்கப்படுகின்றன. இதற்கு நல்ல உதாரணங்களாக நகை வேலைகள், மின்விளக்குகள் மற்றும் தளபாடங்களை கொள்ளலாம். பிரயோக சித்திர வேலைபாடுகள் இருவகை இயல்புகளை கொண்டுள்ளன. அவை அழகியல் வேலைபாடாக கொள்ளப்பட்ட போதும் இவற்றின் உபயோகம் தெரியப்பட்ட கலாசார சந்தையிலல்லாது பொது தேவைகள் பொருட்கள் சந்தையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. . எனவே இவற்றை பதிவுரிமைக்கும் கைத்தொழில் வடிவமை ப்பிற்கும் இடையிலேயான எல்லையில் வைக்கின்றன. **பிரயோக சித்திரக்கலைக்கு கொடுக்க ப்படும் பாதுகாப்பானது நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது.** சில நாடுகளில் இருவகை பாதுகாப்பும் இணைந்து காணப்படு கையில் எல்லா நாடுகளிலும் இந்நிலை காணப்படுவதில்லை. எனவே **தேசியரீதியிலான ஒரு அறிவுசார் சொத்து (IP) நிபுணரின் ஆலோசனை** பெறுதல் அந்நாட்டிற்கான சரியான நிலையினை எடுப்பதற்கு உசிதமானதாகும்.

www.wipo.int/sme/

- **ஒரு ஆக்கத்தின் பல பிரதி களை எடுத்தல்:** ஒரு வேலைப்பாட்டின் பல பிரதிகளை பல வகைகளில் எடுக்கலாம். ஒரு இறுவட்டை பிரதிசெய்தல், ஒரு புத்தகத்தை போட்டோபிரதி செய்தல், ஒரு படத்தை டிஜிட்டல் முறையில் ஹாட்டிஸ்கில் களஞ்சியப்படுத்தல், ஒரு விசயத்தை ஸ்கான் செய்தல், டீ சேட்டில் கேலிச்த்திர படங்கள் வரைதல் அல்லது ஒரு பாடலின் பகுதியை புதிய பாடலில் சேர்த்துக் கொள்ளல் என்பன உதார ணங்களாக கொள்ளலாம்.

- **ஒருவேலைப்பாடின் பிரதிகளை பொது மக்களுக்கு விநியோகித்தல்:** ஒரு பதிப்புரிமை பெற்றவருக்கு ஆக்கத்திறன் அனுமதிபெறாத ஒருவர் பிரதிகளை மக்களுக்கு விற்றலை, குத்தகைக்கு கொடுத்தலை அல்லது தனது வேலைப் பாட்டின் ஒருபகுதியை பெற அனுமதி யளித்தல் போன்ற காரியங்களை தடுக்க இயலும். இங்கு ஒரு விடயத்தை கவனத் தில் கொள்ள வேண்டும். அனேக நாடுகளில் ஒரு பிரதியின் முதல் விற்பனை அல்லது உரிமை மாற்றம் நடைபெற்றவுடன் விநியோக உரிமை முடிவிற்கு வரு கின்றது. அதாவது பதிப்புரிமையாளருக்கு முதல் பிரதி விற்பதை மட்டுமே கட்டுப்படுத்த இயலும். அதன் விற்பனைக்கு பின் உரிமையாளருக்கு அந்நாடுகளில் விற்பனையை கட்டுப்படுத்த இயலாது. பிரதியை வாங்கியவர் விரும்பின் திரும்ப விற்கவோ இனாமாக கொடுக்கவோ முடியுமா ஆனாலும் பிரதிகள் செய்யவோ அதன் தளுவல்களை உண்டாக்கவோ முடியாது.

- **ஆக்கத்திறன் பிரதிகளை வாடகைக்கு விடல்:** இந்நிலை சிலவகையான ஆக்கங்களுக்கே பொருந்தும். உதாரண த்திற்கு சினிமா படதொழிற்பாடு, சங்கீத செயற்பாடுகள், அல்லது கணினி திட்ட வரைபுகள். ஆயினும் இந்நிலை கைத்தொ ழில் உற்பத்தியின் கணினி திட்ட வரைவுக ளுக்கு பொருந்தாது. உதாரணத்திற்கு வாடகைக்கு அமர்த்திய காரின் எரிபொரு ளை பற்ற வைக்கும் கணினித் திட்டம்

- **ஒரு வேலைத்திட்டத்தின் மொழிபெயர்ப்பை உருவாக்கல்:** இப்படிப்பட்ட வேலைக ளையும் **பாதுகாக்கப்பட்ட வேலைபாடுகளின்** புதிய **தளுவல் வேலைப்பாடாகவே** கொள்ளவேண்டும். உதாரணத்திற்கு ஆங்கி லத்திலுள்ள செயல்பாடு கையேட்டை வேறுமொழிக்கு மாற்றல், ஓர் நாவலை தழுவிய சினமாப்படம் தயாரித்தல், ஒரு கணினி திட்ட வரைபை வேறொரு திட்டத்தி ற்கு மாற்றல், வேறுபட்ட சங்கீத ஒழுங்கை ஏற்படுத்தல், கேலிசித்திர வடிவிலான விளையாட்டு பொருள் ஒன்றை செய்தல் போன்றவை. ஆயினும் தளுவல் படைப்பு க்களை உருவாக்குவதில் சில பிரத்தியேக உரிமையுண்டு. உதாரணத்திற்கு உங்க ளிடம் சட்டப்படி எடுத்த கணினி திட்ட வரைபொன்று உண்டானால் அதை உங்கள் தேவைக்கேற்ப சீரமைத்து பாவிக்கலாம்.

- **பகிரங்க மேடையேற்றமும் ஒரு வேலைப் பாட்டை பொதுமக்களுக்கு தொடர்பு படுத்தலும்:** இவற்றில் பொது மேடை ற்றத்தின் மூலம், மனனம் செய்து ஒப்புவிப்பதன் மூலம், ஒலிபரப்புதல் அல்லது ரேடியோ தொடர்பாடல் மூலம், கேபல், செயற்கைகிரக அல்லது தொலை காட்சி மூலம், அல்லது இணைய தளமூல

பரப்புதல் போன்ற வற்றின் மீதான பூர்ண உரிமையாகும். ஒரு வேலைப்பாடு ஒரு குடும்பத்தையோ நண்பர்களை விட மக்கள் கூடிய பொது மேடையில் நடத்தும் போது **பொது மேடையில் நடாத்தப்பட்டதாக** கருதப்படும். மேடையேற் றும் உரிமை இலக்கிய, சங்கீத, மற்றும் ஒளி ஒலி வேலைகட்கு வரையறுக்கப்பட்டுள்ள வேளையில் தொடர் பாடல் உரிமையானது எல்லா வேலைகளை யும் அடக்கும்.

- **ஒரு வேலையை திரும்ப விற்கும் போது விற்பனையில் ஒரு பகுதி யை பெறுதல்:** இதை மறுவிற்பனை உரிமை என்கின் றோம். இவ்வுரிமை சில நாடுகளில் மாத்திரமே இருந்தாலும் சிலவகை வேலைகள் மாத்திரமே (உதாரணமாக வர்ணச் சித்திரங்கள், சித்திரங்கள், கல்லூரிகள், சிலைகள், செதுக்கும் சித்தி ரம், சித்திரத் தொங்கல்கள், மட்பாத்தி ரங்கள், கண்ணாடிப்பாத்திரங்கள், மூல கையெழுத்து பிரதிகள் போன்றவை). மறு விற்பனை உரிமை ஆக்கியோனுக்கு தனது படைப்பு பொருளின் சில விதிகளின் படியான மறுவிற்பனையில் 2-5 வீதத்தை பெற உரித்துடையவராகின்றார்.

- ஒருவனோ ஒருவளோ விரும்பும் நேரத்தில் **இணையத்திலிருந்து தேவைப்படும் வேலை களை பெறக்கூடியதாயுள்ளது.** இணைய த்தளத்தில் இணைப்பு தொடர்பாடல் தேவையை அது உள்ளடக்குகின்து.

எவராவது அல்லது தாபனம் பாதுகாப்பு பெற்ற ஏதாகிலும் ஒரு ஆக்கத்தை ஏதாவது விதத்தில் மேலே சொன்னபடி பாவிக்க விரும்பினால் அதற்கு உரிமை பெற்றவரிடமிருந்து முன் அனுமதி பெறவேண்டும்.

பதிப்புரிமை மிரேத்தியேகமானதானாலும் அதற்கும் கால வரையரையுள்ளது டன் (23-ம் பக்கம் பார்க்கவும்) அவற்றுக்கு சில முக்கிய விதிவிலக்குகள், வரையறைகளை யும் கொண்டுள்ளது (47-ம் பக்கம் பார்க்கவும்).

ஒழுக்க உரிமை (moral rights) என்றால் என்ன?

இவ்வுரிமை பிரெஞ்சு நாட்டின் வழக்கமான டெரொயிட் டீ ஆத்தர் (droit d'auteur) முறைப்படி ஆக்கியோனுடைய படைப்புகளில் அவருடைய இதயத்தை வார்த்துள்ளதாக கருதுகின்றது. அங்லோ சக்சன் பதிப்புரிமை சட்டங்கள் தூய தெளிவானதாக இருக்கின்றது. அதாவது எந்த படைப்பும் ஒரு காரை அல்லது வீட்டைப்போல பணத்திற்கு கொள்ள, விற்க, அல்லது குத்தகைக்கு கொடுக்க கூடியது என்று கொள்கின்றது.

அனேக நாடுகள் ஒழுக்க உரிமையை அடையாளங்கண்டுள்ளன. ஆயினும் அவற்றின் வீச்செல்லையும் அடக்கப்பட்ட உரிமைகளும் நாட்டிற்கு நாடு வேறுபடும். அனேக நாடுகள் பின்வரும் இரு வகையினையாவது ஏற்றுக் கொண்டுள்ளன.

- **தனது படைப்பின் ஆக்கியோனாக பெயர் சூட்டப்பட:** தனது படைப்பின் ஆக்கியோனாக பெயர் சூட்டப்படும் உரிமை. (ஆக்கியோனின் உரிமை அல்லது ஆக்க உரிமை) ஒரு ஆக்கியோனின் படைப்பை பிதிகள் எடுத்தோ, அச்சேற் றியோ, எவ்வகையிலாகிலும் பொது மக்களுக்களுக்கு தொடர்வுபடுத்தினால் அல்லது பகிரங்கப்படுத்தினால் ஆக்கியோனின் பெயரை அவ்வேளையில் பகிரங்கமாக தெரிவிக்கவேண்டும்.
- அப்படைப்பின் **சீரிய உருகுலையா நிலையினை உறுதிசெய்யும்** உரிமைக்கூடாக எம்மாற்றமும் செய்து ஆக்கியோனுக்கு அபகீர்த்தி உண்டாக்குதலை தடுக்கின்றது.

பொருளாதார உரிமைகள் போன்றல்லாது ஒழுக்க உரிமைகள் ஆக்கியோனுடைய தனிப்பட்ட உரிமையாதலால் அவற்றை **வேறொரு வருக்கு பரிமாற்ற முடியாது** (ஆக்கியோனின் சந்ததியாருக்கு அவரின் பின் செல்லும்). பொருளாதார உரிமை வேறு ஒருவருக்கு மாற்றமா னாலும் ஒழுக்க உரிமை ஆக்கியோனுடனேயே தங்கும். ஆயினும் ஒருசில நாடுகளில் **எழுத்து மூல ஒப்பந்தமூலம் தனது உரிமையை தள்ளிவைக்கலாம்.** அதன்படி அவனோ அவளோ தனது சில அல்லது எல்லா உரிமை களையும் பாவிப்பதில்லை என தள்ளி வைக்கலாம்.

மிகச்சில ஆனால் அதிகரித்து வரும் நாடுகளில் நாடக நாட்டிய கலைஞருக்கும் ஒழுக்க உரிமையினை வழங்கியுள்ளன. ஓர் ஒலிபதிவு செய்யப்பட்ட நிகழச்சியின் பொருளாதார உரிமை மாற்றப்பட்ட போதும் அந்நடிகர்களின் ஒழுக்க உரிமை நிலையாயி ருக்கும். பின்வரும் உரிமைகளை உள்ளடக்கு கின்றன.

- நிகழ்ச்சியின் பாவிப்பை பொருத்து தானே நடித்துள்ளதாக காணப்பட வேண்டிய உரிமை.
- ஏதாகிலும் மாறுபாடுகள்போன்ற காரணி களை காணுமிடத்து அதை கண்டிக்கும் உரிமையும் மறுசீரமைத் தல் மூலம் மூல செயற்பாட்டிற்கு தப்பபிப்பிராயம் ஏற்படுத்தி ஆக்கியோனுக்கு அபகீர்த்தி உண்டாக்கு தலை தடுத்தலும்

இணைந்த உரிமைகள் எவ்வெவ் உரிமைகளை தருகின்றன?

கலைஞர்கள் (உ+ம். நடிகர்கள், இசைய மைப்பாளர்கள், நடனகலைஞர்கள்) ஒரு நிகழ்ச்சியினை எவ்வகை ஊடக (தொடர் பாடல், கேபல் அல்லது ரேடியோ மூலம் ஒலிபரப்பல், மற்றும வகைகள்) மூலம் பதிவுசெய்ய அனுமதிக்கவோ தடுக்கவோ அல்லது அவற்றை மறு பிரதிகள் எடுப்பதை தடுக்கவோ உரித்துள்ளவர்களாவர். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கலைஞர்களின் நிகழ்ச்சியின் ஒலி ஒளிப்பதிவுகளை வாடகைக்குவிட அல்லது இரவல் கொடுக்க அனுமதிக்கவோ தடுக்கவோ கலைஞர் களுக்கு உரிமை அளித்துள்ளன.

அனேக நாடுகளில் ஒரு ஒலிப்பதிவு நிகழ்ச்சி யை ஒலிபரப்பப்பட அல்லது பொதுத்தொடர் பாடலுக்கு பாவிக்கப்பட அதன் கலைஞர் களுக்கு, உற்பத்தியாளர்களுக்கு அல்லது இருவருக்கும் ஒரே முறை உரிமைப்பங்கு கொடுப்பனவு செய்யும் முறை உள்ளது.

அனேகமான நாடுகளில் ஒரு கலைஞரின் உரிமைகள் பகுதியாகவோ அல்லது முழுமை யாகவோ மாற்றக் கூடிய தாகவுள்ளது. அப்படி தனது உரிமையை மாற்றிக்கொடுத்தாலும் தேசிய சட்டங்களுக்கமைய புதிதாக உருவாக்க, விற்பனை செய்ய, விநியோகம் செய்ய, அல்லது நாட்டிற்குள் கள்ளத்தனமாக உருவாக்கப்பட்ட பதிப்புக்களை இறக்குமதி செய்ய தடைசெய்ய இயலும்.

இசைத்தட்டு உற்பத்தியாளர்கள். இசைத்தட்டு உற்பத்தியாளருக்கு அவற்றை பிரதிசெய்ய, பாவிக்க, அல்லது விற்பனை செய்ய அனுமதியளிக்கவோ தடைசெய்யவோ பூர்ண உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதிலும் முக்கிய உரிமைதான் தனது உற்பத்தியின் அளவை கட்டுப்படுத்தலாகும். அடுத்த உரிமை இசைத் தட்டுக்கள் ஒலிபரப்பப்படும் போது நியாயமான சன்மானத்தை பெற்றுக்கொடுத்தல்: மக்களுக்கு பெறக்கூடியதாக செய்தல், அல்லது மக்களோடு தொடர்புகள் ஏற்படத்துவது ஆகும். சில நாடுகளில் உற்பத்தியாளருக்கு தமது நகழ்ச்சி ஒலிப்பதிவுகளை இறக்குமதி செய்யவும் விநியோகிக்கவும் தடுக்கலாம். இன்னும் சில நாடுகளில் தாங்கள் உரிமை கொண்டுள்ள ஒலிப்பதிவுகள் மக்களுக்கா நிறைவெற்றப்படும் போது வரமானத்தில் ½ பங்கினை பெற்றுக்கொள்ள உரிமை அளிக்கின்றது.

இசைத்தட்டு உற்பத்தியாளரின் உரிமைகள்

இசைத்தட்டு உற்பத்தியாளர்கள் அனேகமான நாடுகளில் தமது இசைத்தட்டை ஒலிபரப்புவதை தடுக்க இயலாது. இதற்கான பங்குவீத உரிமையினை மட்டுமே பெற உரித்து டையராவர்

அவ்வுரிமையை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளில் ஒரு ஒலிபரப்பு தாபனம் ஒரு கட்டணத்தை இசைத்தட்டு சங்கீத கலைஞருக்கும் அதன் உற்பத்தியாளருக்கும் ஒலிபரப்பு செய்வதற்காக கொடுக்க வேண்டிய தோடல்லாமல் அதன் கிரயத்தையும் உற்பத்தியாளருக்கு கொடுக்க வேண்டும்.

ஒரு நாடு ரோம் ஒப்பந்தத்தில், WTO (TRIPS உடன்படிக்கை) WIPO திட்டத்தில் அல்லது இசைத்தட்டு ஒப்பந்தத்தில் சேரும் போது அந்நாட்டில் ஒலி பரப்பிற் காக உரிமைப்பங்கு (royalty) இசைத்தட்டு உற்பத்தியாளருக்கு கொடுக்க தேவையில்லை.

ஒலிபரபாளர்கள் தமது கம்பியில்லா தொடர்பாடல் மேல் (மறு ஒலிபரப்பு உட்பட) ஒரு சிக்னலை நிச்சயிக்க திரும்பவும் அவர்களின் அனுமதியின்றி நிலை நிறுத்தும் பிரத்தியேக உரிமை கொண்டுள்ளனர்.

சில நாடுகளில் ஒலிபரப்பாளர்களுக்கு ஒரு ஒலிபரப்பு நிகழ்ச்சியை வாடிக்கையாளரின் தொலைபேசியில் அல்லது இணைய தொடர்பு மூலம் கோரப்படும் நேரடியான விருப்புகளுக் கமைய நிலை நிறுத்த அல்லது தடுக்க உரிமையுள்ளது. அனேகநாடுகள் இணைய ஒலி ஒளி சேவைகளை தற்போதுள்ள பதிப்புரிமை சட்டத்தில் ஒலிபரப்பு சேவைகளாக கொள்வதில்லை. சில நாடுகளில் ஒலிபரப்பாளர் களுக்கு தமது ஒலிப்பதிவுகளை கேபல் ஒலிபரம்பல்கள் பாவிப்பதை அனுமதிக்க அல்லது தடுக்க உரிமையுண்டு. வேறு சில நாடுகளில் பேல் ஒலி ஒளிபரப்பாளர்கள் எவ்வித கட்டணமு மின்றி ஒலிபரப்பப்பட்ட விடயங்களை மரு ஒலிப்பப்பு செய்யக் கூடிய உரிமையும் உண்டு.



ஒலிபரப்பாளர்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகள் சினமாப்படங்கள், சங்கீதம், மற்றும் ஒலிபரப்பும் விடயங்களில் நின்று வேறுபட்டவை.

அனேக நாடுகளில் ஒரு தொலைகாட்சி நிகழ்ச்சியை கட்டணத்திற்கு பொது மக்க ளுக்கு காட்சிப் படுத்தலை தடுக்கும் உரிமை தொலைகாட்சி ஒலி ஒளி பரப்பாளருக்குண்டு.

கேபல் மறு ஒலி ஒளிபரப்பலை அனுமதிக்க அல்லது மறுக்கும் அதிகாரமானது ஒலிபரப்பு தாபனங்களுக்கூடாக நடைமுறை படுத்தப்படா இடத்து, தொகுக்கப்பட்ட முகாமைத்துவ அமைப்பிற் (CMO) கூடாய் பெறப்பட்டுள்ளது (40-ம் பக்கத் தை பார்க்கவும்).

ஒரு நிகழ்ச்சியை உருவாக்கி அதை onlineல் புரண்டோடப்பண்ணும் போது, இது அதிகம் வளர்ந்து வரும் ஒரு பிரிவாதலால் அந்நாட்டின் பதிப்பரிமை நிபுணர் ஒருவரின் ஆலொசனையை பெறுதல் உசிதமானது.

இணை உரிமைகளின் நடவடிக்கைகள் எந் நிகழ்ச்சி இணையதளத்தில் ஒலிபரப்ப படுவதற்காக நடாத்தாப்பட்டு ஒலிப்பதிவு செய்து பரப்பப்பட்டாலும் அது எவ்விதத்திலும் பதிப்புரிமையை பாதிக்காததாயும் முழுமையா னதாயும் இருக்கும்.

சங்கீதத்திற்கான பதிப்புரிமையும் இணைந்த உரிமைகளும்

ஒரு வியாபார நிலையம் பலத்தரபபட்ட காரணங்களுக்காக சங்கீத்தை பாவிக்கலாம். அது வடிக்கையாளரை கவரவோ, அவர்களின் நடவடிக்கையை உடன்பாடான நிலைக்கு கொண்டுவரவோ அல்லது ஊழியர்களுக்காகவோ சங்கீதத்தை பாவிக்கலாம். சிலவேளைகளில் போட்டியாளர்களை விட தமது வியாபாரம் முன்னேற்றகரமானதாக அமைய உதவுவதோடு தமது ஊழியர்கள் சிறந்த சூழலில் வேலை செய்யவும், தமக்கென்று நம்பிக்கையான வாடிக்கையாளர்களையும், தமது சின்னத்தினை அல்லது தாபனத்தை பொது மக்கள் அறியவும் உதவும்.

அனுமதியளிக்கப்பட்ட பொது நிகழ்ச்சியானது தொலை காட்சி தாபனங்கள், பிராந்திய தொலைகாட்சி மற்றும் ரேடியோ நிலையங்கள், கேபிள் மற்றும் செயற்கைக்கோள் முறைகள், கல்லூரிகள், சர்வகலாசாலைகள், இராகளியாட்ட நிலைகள், உண்டிசாலைகள், பின்னணி சங்கீதசேவைகள், உடலாரோக்கிய நிலையங்கள், விடுதிகள், வியாபார கண்காட்சிகள், கொள்கை பரப்புபவர்கள், வியாபார நிலையங்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், விமான தாபனங்கள், தொலைபேசி அழைப்பு சப்தங்கள் (ring tones) உட்பட்ட கைத்தொழில்தாபனங்கள் என்பன அடங்கும்.

சங்கீகத்திற்கான பதிப்புரிமை மற்றும் இணையுரிமைகள் பலபடைகளையும் வீச்சுக்களையும் கொண்டுள்ளதோடு உரிமையாளர்கள்/ பாடகர்கள், பாடலாசிரியர்கள், விளையாட்டு நிலை விபரஅறிவிப்பாளர்கள், புள்ளிவிபர தாபனங்கள், ஒலிபரப்பாளர்கள், இணையத்தள உரிமையாளர்கள், நிர்வாகிகள், பதிப்புரிமை தொகுத்தல் சங்கங்கள் உட்பட்ட நிர்வாகிகள் அனுபவிக்கும் விஸ்தீரமான உரிமைகளையும் கொண்டுள்ளது.



பாடலும் சங்கீதமும் இரு வேறுநபர்களால் ஆக்கப்பட்டிருந்தால் ஒரு இலக்கிய வேலையும் ஒரு சங்கீத வேலையும் கொண்ட இருவகை வேலைப்பாடுடைய தென தேசிய சட்டம் கொள்ளும். ஆயினும் ஒலிபரப்பிற்காக தொகுக்கப் பட்ட முகாமைத்துவ அமைப்பில் (CMO) ஒரு அனுமதியினை பெற்றுக்கொள்ளலாம். (பக்கம் 40 ஐ பார்க்கவும்)

சங்கீத வெளியிடல் உரிமையானது அதனை நிறைவேற்ற, பிரதிபண்ண, அத னை புதிய/வேறொரு ஒரு நிகழ்ச்சியில் பாவிப்பதற்கான உரிமைகளை உள்ளடக்கும். வியாபார சுரண்டலை எளிதாக்க அனேகமான பாடலாசிரியர்கள் பதிப்பாளர் களுக்கு பதிப்புரிமையும் அதை நிர்வாகிக்கும் உரிமையையும் மாற்றிவிடுவர்.

தற்காலத்தில் செல்லிட தொலைபே சிகளில் சங்கீத மூலமான அழைப்பு

ஒலியை ஏற்படுத்தி பாவிப்பது அதிகரித்துள்ளது. இது வினோத மானதும் தொபேசியை தமக்கு மட்டும் உரியதாக மாற்றுகின்றது. முன்னர் எதிர் பார்த்ததையும் விட தாலைபேசி அழைப்பு ஓசைகள் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று அனேகரால்



சங்கீதம் சம்பந்தமாக உள்ள உரிமைகளில் செய்கை உரிமை அச்சடிக்கும் உரிமை இயந்திர உரிமை நேரத்தில் ஒத்திருக்கும் உரிமைகள் அடங்கும். இவைகள் சுருக்கமாக கீழே விளங்கப்படுத்தப்பட்டுள்ளது

பொது மக்களுக்காக செய்கை உரிமையானது பாடல் எழுதுபவர்களுக்கு இலாபகரமான வருவானை கொடுக்கும் மூலமாகும். சில நாடுகளில் ஒலிபதிவில் பொது சனத்துக்கு செய்கை உரிமை கிடைப்பதில்லை. ஆனால் டிஜிட்டல் கேள்வி அனுப்புதலுக்கு மாத்திரம் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் ழெனபைவையட ஒலிப்பதிவை செய்வதற்கு அனுமதி பத்திரம் தேவைப்படுவதில்லை.



ஆனால் ஒலிப்பதிவில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அடிப்படையான பாட்டுக்கு தேவை தனிபாட்டு அல்லது பல பாடல்கள் அல்லது சங்கீததாள் பிரதிகளை அச்சிட்டு விற்பனை செய்வது அச்சிடும் உரிமை (Print right) இது பிரசுரிப்பவரால் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஒலிப்பதிவு செய்து பிரதி எடுத்து தனிபிரசுரிப்பு உரிமையுள்ள சங்கீதங்களை (ஒலிநாடா CD ஒலிப்பதிவு செய்து பொருத்தப்பட்ட ஏதாவது பொருட்கள் சலனப்படம் ஒலிஒளி பொருட்கள் தவிர்ந்த இது Mechanical உரிமை எனப்படும்.

இதை உபயோகிப்பவர்களுடைய இயந்திரவல்லமையை பயன்படுத்த அளிக்கும் அனுமதி பத்திரம் Mechanical Licence என்று அழைக்கப்படும்.

ஒரே சமயத்தில் சங்கீத தொகுப்பு சலனப்படம் தொலைக்காட்சி நிகழ்ச்சி வர்த்தக அல்லது வீடியோ தயாரிப்பு செய்யும் உரிமையை Synchronization (Synch) உரிமை எனப்படும்.

ஒரு ஒலி, ஒளி பதிவு செய்து பொருத்த அனுமதிப்பத்திரம் தேவை ஒரு குறிப்பிட்ட சங்கீதத்தை ஒலி ஒளி வேளையில் ஒன்று சேர்க்க இந்த அனுமதி தேவைப்படுகிறது.

இந்த அனுமதி தொலைக்காட்சி தயாரிப்பாளரால் இயற்றுபவர் இசையமைப்பாளர் அல்லது பிரசுரிப்பாளரை நேரடி தொடர்பு கொண்டு பெறப்படுகிறது. ஒலிஒளி பதிவுக்கு சங்கீதம் உபயோகிப்பதற்கு இயற்றுபவரிடமிருந்து அனுமதி

முதன்முதல் தயாரிக்கப்பட்டு பதிவாகிய மூல பதிவான ஒலிப்பதிவை **மாஸ்டர் ரெகோர்டிங்** அல்லது ரெகோடிங் (மூலப்பதிவு) என்று கூறுவர். இம்மூலப்பதிவிலிருந்தே பொது விநியோகத்திற்கான பிரதிகள் ஒலிநாடா உருவிலோ இருவட்டுக்களாகவோ பெறப்பட்டு மக்களுக்கு பாவனைக்கு விடப்படுகின்றன. ஒரு கலைஞனால் உருவாக்கப்பட்ட சங்கீத தொகுப்பை இவ்விதம் மறு ஒலிப்பதிவு செய்து விற்பனை செய்ய தேவையான உரிமைதான் மாஸ்டர் ரெகோடிங் உரிமை அல்லது மாஸ்டர் பாவனை உரிமையாகும்.

தற்காலத்தில் செல்லிட தொலைபேசிகளில் சங்கீத மூலமான அழைப்பு ஒலியை ஏற்படுத்தி



பாவிப்பது அதிகரித்துள்ளது. இது வினோதமானதும் தொலைபேசியை தமக்கு மட்டும் உரியதாக மாற்றுகின்றது. முன்னர் எதிர் பார்த்ததையும்விட தொலைபேசி அழைப்பு ஓசைகள் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று



நோக்கியாவின் அனுமதியுடன்

அனேகரால் விருப்பத்துடன் பாவிக்கப்படுவதோடு சங்கீதத்தின் புதியபாவனை வகையாக மாறியுள்ளதுடன் கட்டணம் செலுத்தி பெறப்படும் செல்லிட சேவைகளில் முன்னணியிலுள்ளது. அழைப்பு ஓசைகள் SMS அல்லவது WAP மூலமாக அனுப்பப் படும் இருமுனை சங்கேத பாயையாகும். தொலைபேசி அழைப போசைக்கான லைசன்ஸ் அனுமதிப்பத்திரம் மொனோ மற்றும் பொளி போனிக் ஒலிகளை இயற்றவும் விநியோகித்தலுக்கான அனுமதியை தருகின்றது.

டிஜிட்டல் உரிமை முகாமைத்துவ (Digital Rights Management/DRM**) சாதனங்களும் முறைகளும்** இணைய மூலம் சங்கீத விற்பனையையும் கொள்ளையை தடுக்கவும் உதவுகின்றது. பதிப்புரிமை பெற்றவருக்கு Apple's Fair Play மற்றும் MicroSoft Widows Mediaக்கள் பதிப்புரிமை பெற்றவர் நட்டஈடு பெறும் விதத்தில் பிரதியெடுத்தலை டிஜிட்டல் முறையில் தடுக்கின்றன.

பதிப்புரிமை மற்றும் இணைந்த உரிமைகளின் பாதுகாப்பு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்?

அனேமான நாடுகளில் அதிகமான செயற்பாடு களுக்கான பொருளாதார உரிமைகள் ஆக்கியோனின் ஜீவிய காலமடடுமல்லாது மேலும் ஒரு 50 வருடங்களுக்கு நீடிக்கும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வேறு அனேக நாடுகளிலும் இக்கால எல்லை ஆக்கியோனுடைய ஜீவிய காலத்தின் பின் 70 வருடங்கள் இப்பாதுகாப்பு நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆக்கியோனும் அவரின் உரித்தாளர்களும் பயனடைவர். பலர் இணைந்து படைத்திருந்தால் கடைசியாக உயிரிழந்த ஆக்கியோனின் இறப்பிலிருந்தே கால எல்லை அளவிடப்படுகின்றது. பதிப்புரிமை பாதுகாப்பு முடிவடைந்தபின் பொதுவுடமையாக கொள்ளப்படும்.

தேசிய சட்டதிட்டங்களுகமைய சிற்சில செயற்பாடுகளுக்கு விசேட சட்ட உடன் பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. முக்கியமாக:

- ஊழியர்களால் அல்லது கிரயத் திற்காக வேலை செய்யப்பட்டி ருந்தால் அதன் காலஎல்லை அச்சிடப்பட்ட காலத்திலி ருந்து 95 வருடங்காக அல்லது அதன் படைப்பிலிருந்து 125 வருடங்கள்.
- இணை ஆக்கியோர்களின் செயற்பாடுகள்.
- சினிமா படத்தொழில்.
- அனாமதேய அல்லது புனைபெயரில் எழுதப்பட்ட ஆக்கங்கள்.
- புகைப்படங்கள், மற்றும் பிரயோ க சித்திரங்கள்(சில வேளைகளில் இவற்றி ற்கு குறுகிய பாதுகாப்பே உள்ளன).
- அரசால் உருவகம் பெற்ற செயல்கள்(சில/ எல்லாம் பதிப்புரமை பெறாது).
- ஆக்கியோன் இறந்தபின் அச்சேற்றம் பெற்ற படைப்புகள்
- அச்சுக்கலை ஒப்பந்தங்கள்

நியாய உரிமைகளின் பாதுகாப்பு நாட்டிற்கு நாடு வேறுபடும். சில நாடுகளில் நிரந்தரமான தாகவும் மற்றைய நாடுகளில் ஆக்கியோனு டைய இறப்பின்போதோ பொருளாதார உரிமை காலாவதியாகையிலோ முடிவடையலாம்.

இணைஉரிமைகளின் காலஎல்லை பதிப்புரிமை யை விட குறைவானதாகும். சிலநாடுகளில் பதிவுசெய்த அல்லது ஒலிபரப்பிய அல்லது மேடையேற்றப்பட்ட வருடத்தில் இருந்து பாதுகாப்பு தருகின்றது. மற்றைய நாடுகள் 50 வருட பாதுகாப்பு அளிக்கின்றன.



சில நாடுகளில் புகைப்படங்களுக்கு வெளியிட்ட திகதியிலிருந்து 5 முதல் 15 வருடங்களுக்கே பாதுகாப்பளிக்கின்றன. லீன் வுவேட் தானபத்தின் உபகாரம்

3. உங்கள் மூலபடைப்புகளை பாதுகாத்தல்

பதிப்புரிமை மற்றும் இணைந்த உரிமைகளை பெற என்ன செய்ய வேண்டும்?

புதிப்புரிமையும் அதனோடிணைந்த உரிமை களையும் எவ்விதமான உத்தியோகபூர்வ நடவடிக்கையுமின்றி பெற்றுக்கொள்ள இயலும். ஒரு ஆக்கம் அது உருவானவுடன் எவ்வித பதிவுகள், வைப்புப்பணம், கட்டணம் அல்லது எவ்வித உத்தியோகபூர்வ செயற்பாடுகளும் இன்றி தன்னிச்சையாக பாதுகாப்பை பெறுகின்றது. சிலநாடுகள் மட்டும் ஏதாகிலும் உறுதியான நிலையில் அதனை கோருகின்றன. (மேலே 12ம் பக்கத்தை பார்க்கவும்)

நீங்கள பதிப்புரிமையின் உரிமை யாளர் என எவ்வாறு ஒப்புவிப்பீர்?

ஏவ்வித உத்தியோகபூர்வ செயற்பாடும் அற்ற பாதுகாப்பு முறையில் பிரச்சினைகள் ஏற்படும் போது உங்கள் உரிமையை நிலைநாட்ட சில க்டங்கள் எழலாம். எவராவது எழுந்து தன்னுடைய ஆக்கத்தை நீங்கள்தான் பிரதி செய்துள்ளீர்கள என்று வாதிட்டால் நீங்களே உண்மையான மூல படைப்பாளி என்று நிரூபிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறிப்பிட்ட காலத்தில் சாட்சியங்களை ஏற்படுத்துதல் அவசியம். உதாரணத்திற்கு:

- சிலநாடுகளில் தேசிய **பதிப்புரிமை காரியாலங்கள்** உங்கள் படைப்புக்களை கட்டணம் அற விட்டு பாதிகின்றன. (சில தேசிய பதிப்புரிமை காரியாலயங்களின் இணையதள விலாசங்களை பின்னிணைப்பு II ல் பார்க்கவும்) அப்படி செய்யுமிடத்து

பலதர ஊடக வெளியீடுகளுக்கான பதிப்புரிமை பாதுகாப்பு

பலதரப்பட்ட வேலைபாடுகளை (multimedia) ஊடக வெளியீடுகள் ஒரு கணினி இறுவட்டு அல்லது CD-ரொம் போன்ற ஒரு ஒன்றிணைந்த கிரிகைக்கூடாக இணைத்துள்ளன. இதற்கு வீடியோ விளையாட்டுக்கள், புதினப்பத்திரி கைகள், இணைய பக்கங்களையும் உதாரண மாக எடுக்கலாம். சங்கீதம், மூலவிடயங்கள், புகைப்படங்கள், கத்தரித்த சிறு படங்கள், கிரபிக்ஸ், மென்பொருள் மற்றும் வீடியோ



போன்ற காரணிகள் இணைந்தே ஊடக வெளியீடொன்றை வெளியிடுகின்றன. ஒவ்வொரு பிரிவும் தனக்குரிய பதிப்புரிமையை பெற்றுக் கொண்டிருந்தாலும் இணைந்த ஊடக வெளியீ டானது தனித்துவமிக்கது என கருதுமிடத்து வேறான பதிப்புரிமையை கொண்டிருக்கும்.

விசேட பதிப்புரிமை பாதுகாப்பைக் கொண்டிருக்கும். தேசிய பதிப்புரிமை காரியாலயத்தில் பதியப்பட்டிருப்பின் அத்து மீறுவோருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் இலகுவாக இருக்கும். அப்படிப் பட்ட நாடுகளில் முன் கூட்டியே பதிவு செய்தல் நல்ல ஆலோசனையாகும்.

- உங்கள படைப்பின் ஒரு பிரதியி னை **வங்கியில் அல்லது சட்டதரணியிடம்** பாதுகாக்க வைத்தல் மற்றுமொரு வழியாகும். இதற்கு மாற்றீடாக உங்கள் படைப்பின் பிரதியொன்றை விசேட முத்திரையிடப்பட்ட தபாலில் உங்களுக்கு ஒரு பிரதியை அனுப்பலாம். (இதனால்கடித உறையில் திகதி முத்திரை வடிவாக பதியப்பட்டிருக்கும்) எல்லா நாடுகளும் இந்த முறையை ஏற்றுக் கொள்வதில்லை
- பிரசுரிக்கப்படும் படைப்புக்கள் **பதிப்புரிமை அறிவித்தலைக்** கொண்டிருக்க வேண்டும். (29- ம் பக்கத்தை பார்க்கவும்)
- உங்கள் படைப்பை **விசேட குறியீடு இலக்கங்களைக்** கொண்டு அடையா ளப்படுத்துதல். உ-ம்: ஒலிபடைப்புகளு க்கான சர்வதேச நியமப்பதிவு (ISWC) அச்சேற்றப்பட்ட சங்கீத நியமப்பதிவு (ISMN) சர்வதேச சங்கீத செயற்பாட்டிற் கான நியமப்பதிவு (ISWC), சர்வதேச ஒளிஒலி கட்டுப்பாடு (ISAN) என்ற ஒருங்கிணைந்த முகாமைத்துவ சங்கங்க ளினால் கட்டுப்படுத்தபடுகின்றது.

இலத்திரானியல் அல்லது டிஜிட்டல் படைப்புகளைஎவ்விதம் பாதுகாப்பது?

இலத்திரானியல் அல்லது டிஜிட்டல் முறையிலான படைப்புகள் (உ-ம். இருவட்டுக்கள், DVDக்கள், இணையத்தள கட்டுரைகள், சங்கீதம் மற்றும் சலனப் படங்கள் போன்றவை) சட்டவிரோத பிரதியெடுக்கவோ வேறு நபருக்கு இணைய மூலம் எவ்வித வேறுபாடும் இன்றி அனுப்பவோ இடமுள்ளது. மேலே வெளிப்படுத்தப்பட்ட தேசிய பதிப்புரிமை காரியாலயத்தில் பதிவுசெய்தல் அல்லது வைப்பில் வைத்தல் போன்ற காரணிகள், இவற்றிற்கும் செல்லுபடியாகும்.

புதிப்புரிமை பாதுகாப்பு பெற்ற செயற்பாடுகளின் ஒன்லைன் வியாபாரமானது மவுஸ்கிளிக் தொடரபினால் பாவனை யாளரின் செயற்பாடுகளுக்கு ஒரு வரையறையை கொண்டு வருகின்றது. இதன்மூலம் ஒருவர் மாத்திரம் அதை பெறவும் பாவிக்கவும் உரிமை பெறுகின்றார். மறுவிநியோகமும் மறுபடி பாவித்தலும் தடுக்கப்பட்டுள்ளது.

அநேக வியாபார தாபனங்கள் இதற்கு மேலாக பலதரப்பட்ட தொழில்நுட்ப முறைகளையும் மேற்கொள் கின்றன. இவற்றை நாம் டிஜிட்டல் உரிமைகள் முகாமைத்துவ (DRM) செற்பாடுகளும் முறைகளும் என்கின்றோம். இதன் மூலம் அதன் ஜீவிய காலமட்டும் அதை தேடவும், மறுபாவனைக்கு லைசன்ஸ் பெறவும் வழி உண்டாக்குகின்றது.

டிஜிட்டல் உரிமைகள் முகாமைத்துவ (DRM) செற்பாடுகளும் முறைகளும் டிஜிட்டல் ஆக்கங்களை இரு வழிகளில கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகின்றது.

- பதிப்புரிமை பாதுகாப்பு பற்றிய அறிவுறுத் தல், உரிமையாளரின் பெயர் ஏன்பவற்றோடு வெளிவருபவற்றை **உரிமை முகாமைத்துவ அறிவிப்பு**
- **தொழில்நுட்ப பாதுகாப்பு நடவடிக்கைகள்** (TPMs) மூலம் பாவனையை அனுமதிக்க/ மறுக்ககூடிய மட்டுப்படுத்தும உரிமை பெறு கின்றனர். TPMs மற்றைய பதிப்புரிமைக ளுடன் சம்பந்தப்படுத்தும் போது பாவனை யாளர் பார்க்கும், கேட்கும், மாற்றும், மறுபதிப்பு செய்யும், மேற்கோள் காட்டும், மொழிபெயர்க்கும், குறிப்பிட்ட காலத்துக்கு வைத்திருக்கும், மற்றவருக்கனுப்பும், பிரதி யெடுக்கும் ,அச்சேற்றும் போன்ற அம்சங்க ளை உள்ளடக்கும். TPMs அதே வேளை இரகசியதன்மை, பாதுகாப்பு பொருளடக்கம் என்பவற்றை உறுதிப்படுத்துகின்றது

.

சரியான டிஜிட்டல் உரிமைகள் முகாமைத்துவ (DRM) செயற்பாடுகளை தெரிவதெப்படி?

DRM செயற்பாடுகளின் மூலம் முறையற்ற தலையீடுகளை தடுப்பதற்கு பல தொழில்நுட்ப முறைகளுண்டு. ஒவ்வொன்று க்கும் அதற்கென்ற பலயவீனமும் பலமும் சிறப்புத்தனமை யுமுண்டு. உங்களுடைய வேலைக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை பொருத்தே எந்த வகையினை தெரிய வேண்டும் என தீர்மானிக்கப்படும்.

உரிமை முகாமைத்துவ தகவல்

பதிப்புரிமையின் பூர்ணத்துவத்தை அறிய பலவழிகளுண்டு.

- உங்கள் படைப்பை பதிப்புரிமை பெற்றது என்று குறிப்பிட்டோ அல்லது 'வியாபார நோக்கல்லாத பிரதி செய்ய மட்டும்' போன்ற ஒரு **லேபலை** ஒட்டியோ மற்றும். உங்கள் வியாபார இணையத்தள பக்கங்கள் ஒவ்வொன்றிலும் என்னென்ன பாதிப்புரிமை பெற்றது என்று அச்சிடபட்டோ நல்லதொரு பாதுகாப்பை பெறலாம்.
- **டிஜிட்டல் இரக்கை அறிபவர்** (DOI) டிஜிட்டல் முறையான லைகளில் பதிப்புரிமை பெற்ற வற்றை கண்டறியும். இவை தற் போதைய நிலமைபற்றியும் இணையத்தில் எங்கு இதைக் காணலாம் என்றும் எடுத்துக் காட்டும்.டிஜிட்டல் வேலைகள் இணையத்தில் பெறும் இடங்கள் மாற்றமடையலாம். ஆனாலும் DOI தளம் மாற்றமடையாது.

- **டிஜிட்டல் ஆக்கங்களுடன் நாட்காட்டி முத்திரை** ஒன்று அது எத்தகையது எனவும் எப்போது உருவாப்படுத்தப்பட்டது எனவும் இணைக்கப் பட்டிருக்கும். ஏதாகி லும் சட்டபூர்வமற்ற ஆக்கிரமிப்பு நடைபெறின் நேரம் முக்கியமானது ஒரு மின்னஞ்சல் அனுப்பும் போதும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தபடும் போதும் எப்போது உருவகம் கொண்டது/ மாற்றப்பட்டது அல்லது எப்போது டிஜிட்டல் சாட்சி எடுக்கப்பட்டது என்பன பதிப்புரிமையை உறுதிபடுத்த முக்கிய தடயமாகும்.

- டிஜிட்டல் செயற்பாடுகளில் பதிப்புரிமை செய்தியை **டிஜிட்டல் நீர்க்கோடுகள்** மூலம் பதியப்படுகின்றது. புகைப்படத்தின் ஓரத்தில் பதியப்படும் செய்தியைப் போல டிஜிட்டல் நீர்க்கோடுகள் கற்புலனுக்கு நன்கு தெரியக்கூடியதாக இருக்கும். அல்லது ஆவணத்தின் எல்லா இடங்களிலேயும் பதியப்பட்டிருக்கும் அனேக மாக அது சாதாரண பாவிப்பிற்கு இடையூரில்லாது எங்கும் பதியப்பட்டிருக்கும். வெளிப்படையான பதிவுகள் அதிகாரமற்ற செயற்பாடுகளை தடுக்கும் வேளை கற்புலனற்ற நீர்க்கோடுகள களவெடுத்த கிரிகையையும் பதிப்புரிமைபெற்ற செயற்பாட்டின் ஒன்லைன் தேடலுக்கும் உதவும்.

தொழில் நுட்ப பாதுகாப்பு நடவடிக்கைகள் (TPMs)

சில வியாபார தாபனங்கள் தொழில்நுட்பத்தின் மூலம் தங்கள் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்ட வாடிக்கையாளர்கள் மாத்திரம் தங்கள் செயற் பாடுகளை பாவிக்க விரும்புகின்றனர். அப்படிப பட்ட செயற்பாடுகள் பின்வருவனவற்றை கொண்டிருக்கலாம்.

- **இரகசிய நிலவறையில் வைக்கும் முறை** (encryption) மூலம் தமது ஒலிப்பதிவுகள், ஒலி ஒளி செயற்பாடுகளை கொண்ட மென்பொருளை அனேகமாக பாதுகாக்கின் றனர். DRM மென்பொருளானது ஒரு பதிப்புரிமை மற்றும் இணைந்த உரிமைகளை வெளிக்கொணருமிடமான பரிபாலிக்கும் சங்கத்தினிடம் அழைத்துச் சென்று கட்டணம் செலுத்தியதும், தனிப்பட்ட திறவுகோளொன்றை -இரகசிய பாயை (password)- கொடுத்து செயற்பாட்

கவனமாக TPMsசை பாவிக்கவும்

டிஜிட்டல் செயற்பாடுகளை கொண்டுள்ள வியாபாரங்கள் தங்கள் செயற்பாட்டினை பிரதி பண்ணுதலை யும் விநியோகத்தையும் தடுக்க வீஆள சை பாவக்க எண்ணலாம். TPMsசை பாவிப்பது மற்றைய செயற்பாடுகளை மீறுவதாக அமை யக்கூடாது. உதாரணத்திற்கு அவை ஏகாந்த இரகசியம் சார்பான சட்டம், வாடிக்கையாளர் பாதுகாப்பு சட்டம், போட்டி களுக்கெதிரதன சட்டங்கள் போன்றவற்றை மீறக்கூடாது.

மற்றவர்களுடைய டிஜிட்டல் செயற்பாடுகளை பாவிக்கும் வியாபாரங்ககள் (பாதுகாக்கப்பட்ட செயற்பாடொன்றை வெளிபடுத்தும் அனுமதி உட்பட) எல்லா வகையான லைசன்ஸ்களையும் அல்லது அனுமதிகளையும் அவ் வியாபாரத்தி ற்கு பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கப் படுகின்றது. நிலவறையில் இரசியமாக பாதுகாக்கப்பட்ட செதியை வெளியிடும் ஒருவர் ஏமாற்றுதலுக் கெதிரான சட்டத்தை மீறுவதோடு பதிப்புரிமை யை மீறிய குற்றத்திற்கு ஆளாவார். (49-ம் பக்கத்தை பார்க்கவும்)

டினை பார்க்க, செவிமடுக்க உதவும்.

- **உள்ளீடும் கட்டுப்பாடு அல்லது நிபந்தனை யுடன் கூடிய உள்ளீடும் முறையின் மூலம்** அதன் எளிமையான நிலையில் ஒரு குறிப்பிட்ட வேலையில் பாவனை யாளரையும் உள்ளடக்க கோவைகளையும் வாசித்தல், மாற்றுதல், நடைமுறைபடுத்தல் போன்ற சலுகைகளையும் சோதித்தறியும். ஒரு டிஜிட்டல் தொழிற்பாட்டின் உரிமையா ளர் உள்ளீடும் முறையை பலதரப்பட்ட முறைகளில் உருவாக்கலாம். உதாரணத் திற்கு ஆவணமொன்றை அச்சிட்டு பிரதி செய்யமுடியாது பார்வையிட மாத்திரம் அல்லது குறிப்பிட்ட காலத்தரிற்கு மாத்திரம் பாவிக்க அனுமதிக்கலாம்.
- **குறைந்த தரத்திலான பிரதிகளை வெளியடல்.** உதாரணத்திற்கு தாபனமொ ன்று புகைப்படங்களையோ, உருவம் ஒன்றையோ தமது இணைய தளத்தில் தேவையான அளவு நுணுக்கங்களுடன் விளம்பரங்கள் போன்றவற்றில் வெளியிட லாம். ஆயினும் அதை வேறு சஞ்சி கைகளில் பிரதிசெய்வதற்கு தேவையான அளவு நுணுக்கங்கள் வெளியிடாது இருக்கலாம்

விடய ஆய்வு - Memory Computation

2001-ம் ஆண்டு Microsoft தாபனம் Office XPia வெளியிட்ட சமயம் உருகுவே நாட்டின் Memory Computation என்ற ஒரு சிறய மென்பொருள் உற்பத்தி யாளரினால் உருவாக்கப்பட்டு தாபனங்கள் பாவிக்கக் கூடியதானதொரு Office XP யில் இணைக்கக்கூடியதாய

Memory conty என்ற கணக்கியல் மென்பொருளை வெளியிட்டது.

இம் memory பாதுகாக்கவும், முகாமைப்படுத்தவும், உரிமைகளை நடைமுறைப்படுத்தவும் எடுக்கவேண்டிய நடைமுறைகளை ஒழுங்குமுறையில் மதிப்பிட்டு நல்ல பொருளாதார பிரதியீட்டை உரிமையாளருக்கு பெற்றுக்கொடுக்கும். ஒவ்வொரு Memory County இருவட்டும் மென்பொருள் பதிப்புரிமை சட்டப்படி பாதுகாக்கப்பட்டது என்ற அறிவித்தலுடன் பாவனையாளர் லைசன்ஸாக வெளிவருவதோடு BACKUP கோவையாகவன்றி பகுதியாகவோ, முழுமை யாகவோ பிரதிசெய்தலை தடுக்கின்றது. Memory தாபனமானது தான் இயங்கும் நாடுகளிலிலுள்ள பதிப்புரிமை காரியால யங்களில் மென்பொருளை பதிவுசெய்துள்ளது.

Memory தாபனம் IP உரிமைகளுக்கு எதிரான ஆக்கிரமிப்புகள் கொள்ளைகள் போன்ற சவால்களை கருத்தில் கொண்டு முதலாவதாக பதிப்புரிமைக்கு சமானமான தொழில்நுட்பங் களை இகுவில் பிரதிசெய்யமுடியாத படி மென்பொருளில் இணைத்துள்ளது. இரண்டாவதாக Memory தாபனம் அதன் விற்பனையின் பின்னராக சேவைகளை விஸ்தரித்தும் புதிய மேம்படுத்தப்பட்ட வெறியீடுகளை தொடர்ச்சியாக வெளியிட்டும் சட்டப்படியான வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பதன்மூலம் கள்ளத்தனமான வெளீடுக ளைவிட மூலபிரதிகளை விரும்புகின்றனர்.

வெளிநாடுகளில் எவ்வகையான பாதுகாப்பு உங்களுக்குள்ளது?

அனேக நாடுகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சர்வதேச நியதிகளில் கைசாத்திட்டுள்ளதால் அப்படிப்பட்ட நியதிகளில் கைச்சாத்திட்டுள்ள நாடொன்றில் பதிப்புரிமை பெற்றால் அந்நியதிகளை ஏற்றுக்கொண்ட மற்றைய நாடுகளில் அவை **தன்னிச்சையாகவே பதிப்புரிமை பாதுகாப்பைப் பெறும்**. இலக்கிய மற்றும் கலைப்படைப்புகளை பாதுகாப்பதற்கான **பர்ணி சர்வதேச ஒப்பந்தமே** இவற்றில் முக்கியமானதாகும் (பின்னிணைப்பு III ஐ பார்க்கவும்). நீங்கள் உங்கள் படைப்பை ஒரு நாட்டில் வெளியிட்டிருந்தால் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள எல்லா நாடுகளிலும் பதிப்புரிமையைப் பெறும்.

எல்லா நாடுகளிலும் அது பதிப்புரிமை பெற்றிருந்தாலும் அந்நாடுகள் ஒவ்வொன்றிலும் உள்ள பதிப்புரிமைகளின் தன்மை வேறுபட்டதாக காணப்படுவதை அவதானிக்கலாம்.

ஒரு செயற்பாட்டின் பதிப்புரிமை பற்றிய அறிவிப்பு அவசியமா?

அனேக நாடுகளில் **பதிப்புரிமை அறிவித்தல்** ஒன்றிருப்பது அவசியமில்லை. ஆயினும் அப்படிப்பட்ட ஒரு அறிவித்தல் நல்ல யோசனையாக இருப்பதுடன் மற்றவர்களுக்கு உங்களது செயற்பாடு பதிப்புரிமை பெற்றது என்பதனை அறியத்தருவதுடன் உங்களது செயல்பாட்டினை பாவிப்பதற்கு அனுமதியினை பெறத்தூண்டும் ஒரு திறமான வினைத்திறனுள்ள பாதுகாப்பான செலவீனமாகும். அதற்கு அப்படி ஒன்றும் கிரயம் ஆகாது. ஆயினும் மற்றவர்கள் தம்மிடத்திற்கு உங்கள் ஆக்கத்தை பிரதி செய்தலை தடுப்பதோடு, அனுமதி பெற்று செயற்பாட்டினை உபயோகிப்பதால் படைப்பாளியை சரியாக இனங்கண்டுகொள்ள உதவுகிறது.

அதேவேளை குறிப்பாக அமெரிக்க நாட்டிலும் வேறுசில நாடுகளின் நியாயத்தளங்களிலும் மூலப்படைப்புடன் பதிப்புரிமை பற்றிய அறிவித்தல் இருப்பதானது அதை மீறுபவர் ஏற்கெனவே இப்படைப்பு பதிப்புரிமை பெற்றது என அறிந்துள்ளதோடு அறிந்தும் அதை மீறினான் என்று ஏற்றுக்கொள்கின்றன. எனவே அங்குள்ள நியாயதளங்கள் அதனை மீறிய நபர் அறிந்தும் வேண்டுமென்றே பதிப்புரிமை சட்டத்தை மீறியதாக கொள்வதோடு வேண்டுமென்றே அனுமதியின்றி பதிப்புரிமை பெற்ற ஒரு செயற்பாட்டை பிரதிபண்ணியுள்ளார் என ஏற்று அதிகூடிய அபராதத்தினை விதிக்கும்.

உங்கள் அறிவித்தலை எவ்விதம் போட வேண்டும் என்ற முறையொன்றில்லை. அது எழுதப்பட்டோ, தட்டச்சிட்டோ, முத்திரை யிட்டோ அல்லது வர்ணந்தீட்டியோ இருக்க லாம். புதிப்புரிமை அறிவித்தலில்:

- புதிப்புரிமைபெற்றது (copyright) அல்லது 'copr' என்ற வார்த்தையோ அல்லது இலச்சனையான © என்றோ
- முதன்முதல் அது அச்சிடப்பட்ட வருடமும்
- பதிப்புரிமை பெற்ற படைப்பாளியின் பெயரும் காணப்படும்.

உதாரணம்:
பதிப்புரிமை 2006, வரையறுக்கப்பட்ட ABC தாபனம். (Copyright 2006 ABC Ltd)

உங்கள் செயற்பாட்டில் மாற்றங்களை கொண்டு வந்திருந்தால் புதுப்பித்த வருடத்தி னையும் அறிவித்து பதிப்புரிமையை புதுப்பித் துக்கொள்ளல் அவசியம். உதாரணம்: "2000, 2002, 2004". இதனால் அச்செயற்பாடு 2000ம் ஆண்டில் ஆக்கம் பெற்று 2002, 2004ம் ஆண்டுகளில் சீரமைக்கப்பட்டுள்ளது என அர்த்தம் கொள்ளும்.

இணையத்தளங்களில் வரும் செயற்பாடுகள் தொடர்ந்து புதிதாக்கப்படுவதினால் இணைய த்தளம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் முதல், வருடங்களை இடைக்கிடை பதிதல் முறை யாகும். உ+ம்: © 1998-2006, ABC Ltd. அத்துடன் என்னென்ன காரியங்கள் அந்த பதிப்புரிமை தடுக்கின்றது என்ற பின்னிணை ப்பு ஒன்றிருத்தல் நல்ல யோசனையாகும்.

பாதுகாக்கப்பட்ட ஒலிப்பதிவுகளுக்கு "P" என்ற எழுத்தடையாளம் வட்டத்திலோ அல்லது அடைப்புக்குறிக்குள்ளோ பாவிக்கப் படும். சில நாடுகள் தமது நாட்டில் இவ் வடையாளத்துடன் அதன் முதல் வெளியீட்டு வருடத்தையும் இருவட்டுக்களிலும் ஒலிநாடா க்களிலும் பதியும்படி கோருகின்றன.

இணையதளங்களுக்கான பதிப்புரிமை

இணையத்தளங்கள் கிரபிக்ஸ், விடயதொ குப்பு, இசை, சித்திர வேலைப்பாடு, புகைப்படங்கள், தகவல்தளங்கள், வீடியோக்கள், கணினி மென்பொருள், HTML சங்கேதமொழி போன்ற பல்வகை ஆக்கங்களை ஒன்றிணைத்தே இணையதளங்கள் உருவாகின்றன. பதிப்புரிமை இவ் ஆக்கங்களை தனித்தனியாக பதிப்புரிமை பெறுகின்றன. உ+ம்:இணையதளத்திலுள்ள ஒரு கட்டுரையானது தன்னகத்தே பதிப்புரிமை பெற்றிருக்கும். அதேவேளை பதிப்புரிமை அதிலுள்ள ஆக்கங்கள் தெரிவுசெய்யப்பட்டு, அடுக்கப்பட்டு முழுமையான இணையதளத்தி னை உருவாக்கியுள்ளதையும் பாதுகாக்கின்றது. கூடுதலான விபரத்திற்கு
www.wipo.int/sme/en/documents/business_website.html

4. பதிப்புரிமையின் உரிமை

ஆக்கியோன் எப்போதும் படைப்பின் சொந்தக்காரராவாரா?

ஆக்கியோனுக்கும் (authorship) சொந்தக் காரத்தன்மைக்கும் (ownership) சொற்களு க்கிடையில் கருத்துக்குழப்பம் ஒன்றுள்ளது. **ஆக்கியோன்** எனும்போது ஒன்றை ஆக்கியவன் அல்லது உருவாக்கியவன் என்று கருத்தாகும். ஒரு ஆக்கம் பலரால் உருவாக்கம் பெற்றிருந்தால் அவர்கள் அனைவரும் அத்திட்டத்தினை ஆக்கிய வர்கள் அனைவரும் இணை ஆசிரியர்கள் எனப்படுவர். ஆக்கியோருக்கான உரிமைகள் அவர்களின் ஒழுக்க உரிமைகளோடு தொடர்புள்ளதாயும் பாதுகாப்பு உரிமை முடிவுறும் திகதியை தீர்மானிப்பதற்கும் உதவுகின்றது. (23ம் பக்கத்தைப் பார்க்கவும்)

பதிப்புரிமை உரிமைத்துவம் இதிலிருந்து வேறுபட்டது. ஒரு ஆக்கத்தின் பதிப்புரிமையின் **உரிமையாளர்** (owner) அவ்வாக்கத்தினை தனது பொருளாதார மேம்பாட்டிற்காய் பாவிக்கும் முழுமையான உரித்துடையவ ராவதோடு அதனை பாவிக்க, பிரதி எடுக்க, விற்க அல்லது அதிலிருந்து பெறப்படும் வேறு ஆக்கங்களை உருவாக்க முடியும். ஆக்கியோ னுக்கே பதிப்புரிமை உண்மையாக இருக்க வேண்டுமென்றாலும் பின்வரும் நிலைகளில் அது மாறுபடும்.

- ஒரு ஊழியக்காரன்/காரி தனது வேலையின் ஒரு பங்காக ஆக்கியிருந்தால்.
- அவ்வாக்கத்தை ஆக்கும்படி அமர்த்தப்ப ட்டோ அல்லது ஆணையிடப்பட்டிருந்தால்.
- பலரால் உருவாக்கப்பட்டிருந்தால்.

அனேக நாடுகளில் ஒப்பந்தங்கள் ஏற்படும்போது பதிப்புரிமையின் உரிமையாளர் மாற்றமடையும் நிலமை உள்ளது.

நியாய உரிமைகள் யாருக்கு சொந்தமானவை?

நியாய உரிமைகள் எப்போதும் ஆக்கியோ னுக்கே (அவரின் உரித்தாளருக்கும்) சொந்த மானது. மேலேகுறிப்பிட்டது போல சில நாடுகளில் அதுகூட மாற்றமடையலாம்.

தாபனங்களுக்கு ஒழுக்கஉரிமைகள் சொந்த மாகாது. ஒரு சலனப்படத் தயாரிப்பாளர் ஒரு தாபனமானால் அதன் நியாய உரிமைகள் இயக்குனரையும் வசனகர்த்தாவையும் சென்ற டையும்.

ஒரு ஊழியரினால் உருவாக்கப்பட்ட படைப்புகளின் பதிப்புரிமையாளருக்கு சொந்தமானது?

அநேகமான நாடுகளில் ஊழியர் ஒருவர் தனது வேலைநேரத்தில் தனது வேலையின் ஒரு பகுதியாக ஒன்றை ஆக்கியிருந்தால் யாதேனும் ஒப்பந்தமொன்று இல்லாவிட்டால் அதன் பதிப்பு ரிமை தன்னிச்சையாகவே வேலை கொடுநரை சென்றடையும். ஆயினும் சில நாடுகளின் சட்டங்களின் படி இவ்வுரிமை அவர்களிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தப்படி அல்லாது சுயமாக வேலை கொடுநரை சென்றடையாது எனவே இவ்விதம் உருவாக்கம் பெற்ற ஒவ்வொரு ஆக்கத்திற்கும் பதிப்புரிமைக்கான உறுதியொன்று இருவருக்குமிடையில் ஏற்படு த்தப்பட வேண்டும்.

உதாரணம்: ஒரு தாபனம் கணினி திட்ட வரைஞர் ஒருவரை வேலைக்கு அமர்த்தி யுள்ள வேளையில் தனது வேலை நேரத்தில் தாபனத்தின் பொருட்களை பாவித்து ஒரு கணினி விளையாட்டை உருவாக்கியிருந்தால் அனேகமான நாடுகளில் பொருளாதார உரிமை தாபனத்தை சேரும்

ஆயினும் அத்தொழிலாளி சில பகுதிகளை வீட்டில் வைத்தோ, சாதாரண வேலை நேரத்தின் பிறகோ அல்லது தனக்குரிய வேலைகளுக்கு மேலதிகமாக ஒன்றை ஆக்கியிருந்தால் பிரச்சனைகள் எழலாம். எனவே பதிப்புரிமை தொடர்பாக ஏற்படக் கூடிய பிரச்சனைகளை அகற்ற முறையான ஒப்பந்தம் ஒன்றில் அவரை உட்படுத்துதல் நல்ல முறையாகும்.

ஒப்பந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆக்கங்களுக்கான பதிப்புரிமை செந்தக்காரர் யார்?

வெளியார் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆக்கம் ஒன்றை உருவாக்கியிருந்தால் நிலமை வேறாகும். அனேக நாடுகளில் அப்படைப்பை ஆக்கியோனுக்கே பதிப்புரிமை சொந்தமாகும். அதை ஆக்கும்படி கூறியவருக்கு எதற்காக உருவாக்க கூறினாரோ அதற்காக அதை பாவிக்கும் லைசன்ஸ் மட்டுமே செந்தமாகும். அனேகமான பாடலாசிரியர்கள், புகைப்படமெடுப் பவர்கள், சுயேச்சையான பத்திரிக்கையாள ர்கள், கிரபிக் வடிவமைப்பாளர்கள், கணினி இணைய வடிவமைப்பாளர்கள் இவ்விதத்தி லேயே செயற்படுகின்றனர். **வெளியார் ஒருவர் ஏற்பாடு செய்த ஆக்கங்கள் மறுபாவிப்பின் போதும் அதே அல்லது வேறு நோக்கத்திற்காக அதை பாவிப்பதற்காக வரும்போதும் சொந்தக் கார பிரச்சனை எழும்.**

அரசிற்காக உருவாக்கப்பட்ட ஆக்கங்கள்

சில நாடுகளில் அரசானது தனது கட்டுப் பாட்டில் அல்லது வழி நடத்துதலில் உரு வாக்கப்பெற்ற ஆக்கங்களுக்கு அல்லது அச்சேற்றப் பட்டவைக்கு ஏற்கெனவே ஒப்பந்தமொன்றில் ஒத்துக்கொள்ளாத போது அது பதிப்புரிமையை பெற்றுக் கொள்கின்றது. அரசிற்காக சிறுதாபனங் கள் ஆக்கமொன்றை உருவாக்கும் போது இதனை கருத்தில் கொண்டு பதிப்புரிமை பற்றிய சரியானதொரு ஒப்பந்தத்திற்கு உட்படல் நன்று.

மாத மாதம் கிரயத்திற்கு பெறும் ஆக்கங்கள்

மாத மாதம் கிரயத்திற்கு பெறும் ஆக்கங்கள் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் மாதகிரயத்திற்கு பெறக்கூடியதாக பதிப்புரிமை சட்டத்தில் "மாதத்தவணையில்" ஒரு பிரிவு ள்ளது. இவ்விதம் உருவாக்கம் பெற்ற படைப்புக்கள் ஒரு ஊழியக்காரனால் வேலை நேரத்தில் உருவகம் பெற்ற மற்றும் கொமினுக்கு ஒப்பந்த அடிப்படையில் உருவாக் கப்பட்டவையாகும். எனவே இதற்கு பணம் கொடுக்கும் தனிநபரோ, தாபனமோ அல்லது கழகமோ பதிப்புரிமையை பெற்றவராவர்.

உதாரணம்: உங்கள் தாபனத்திற்காக விளம்பரம் ஒன்றை ஆக்கும்படிக்கு ஒப்பந்தம் செய்யதுள்ளீர்கள் என கொள்வோம். அவ்வேளையில் நடக்கும் வியாபார கண்காட்சியில் அதை பாவிக்கவே நீங்கள் தீர்மானித்தீர்கள். அனேகமாக எல்லா நாடுகளிலும் வேறு ஏதாகிலும் ஒப்பந்தம் ஏற்படுத்தாதவிடத்து விளம்பரத்தை உருவாக்கிய முகவருக்கே பதிப்புரிமை உரித்தாகும். சிறிது காலத்திற்கு பின் உங்களுக்கு அதிலுள்ள சில பகுதிகளை, இலச்சனையோ அல்லது படத்தினையோ உங்கள் இணையத் தளத்தில் பாவிக்க எண்ணும்போது உங்கள் விளம்பர தாபனத் திடமிருந்து அதற்காக அனுமதியை பெற வேண்டும் ஏனெனில் உங்கள் முதல் ஒப்பந்த நேரத்தில் இது பற்றி ஏற்பாடு செய்யப்பட வில்லை.

ஆயினும் இதற்கு விதிவிலக்காக பிரத்தியேக உபயோகத்திற்காக பாவிக்கப்படும் புகைப்படம், ஓவியங்கள், செதுக்கப்பட்ட சித்திரங்கள், ஒலிப்பதிவுகள், சினமாப்படங்கள் போன்றவை யார் செய்யும்படி ஏவினார்களோ பதிப்புரிமை அவர்களையே சாரும்.

ஆக்கங்களை வெளியிடுவதற்கு முன் வேலை கொள்வோன் ஊழியன் என்ற ஒப்பந்தம் எவ்விதம் ஏற்படுத்தப்பட்டதோ அவ்வித்தில் ஒரு **எழுத்திலான ஒரு ஒப்பந்தம்** ஏற்ப்படுத்தப் படவேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட டோரினால் உருவாக்கப்பட்ட ஆக்கங்களுக்கான பதிப்புரிமை யாருக்கு சொந்தமாகும்?


சிலர் ஒன்றிணைந்து உருவாக்கம் பெற்ற ஆக்கங்களில் ஒவ்வொருவர் ஆற்றிய பங்கும் தனித்தனியாக பதிப்புரிமை பெறக் கூடியதாக இருக்கவேண்டும். இவ்விதம் இணையாசிரியர் கள் ஒன்றிணைந்து ஆக்கத்தினை உருவாக்கும போது அவர்களுக்கிடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவேண்டும். அவ்விதம் ஏற்படுத்த படாவிடத்து பின்வரும் சாதாரணமாக விதிகள் பேணப்படும்.

- **இணைஆக்கங்கள்:** இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்டோர் தங்களது ஆக்கங் களை ஒன்றிணைந்து வெளியிடும்போது "இணையாக்கங்கள்" உருபெறுகின்றன. இதற்கு உதாரணமாக இரண்டோ அதற்கு மேற்பட்ட ஆக்கியோர்கள் இணைந்து தத்தமது ஆக்கங்களை இணைத்து ஒரே ஆக்கமாக ஒரு புத்தகத்தை வெளியிடு வதை எடுக்கலாம். **இந்த இணை ஆக்கங்களின் கர்த்தாக்கள் முழு ஆக்க பதிப்புரிமையின் இணைசொந்தக்காரராவர்.** அனேக நாடுகளில் இணைபடைப்பாளர்கள் பதிப்புரிமை சட்டத்தின்படி அதனை பாவிப்பிற்கு தமது சம்மதத்தை தெரிவிப் பது இன்றியமையாததாகும். மற்றைய நாடுகளில் இணை கர்த்தாக்களில் ஒருவர் மற்றயவர்களின் அனுமதியின்றி அனுபவிக் கலாம். **எழுத்துவிலான ஒப்பந்தம்** ஒன்றில் அதன் உரிமையாளர், பாவனை, அப்படை ப்பை சீரமைத்தல், விநியோகம், லாப பங்கீடு மற்றும் முறைகேடான பிரதி எடுத்தலு க்கும் தெரான நடைமுறையாகும்.

- **கூட்டு ஆக்கங்கள்:** படைப்பாளர்கள் இணைந்த ஆக்கத்திற்கு இணங்காமல் தத்தமது ஆக்கங்களை புறம்பாக பாவிக்கவிரும்பினால் அது கூட்டு ஆக்கமாகும். இதற்கு உதாரணமாக பல பாடலாசிரியர்களால் இயற்றப்பட்ட பாடல்கள் அடங்கிய இருவட்டுக்கள் அல்லது பல சுயேச்சை ஆசிரியர்களின் கட்டுரைகள் அடங்கிய சஞ்சிகைகளை காணலாம். இங்கு **ஒவ்வொரு ஆக்கியோனும் தத்தமது ஆக்கத்துக்குரிய பதிப்புரிமையை பெறுவர்.**

- **ஒன்றிலிருந்து தோற்றம் பெற்றவை:** தோற்றம்பெற்ற ஆக்கம் என்பது ஏற்கெனவே உள்ள ஒன்றோ அதற்கு மேற்பட்ட ஆக்கங்களை தழுவிய ஆக்கமாகும். மொழிபெயர்ப்பு, சங்கீத கச்சேரிகள், சித்திரபிரதிகள், நாடகமாக்குதல் பேசும் படங்கள் போன்றவை உதாரணமாகலாம். தழுவிய ஆக்கங்களை உருவாக்குதல் **பதிப்புரிமை பெற்றவரின் முழு உரிமையாகும்.** (15-ம் பக்கத்தைப் பார்க்கவும்) அதேவேளை தழுவிய ஆக்கங்கள் தமக்கென பிறிதான பதிப்புரிமையை பெற்றுக் கொள்ள இயலுமானாலும் அவற்றில் **எவ்வெவ் பகுதிகள் அசலானவையோ அவை மாத்திரம் பதிப்புரிமையை பெறும்.**

இணையாக்கத்திற்கும் கூட்டு ஆக்கத்திற்கும் இடையில் வழக்கத்தில் வித்தியாசத்தை காணல் கஸ்டமாகும். ஒரு இணையாக்கத்திற்கு பல ஆசிரியர்கள் தன்னிச்சையாக வெவ்வேறு கால இடைவெளியில் ஆக்கங்களை சமர்ப்பித்திருக்கலாம் என்றபடியால் "முன்வந்த, பின்னர் வந்த" ஆக்கங்கள் என இருவகை ஆக்கங்களேற்படும். **அனேகமான நாடுகளில் இணை ஆக்கியோருடைய நோக்கமே பதிப்புரிமையை பெற முக்கியமானதாக கருத்தில் எடுத்து அவற்றை இணை, கூட்டு, அல்லது தழுவல் ஆக்கமாக வெளிக்கொணரலாம்.** பல ஆசிரியர்கள் இணைந்து ஒன்றில் ஒன்று தங்கியுள்ள ஆக்கம் ஒன்றை ஆக்க விரும்பின் சுயேச்சையான தழுவிய ஆக்கங்கள் அல்லது கூட்டு ஆக்கங்கள் உருவாகும்.



டாவின்ஸி கோட் என்ற புத்தகத்தை தழுவி எடுக்கப்பட்டதே டாவின்ஸி கோட் என்ற சினிமாப்படத்தை தயாரித்தனர். எனவே அப்படத்தின் தயாரிப்பாளர் படத்தை தயாரிப்பதற்கும் விநியோகிப்பதற்கும் டா வின்ஸி கோட் ஆசிரியர் டாண் பிறவுனின் அனுமதியினை பெறவேண்டும்.

5. பதிப்புரிமை மற்றும் இணைந்த உரிமைகளால் நன்மை அடைதல்

ஆக்கங்களிலிருந்து எவ்விதத்தில் வருமானம் பெறலாம்?

உங்கள் தாபனம் ஒரு ஆக்கத்திற்கான பதிப்புரிமையை கொண்டிருந்தால் ஏற்கெனவே ஒரு உரிமை தொகுப்புக்கு உரிமை யாளராகின்றீர்கள். அதாவது அப்பாதுகாப்பு பெற்ற ஆக்கத்தினை மறுபிரதிகள் செய்ய, விற்க அல்லது வாடகைக்கு விட, அதிலிருந்து பிறப்பிக்கப்படும் ஆக்கங்களை வெளியிட, நடிக்க அல்லது மேடையேற்ற மற்றும் இதையொத்த காரியங்களை மேற் கொள்ள இயலும். வேறு யாராகிலும் அதை பாவிக்கவோ அல்லது வர்த்தகத்தில் முழுமையான உரிமைகள் உங்கள் விருப்பத்திற்கமைய பலகூறுகளாகவும் பல உப கூறுகளாகவும் பிரிக்கப்பட்டு ஒரு கிரயத்திற்கு விற்கவோ அல்லது மற்றவர்களுக்கு லைசன்ஸ் முறையில் அனுமதியளிக்கவோ முடியும்.

எனவே ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு, காலத் திற்கு, சந்தையின் ஒரு பகுதிக்கு மொழிக்கு (மொழிபெயர்ப்பு), குறிப்பிட்ட ஊடகத்திற்கு அல்லது ஆக்கத்தின் ஒரு பகுதிக்கு வரையறுக்கப்படலாம். உதாரணத்திற்கு ஒரு பதிப்புரிமையின் சொந்தக்காரர் தனது பதிப்புரிமையினை யாருக்காகிலும் நியமிக்க வோ அல்லது முழுமையான வெளியிடும் உரிமையை புத்தக வெளியீட்டாளருக்கு அல்லது படமெடுக்கும் உரிமையை படத்தயாரி ப்பாளருக்கு விற்கவோ, ஒரு ஒலிபரப்பு தாபனத்திற்கு அதனை ஒலிபரப்பும் உரிமை யினை கொடுக்கவோ, ஒரு நாடக குழுவிற்கு அல்லது தொலைகாட்சி தாபனத்திற்கு அதனை நாடகமாக வெளியிட அனமதிக்வோ முடியும்.

ஒரு ஆக்கத்தினை பல வழிகளில் வியாபார பொருளாக்க இயலும்.

- பதிப்புரிமை பெற்ற ஆக்கத்தினை **அப்படியே விற்கலாம்** அல்லது **பிரதிகள் எடுத்து பிரதிகளை** விற்கலாம். இப்படிப் பட்ட வேளைகளில் பதிப்புரிமையின் அனேகமான உரிமைகளை உங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்கின்றீர்கள். (அடுத்த பந்தியை பார்க்கவும்)

- வேறு யாரையாகிலும் அதனை பிரதி செய்யும் உரிமையினை அல்லது பாவிக்கும் பொருளாதார உரிமையினை லைசன்ஸ் மூலம் அனுமதியளிக்கலாம்

- ஆக்கத்தின் மேல் உங்களுக்கிருக்கும் பதிப்புரிமையினன முழுமையாக அல்லது பகுதியினை விற்க அல்லது வேறு யாருக்கேனும் நியமிக்கவோ முடியும்.

உங்கள் ஆக்கத்தினை நீங்கள் விற்றால் அதனது பதிப்புரிமை யினை இழப்பீர்களா?

ஒரு ஆக்கம் பதிக்கப்பட்டுள்ள பொளதீக பொரு ளினின்று பதிப்புரிமை வேறுபட்டது. ஒரு பதிப்புரிமை பெற்ற ஆக்கத்தினை விற்கும் போது (உதாரணத்திற்கு ஒரு கணினி திட்டவரைவு அல்லது கையெழுத்துப் பிரதி) அதனை வாங்கியவருக்கு பதிப்புரிமை தன்னிச்சையாக கைமாறாது. **பதிப்புரி மையானது ஆக்கியயோன் எழுத்திலான ஒரு ஒப்பந்தத்தின் மூலம் அதனை கையளிக்கா விட்டால் அதன் ஆக்கியோனுடனேயே பதிப்புரிமை தங்கிவிடும்.**

பதிப்புரிமை அனுமதிப்பத்திரம் என்றால் என்ன?

பதிப்புரிமை மூலம் பாதுகாப்பு பெற்ற உங்களின் பொருளாதார உரிமைகளில் **ஒன்றையோ அல்லது பலவற்றையோ தனி நபர் அல்லது குழுமம் ஒன்று பரீட்சிப் பதற்கு கிடைக்கும் அனுமதியாகும்**. இதன் அனுகூலம் என்ன வெனில் பதிப்புரிமை முழுமையாக உங்கள் வசம் இருக்கும் அதே வேளை ஏனையோர் கட்டணம் ஒன்றை செலுத்தி உங்களிடமிருந்து பிரதியொன்றை, விநியோகத்தினை, பதிவிறக்கம், ஒளி பரப்பு, இணையபரப்பு அல்லது ஏனைய ஏதும் குறிப்பிட்ட நடவடிக்கைகளில்

முழு உரிமம் பெற்ற அனுமதிப் பத்திரத்திற்கும் முழு உரிமம் அற்ற அனுமதிப்பத்திரத்திற்கும் என்ன வித்தியாசம் உண்டு?

அனுமதிப்பத்திரமானது முழு உரிமை பெற்றதாகவோ அல்லது அற்றதாகவோ இருக்கலாம். அனுமதிப்பத்திரத்தின் உரிமை க்கமைய குறிப்பிட்ட வேலையை மாற்றி யமைக்கலாம். அநேக நாடுகளில் முழு உரிமைபெறும் அனுமதிப்பத்திரங்கள் எழுத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முழு உரிமம் பெற்ற அனுமதி ப்பத்திரம் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதாகவும் இருக் கலாம் உதாரணம் குறிப்பிட்ட கால எல்லை, குறிப்பிட்ட பிரதேசம் அல்லது குறிப்பிட்ட காரணத்தி ற்காகவும் இருக்கலாம். அல்லது குறிப்பிட்ட தேவை பூர்த்தியாகும் வரை யாகவும் இருக்கலாம். சந்தையில் சந்தைப்படுத்த தேவையான வளங்கள் குறைவாக இருப்பின் முழு உரிமம் பெற்ற அனுமதிப்பத்திரம் பெறுவதே பதிப்புரிமை பெற்ற பொருள் ஒன்றை சந்தையில் விற்பனை செய்யவும், விநியோகம் செய்ய வும் மிகச்சிறப்பான வர்த்தக கட்டமைப்பாக கருதப்படுகிறது.

இதற்கு மறுபுரமாக நீங்கள் முழு உரிமம் அற்ற அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கின் நீங்கள் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு உங்களின் ஒன்றல்லது அதற்கு மேற்பட்ட உரிமைகளை பரீட்சிப்பதற்கு அனுமதியளி ப்பதுடன் நீங்கள் அல்லது வேறுயாரேனும் அதே உரிமத்தினை சமகாலத்தில் உப யோகப்படுத்த முடியும். அதாவது வேண்டிய எண்ணிக்கையானவர்களுக்கு உங்கள் வேலையினை உபயோகிக்க நீங்கள் அனுமதிக்கலாம். அநேக நாடுகளில் முழு உரிமம் அற்ற அனுமதிகள் வாய் மூலமான தாகவோ எழுத்து வடிவிலோ இருக்கலாம். எனினும் ஆவண வடிவம் விரும்பத்தக்கது.

உங்கள் பதிப்புரிமத்தினை விற்பனை செய்வதால் என்ன நிகழும்?

உங்களுக்கு உரித்துடைய படைப்பொன்றை நீங்கள் இன்னொருவருக்கு **விற்பதன் மூலம்** அவர் புதியதொரு பதிப்புரிமை பெற்ற உரிமையாளரக மாறுவார். அவ்வாறான மாற்றீடு அல்லது உரிமைமாற்றத்திற்கான உத்தியோக பூர்வ சொல் **'உரிமை மாற்றுப் பத்திரமாகும்'**. அதற்கமைய உரிமை பெற்றவரன்றி அனுமதிப் பத்திரம் இன்றி எவரும் செயல்பட்டால் சட்டமீறலாகும். உரிமை மாற்றுப் பத்திரமானது மொத்த உரிமத்தினையும் உங்கள் பெயரு க்கு மாற்றிடும். அநேக நாடுகளில் உரிமை மாற்றுப் பத்திரம் **எழுத்து மூலமானதாகவும்**, பதிப்புரிமை பெற்ற உரிமையாளரினால் கையொப்பமிடப பட்டதாகவும் இருப்பின் மாத்திரமே செல்லு படியானதாக கருதப்படுகிறது.

சில நாடுகளில் பதிப்புரிமையினை உரிமை மாற்று செய்ய முடியாது. பொருளியில் உரிமம் மாற்று மட்டுமே செல்லுபடியான தாகும், ஆக்க உரிமை என்றும் ஆசிரிய ருடனே இருக்கும் என்பதை நினைவில் வைத்திருக்கவும்.



முழுஉரிமத்திற்கான உரிமை மாற்றுப் பத்திரம் எழுத்து மூலமானதாக இருக்க வேண்டும்.

அனுமதிப்பத்திர கட்டமைப்பு

அனுமதிப்பத்திரம் வழங்குவதன் மூலம் அனுமதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டு ள்ளவற்றை செய்வதற்கான உரிமையினை நீங்கள் அனுமதி பத்திரம் பெறுபவருக்கு வழங்குகின்றீர் கள். அதனால் அனுமதி ஒப்பந்தத்தில் அனுமதிக்கப் படுபவற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். **அனுமதியின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட சிலவற்றுக்கு அனுமதி வழங்குவதே சிறந்தது.** முழுஉரிமையற்ற அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதன் மூலம் ஆர்வமுள்ள அநேகருக்கு உங்கள் உரிமத்தினை பல்வேறு தேவைகளு க்காக வழங்கலாம். எனினும் வர்த்தகதன்மைக்கு அமைய சிலவற்றின் முழுஅனுமதியும் பாதுகாப்பு மற்றும் இதர காரணங்களுக்காக ஒருவரிடம் மாத்திரம் இருக்கவேண்டிய தேவையும் உள்ளது. அவ்வாறான தேவைகளின் போது முழுமையான உரிமை மாற்றுப் பத்திரம் ஒன்றை சிறந்த கட்டணம் ஒன்றுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு நீங்கள் வழங்கலாம். சிறந்த கட்டணம் ஒன்றை நீங்கள் பெறுவதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்கள் பதிப்புரிமையினை நீங்கள் முழுமையான உரிமை மாற்று செய்து விட்டால் அதன் மூலமான அனைத்து எதிர்கால வருவாய்களையும் நீங்கள் இழப்பீர்கள்.

வியாபார பொருள் எனின் என்ன?

வியாபாரம் அறிவுசார் செத்துரிமையாகும். இது வாடிக்கையாளர்களின் பார்வையினை தம் பக்கம் பிரசித்து பெற்ற ஓவியங்கள், நடிகர்கள், இசை கலைஞர்கள், பிரபலங்கள் என பல்வேறு வகைகள் டீ-சர்ட், விளையாட்டு பொருட்கள், புத்தகங்கள் கோப்பைகள், சுவரொட்டிகள் பல பொருட்களில் காணப்படும். பதிப்புரிமையில் வியாபாரம் தங்கியிருத்தல் மேலதிக வருமானத்தினை கொண்டுவரும்.

- பதிப்புரிமையுள்ள வர்த்தகங்களை அனுமதி ப்பத்திரம் பெற்று **பதிப்புரிமம்** வழங்குவதன் மூலம் அனுமதிக்கட்டணம் மற்றும் விசுவாச த்தன்மையினையும்

- குறைந்த செலவில் அதிக பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் (டீ-சர்ட், கோப்பைகள்) தமது உற்பத்திகளில் பிரபலங்கள் மற்றும் பிரபல புகைப்படங்களை பொறிப்பதன் மூலம் அவற்றின் விற்பனையினை அதிகரிக்கலாம்.

அறிவு சார் சொத்துரிமை வர்த்தகத்தில் சில உரிமைகளை உபயோகிகக் முன்னனுமதி தேவை. வர்த்த நோக்கத்திற்காக பிரபல்யங்களில் படங்களை உபயோகிக்கும் போது மேலதிக செலவினம் ஏற்படலாம். ஏனெனில் அவை தனிநபர் மற்றும் பொதுஉரிம சட்டங்களால் பாதுகாக்கப்பட்டிருக்கலாம்.

மேரி என்கெல்பீரிட்: கலை மற்றும் வர்த்தகர்

தமது கலை ஆக்கங்களுக்கும் கலை உரிமத் திற்கும் உலகபிரசித்து பெற்றவர். வாழ்த்து அட்டை வடிவமைப்பு நிறுவனங்கள் அவரின் கலை நிர்மானங்களை கொள்வனவு செய்கின் றன. அத்துடன் சில நிறுவனங்கள் அனுமதி பெற்று தமது பலதரப்பட்ட பொருட்களுக்கு பாரியளவில் அவற்றை உபயோகிக்கின்றன. அவரின் வர்த்தக செயற்பாடுகள் பற்றி விபரங்களை கீழுள்ள இணைய முகவரியின் ஊடாக விபரமாக அறியலாம்.

http://www.wipo.int/sme/en/case_studies/engelbreit_licensing.html.



உங்களின் படைப்பொன்றிற்கு அனுமதிப்பத்திரத்திம் வழங்குவது எப்படி?

உங்களின் ஆக்கத்தினை அல்லது உங்களின் உற்பத்திற்கான உரிமை அனுமதிப்பத்திரத் தினை யாருக்கு எவ்வாறு அனுமதிப்பது என்பதை நீங்கள்தாம் முடிவு செய்ய வேண்டும். பதிப்புரிமை உள்ளவர்கள் அதனை மற்றவர்கள் உபயோகிக்க அனுமதிப்பத்திரம் வழங்க பல்வேறு முறைகள் கையாளப் படுகின்றன.

அனுமதிப்பத்திரம் வழங்கும் போது நீங்கள் **அனுமதி பெறுபவருடன் ஒவ்வொரு நிபந்த னையையும் பற்றி கலந்தாலோசித்து அனுமதி வழங்கலாம்** அல்லது நிலையான நிபந்தனை களை கையாளலாம். அவை உங்களின் பதிப்புரிமையினை பெற விரும்புபவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

உங்களின் உரிமையினை அடிக்கடி மேற் பார்வை செய்ய வேண்டியிருப்பின் அது அதிக மேற்பார்வை செலவினத்தையும், வேலைப்பளு வையும் உண்டாக்கும். எனவே இயலுமான வரை அனுமதி பெறுநர்களையும் பேச்சு வார்த்தை நடத்தக்கூடியவர்களையுமே தெரிவு செய்யுங்கள். அதாவது உங்கள் உரிமங்களை நிர்வாகம் செய்யக்கூடிய **நிபுணத்துவமிக்க முகவர்களை** நீங்கள் தெரிவு செய்யலாம் (உதாரணமாக பதிப்பங்கள் வெளியீடுகள்) உங்கள் சார்பாக அவர்களே அனுமதி ஒப்பந்தங்களில் ஈடுபடுவர். எனினும் நிபந்தனை கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பில் நீங்களே நேரடியாக கலந்து கொள்வது சிறந்தது.

நடைமுறையில் தமது பதிப்புரிமைகள் பல்வேறு தேவைகளுக்கு உபயோகிக்கப்படும் போது அவை அனைத்தையும் மேற்பார்வை செய்வது அனுமதிப்பத்திர முகவருக்கு சிரமமாகும். அவ்வாறே தொலைகாட்சி வானொலி ஒளிபரப்பு களின் போதும் அவை முறையான அனுமதியினை பெற்றுள்ளனவா என அறிவது சிரமமாகும். தனிநபர் அனுமதிப்பத்திரங்கள் சிக்கலாக இருக்கும்போது 'தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு' (Collective Management Organization) மிகச்சிறந்த தீர்வாகும். குறிப்பிட பதிப்புரிமம் பெற்ற வேலையொன்று அலைவரிசைகளில் உபயோகி க்கப்படும் போது பதிப்புரிமை பெற்றவர் சார்பாக 'தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு (CMO) மேற்பார்வைகள் மற்றும் கட்டணங்களை முறையாக அறிவிடுதல் என்பவ ற்றில் ஈடுபடும். உங்கள் நாட்டிலுள்ள CMOல் நீங்கள் இணையலாம்.

தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு (Collective Management Organization) எவ்வாறு தொழிற்படுகின்றது?

தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு பாவனையாளருக்கும் அதில் உறுப்பினர் களாக உள்ள பதிப்புரிமை பெற்ற உரிமையாளர் களும் இடையில் மத்தியஸ்தராக தொழிற்படும் நிறுவகம் ஆகும். ஒவ்வொரு நாட்டிலும் இவ் அமைப்பு காணப்பட்ட போதிலும் இவை சில பொறுப்புகளை மாத்திரமே ஏற்கின்றன. உதாரணமாக திரைப் படம், பாடல்கள், புகைப்படங்கள் மற்றும் அனைத்து அச்சுப் பதிப்புகள் என்பனவாகும். தொகுப்பு CMOல் இணையும் உறுப்பினர்கள் தமக்கு பதிப்புரிமங்கள் உள்ளவற்றை தொகுப்பு முகாமைத்துவ அமைப்பிற்கு தெரியப் படுத்துவார்கள்.

CMOன் நடவடிக்கைகளாவன:

1) தமது உறுப்பினர்களின் ஆக்கங்களை ஆவணப்படுத்தல்
2) அவர்கள் சார்பாக அனுமதிப் பத்திரங்களை வழங்கி இறை வசூலித்தல்
3) அவ்ஆக்கத்தின் உபயோகங்கள் பற்றி தகவல்களை சேகரித்தல்
4) மேற்பார்வை மற்றும் கணக்காய்வு மேற்கொள்ளல்
5) தமது உறுப்பினர்களுக்கு ஆக்க பயன்படுத்தலுக்கான இறையை பெற்றுக்கொடுத்தல்

சர்வதேசரீதியில் ஒப்பந்தங்களில் ஈடுபட வேண்டி இருப்பின் உரிமையாளர் தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு ஊடாக ஈடுபடலாம். தமது உறுப்பினர்கள் சார்பாக CMO அனுமதிப்பத்திரங்களை வழங்கி, கட்டணங்களை அறவிடும். பதிப்புரிமை பெற்ற உரிமையாளர்களுடன் காணப்பட்ட இணக்கப் பாட்டிற்கு அமைய தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு கட்டணங்களை அறிவிடப்படும்.

தொகுப்பு முகாமைத்துவ அமைப்பின் அனுகூலங்கள்:

- தொகுப்பு அனுமதிப்பத்திரம் மூலம் பாவனையாளருக்கும் பதிப்புரிமையாளருக்கும் அநேக நன்மைகள் உள்ளன. **தனிஇட விற்பனை பாவனையாளருக்கும்,** பதிப்புரிமையாளருக்கும் நிர்வாக செலவினத்தினை குறைக்கும். CMO உரிமையாளரை பெருமையுடன் அனுமதிப்பது மாத்திரமன்றி ஆய்வுகள் மற்றம் அபிவிருத்திகளுக்கும் உதவுகின்றது. அனைத்து சந்தைகளையும் சேர்ந்த இயக்குனர்கள் அடங்கிய தொகுப்பு முறைமை இல்லாவிடின் சிறிய மற்றும் நடுத்தர பதிப்புரிமையாளர்களும் சிறிய மற்றும் நடுத்தர பாவனையாளர் களும் பெரும் நெருக்கடிக்கு முகங் கொடுக்க நேரிடும்.

- பாதுகாக்கப்பட்ட ஆக்கங்களின் உரிமையாளர்களும் தமது வேலைகளின் பாவனைக்காக **தொகுப்பு பேச்சுவார்த்தையின்** பலத்தினை உபயோகித்து சிறந்த நிபந்தனைகளை பெறமுடியும். இதற்காக தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு மிகவும் பலம் பொருந்திய பாவனை குழுக்கள் மற்றும் பல்வேறு நபர்களுடன் மிகவும் சமநிலையில் மத்தியஸ்தம் செய்யக் கூடியது

- மற்றவர்களின் பதிப்புரிமையினை அல்லது அதனோடு இணைந்த உரிமைகளை உபயோகிக்க விரும்பும் வர்த்தகங்கள் ஒரு அமைப்புடன் இணைய வேண்டும் அல்லது **பிளாங்கற் அனுமதிப்பத்திரத்தினை** பெற வேண்டும். சால்வை அனுமதிப்பத்திரம் மூலம் அனுமதிபத்திரம் பெற்றவர் ஒவ்வொரு குறிப்பிட்ட ஒவ்வொரு வேலைக்கும் நிபந்தனைகளை தனித்தனியாக விவாதிப்பதிலிருந்தும் விடுபட்டு CMOன் வேண்டியதொரு பிரிவினை குறிப்பிட்ட கால எல்லைக்கு உபயோகிக்க முடியும்.

- **டிஜிட்டல் தொழில்நுட்ப** வர்த்தகத்திற்கு மேற்கூறிய முறை மிகவும் பொருத்தமானது ஏனெனில் உரிமம் பெறுவது இலகுவானதால் ஆகும்.

பதிப்புரிமை மற்றும் அதனோடு இணைந்த உரிமைகளை முகாமைச் செய்தல்

பதிப்புரிமை மூலம் கிட்டிய உரிமைகள் மற்றும் அதனோடு இணைந்த உரிமைகளை கீழுள்ள வர்களால் முகாமைச் செய்யலாம்:

- உரிமங்களின் உரிமையாளர்
- ஒரு மத்தியஸ்தர் உதாரணமாக பதிப்பகம், வெளியீட்டாளர். விநியோகஸ்தர், அல்லது
- தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு சில சந்தர்ப்பங்களில் சட்ட உத்தரவு மூலம் தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு நிர்வாகம் செய்யலாம்.

- அநேகமான தொகுப்பு முகாமைத்துவ அமைப்புகள் தமது அனுமதிப ்பத்திர வர்த்தகத்துக்கு வெளியேயும் முக்கிய பங்குவகிக் கின்றன. உதாரணமாக அவர்கள் அமுலாக்கத் தில் ஈடுபட்டு தகவல்களை வழங்குதல், புதிய வேலைகளை கலாச்சார விழுமியங்களுக்கு ட்பட்டு ஊக்கமளித்தல் மற்றும் தமது உறுப்பினர்களுக்கு சமூக மற்றும் சட்ட நலன்களை வழங்குவதில் உதவுகின்றனர். அண்மைய ஆண்டுகளில் பல CMO தமது D.R.M இணை முகாத்துவ உரிமைகளுக்காக (பார்க்க பக்கம் 26) அபிவிருத்தி செய்து வருகின்றன. அத்துடன் தமது பொது வான அபிவிருத்தி, முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் ஏனைய உரிமங்களுக்காக பல தொகுப்பு முகாமைத்துவ அமைப்புகள் சர்வதேச ஒன்றுகூடல்களில் பங்கு பற்றி வருகின்றன.

- குறிப்பிட்ட நாட்டின். தொகுப்பு முகாமைத்துவ ஒன்றியம் பற்றிய விபரங்களை தொகுப்பு முகாமைத்துவ ஒன்றியங்களுக்கான சர்வதேச சம்மேளனத்திடம் பெற முடியும். (பின்னிணைப்பு 1 இனை பார்க்கவும்) அல்லது தேசிய பதிப்புரிமை நிர்வாக அலுவலகத்தில் (அனுபந்தம் 02 இனை பார்க்கவும்) அல்லது குறிப்பிட்ட தொழிற்துறைக்கான சங்கத்தில் அல்லது சர்வதேச தன்னார்வு நிறுவனத்தில் பெறலாம். (பின்னிணைப்பு 1 பக்கம் 55 பார்க்கவும்)

இசைத்துறையில் தொகுப்பு முகாமைத்துவம்

இசைத்துறையில் காணப்படும் பல்வேறு வகையான அனுமதிப்பத்திரங்கள் காரணமாக தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு இத் துறையில் முக்கிய பங்கு வகிக்கின்றது. எழுத்தாளர்கள், இசையமைப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடம் சேகரிக்கப்படுகிறது. **கச்சேரி உரிமை** எழுத்தாளர்கள், இசையமைப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடம் சேகரிக்கப் படுகிறது. **கச்சேரி உரிமை:** கலைஞர்கள், தயாரிப்பாளர் (பார்க்க பக்20) சார்பாக சேகரிக்கப்படுகிறது. ஆச்சரிமின்றி ஆயிரக் கணக்கான சிறிய மற்றும் நடுத்தர ஒலி, ஒளிபரப்பு நிறுவனங்கள் இசை வெளியீட்டாளர் கள் மற்றும் கலைஞர்கள் தத்தமது நாடுகளில் தொகுப்பு முகாமைத்துவ ஒன்றியங்களை நாடி தமது நிர்மாணங்களுக்கான வெகுமதிகளை தொடர்பாடல் சாதனங்களில் (தொலைகாட்சி, வானொலி, செய்மதி ஒளிபரப்பு) உறுதி செய்து கொள்கின்றனர். அவ்வாறே அதிக எண்ணிக்கை யிலுள்ள பதிப்புரிமையாளர்களை பாரியளவில் பேச்சுவார்த்தைகள் இன்றி தொடர்புபடுத்தி கொள்ளும் ஆற்றலும் உண்டு.



CMO தெரிவாளர்கள் **இணையத்திலான** உரிமைகளை ஆரம்பம் முதலே முகாமைத் துவம் செய்து வருகின்றனர். விசேடமாக இணைய ஒளிபரப்பு தற்போது தொடக்கம் உரிமத்தினை உருவாக்கலிலும் கவனம் செலுத்தும்.

அநேக நாடுகளில் ஒலிபரப்பு கூட்டுத்தாபன ங்களே **இசை ஒலிபரப்பிற்கு உரிமை** கோரும். கட்டணம் இசை ஒழுங்கிணைப்பாளருக்கு வழங்கப்படும். எனினும் நேரிடையாக அல்ல. இசை ஒழுங்கிணைப்பாளர் தமது உரிமை யினை CMOற்கு பொறுப்பளிக்கும் பட்சத்தில் அது ஆர்வமுள்ள அனைவருடனும் பேச்சு வார்த்தை நடத்தும். CMO ஆனது பெரும் எண்ணிக்கையான இசைக்கலைஞர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அவ்வேளை உபயோகிக்கப்படும் எண்ணிக்கைக்கமையவான கட்டணங்களை உறுப்பினர் பெறுவதை உறுதி செய்யும். ஒலிபரப்பு கூட்டுத்தாபனங்கள் தொகுப்பு முகாமைத்துவ ஒன்றியத்துடன் ஆண்டு கட்டணம் ஒன்றுக்கு இணங்கும். அதற்கமைய இதில் அந்நிர்மாணம் பாவிக்கப்படும் எண்ணிக்கைக்கு கட்டணம் ஒன்றை இசைகலைஞர் CMO ஊடாக பெறுவார். இந்த தொகுப்பு முகாமைத்துவ ஒன்றியம் எந்தவொரு ஒருங்கிணைப்பு சங்கமாகவும் இருக்கலாம். உதாரணமாக பொதுநலவாய ஒலி,ஒளி பரப்பாளருக்கு அவுஸ்திரேலிய உரிமை சங்கமும், இங்கிலாந்து உரிமை சங்கமும் அனுமதி பத்திரங்களை வழங்கு கின்றன. இரண்டு சங்கங்களும் ஒளிபரப்பாளர் களுக்கு உலகின் வேண்டியதொரு பகுதி யிலுள்ள இசை வெளியீடுகளை அனுமதிக்கும் அதிகாரத்தினை கொண்டுள்ளன.

அவுஸ்திரேலிய உரிமை ஒன்றியம் தமது பிரதேசத்திற்கு உட்பட்ட கலைஞர்களின் உரிமைகளை மாத்திரமன்றி பிரித்தானிய ஒன்றியத்தை சேர்ந்த உறுப்பினர்களின் அனுமதியையும் கொண்டுள்ளது. இவ்வாறான ஒப்பந்தம் மூலம் அவுஸ்திரேலிய ஒன்றியத்தின் பலம் பல பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப படுகிறது.

பொதுகாட்சி அனுமதிப்பத்திரமானது இசை அடங்கிய **தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒலி பரப்பிற்கு** அவசியமாகும். காட்சி உரிமையானது பதிப்புரிமையாளரிடமிருந்து, வெளியீட்டாளரிடமிருந்து அனுமதியினை பெற்றிருத்தல் வேண்டும். பிளாங்கற் அனுமதி பொதுவாக பாதுகாப்பானது.

தொகுப்பு முகாமைத்துவத்தில் ஆவணப்பிரதியெடுப்பு

பதிப்புரிமை பெற்ற அச்சுப்பதிவுகள் பாரிய ளவில் வர்த்தகத்தில் உபயோகிக்கப்படும். உதாரணமாக சில தேவைகளுக்காக பத்திரிகை கட்டுரைகள் பிரதியெடுக்கப்படலாம். அத்துடன் தமது ஊழியர்கள் ஆய்வு நடவடிக் கைகளுக்காக சில கட்டுரைகள் உபயோகிக்கப் படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உலகமெங்கும் உள்ள எழுத்தாளர்களிடமிருந்து குறிப்பிட்ட அனுமதியினை பெறுவதில் சிரமங்கள் ஏற்படலாம்.

இதுபோன்ற பாரியளவு அனுமதிப்பத்திரங்களை பிரதியெடுத்தல், எழுத்துரிமை பெறுதல் மற்றும் பதிப்பிப்பதற்கு பல நாடுகளில் மறுவிஸ்தரிப்பு உரிமை ஒன்றியம் (Reproduction Rights Organizations) -ஒரு தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு வகையை சேர்ந்தது- செயற்படுகின்றது. இது உரிமைபெற்றவர்கள் தனியாக செயற்பட



தேவையான பதிப்புரிமை அதிகாரத்தினை பெற்றுத்தர தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் மத்தியஸ்தராக செயல்படுகிறது. தமது உறுப்பினர்களுக்கு தேவையான அனுமதி களை RRO ஏற்படுத்தி கொடுக்கின்றது. புத்தகங்கள், கட்டுரைகள், மறுஆவண பிரதி செய்தல் உட்பட உறுப்பினர் நிறுவனங்களின் தேவை உட்பட பல்வேறு வர்த்தக தேவைகளை பெற மறுவிஸ்தரிப்பு உரிமை அமைப்பு உதவுகிறது. சில மறுவிஸ்தரிப்பு உரிமை ஒன்றியங்கள் வலைப்பின்னலூடான பிறபதிப்புரி மைகளை இலத்திரனியல் விநியோகங்களுக்கு பயன்படுத்த அனுமதிகளையும் வழங்குகின்றன.

6. மற்றவர்களுக்கு உரிமையான ஆக்கங்களை உபயோகித்தல்

மற்றவர்களின் ஆக்கத்தினை உபயோகிக் எப்போது அனுமதி தேவை?

தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை யாக இருக்கும் பதிப்புரிமை பெற்ற அல்லது ஏதேனும் உரிமையுள்ள ஆக்கங்களை வர்த்தகத்தில் உபயோகிக்க வேண்டியிருக்கும். மற்றவர்களின் ஆக்கங்களை உபயோகிக்கும் போது பதிப்புரிமை அனுமதி தேவையா என்பதை நீங்கள் கண்டறிய வேண்டும். பொதுவாக நீங்கள் பதிப்புரிமையாளரிடமிருந்து முறையாக அனுமதியை பெற வேண்டும்.

- பதிப்புரிமை மற்றும் ஏனைய உரிமை யாளர் பாதுகாக்கப்பட்ட ஆக்கங்களின் சட்டம் (பார்க்க பகுதி 2)
- ஆக்கம் பப்ளிக் டொமெய்னில் இல்லை யெனில் (பார்க்க பக்46)
- பதிப்புரிமையாளருக்கு உரித்துடைய அனைத்து பகுதிகளையும் நீங்கள் உபயோகிப்பின்
- நீங்கள் பாவிக்க விரும்புவது சாதாரண பாவனை அல்லது சாதாரண கொடுக்கல் - வாங்கல் அல்லது வரையறைகள் அல்லது விதிவிலக்குகள் என்பன விசேடமாக தேசிய பதிப்புரிமை சட்டத்திற்கு உட்பட்டதாக இருத்தல் (பார்க்க பக்47)

உங்கள் வர்த்தக எல்லைக்கு வெளியே (முதலீட்டாளர் ரோட்ஷோ, நிறுவன இணையத தளம், ஆண்டறிக்கை, நிறுவன செய்தி கையேடு), **உங்கள் வர்த்தக எல்லைக்கு உள்ளே** மற்றவர்களுக்கு உரியதை உபயோகி க்க நீங்கள் அனுமதிபெற வேண்டும். என்பதை நினைவில் கொள்ளுங்கள். **பதிப்புரிமையுள்ள வேலை யொன்றின் ஒருபகுதியை** நீங்கள் உபயோகிப்பினும் அனுமதி தேவை(பார்க்க பகுதி 52).

மற்றவர்களின் இலத்திரனியல் வேலைகளை உபயோகிக்கவும் நீங்கள் முறையான அனுமதி பெற வேண்டுமா?

மற்றவைகளை போலவே இலத்திரனியல் பாவனை மற்றும் சேமிப்பு என்பவற்றுக்கு பதிப்புரிமை பாதுகாப்பு உண்டு. பதிப்புரிமை யாளர்களின் முறையான அனுமதியுடனேயே அவர்களின் வேலைகளை நீங்கள் பிரதியெ டுத்து இணையத்தில் அல்லது இலத்திரனியல் தேவைக்கு பயன்படுத்த வேண்டும். அல்லது அவாகளின் தொடர்பினை உங்கள் தரவு சேமிப்பில் பதிப்பதற்கு அல்லது அவாகளின் வேலைகளை உங்கள் இணையத்தில் வெளியிட. அநேக இணையத்தளங்கள் படங்களையும் தகவல்களையும் மீள்பிரசுரம் செய்ய வசதியாக தொடர்பு கொள்வதற்கு ஒருவரின் மின்னஞ்சல் முகவரியினை தமது தளத்தில் வெளியிடுவதுண்டு.



தற்போதைய தொழில்நுட்ப வசதி மற்றவர்களால் உருவாக்கப்பட்டவற்றை பாவிப்பதை இலகுவாக் கின்றது. (திரைபடம், தொலைகாட்சி கிளிப்ஸ், இசை, கிராபிக்ஸ், புகைப்படம், மென்பொருள், எழு த்தாக்கம்) தொழில்நுட்பமானது மற்றவர்களின் ஆக்கத்தினை உபயோகிப்பதற்கான சட்ட அனுமதியை தந்துவிடாது.

www.wipo.int/sme/

நீங்கள் பதிப்புரிமையால் பாதுகாப்பு பெற்ற ஆக்கம் ஒன்றைக் கொள்வனவு செய்திருப்பின் உங்கள் விருப்பம் போல் பாவிக்கும் அதிகாரத்தினை பெற்றுள்ளீர்களா?

முன்னர் குறிப்பிட்டுள்ளதை போல் பதிப்புரிமை யானது ஆக்கத்தின் சுவாதீனத்திலிருந்து வேறு பட்டது. (பக்35) புத்தக பிரதி, சீ.டி, வீடியோ அல்லது கணனி ஒன்றை வாங்க கொள்வனவா ளருக்கு அதை பொதுவில் காண்பிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கான அனுமதி தராத. இவற்றை செய்வதற்கான உரிமம் பொதுவாக பதிப்புரிமை உரிமையா ளிடமே காணப்படும். அவர்களின் அனுமதி இச்செயற்பாடு களை செய்ய உங்களுக்கு தேவைபடலாம். ஒருவேலையை பிரதியெடுத்தல், இலத்திரனியல் தேவைக்கு ஓர் வேலையை ஸ்கேன் செய்தல், இணையத்தி லுள்ள ஒன்றை பிறதேவைக்காக பதிவிறக்கம் செய்தல் என்பன எல்லாம் அவ்வேலையை பிரதியெடுப்பதையே சாரும். பொதுவாக இவற்றுக்கு முறையான அனுமதிகள் தேவை என்பதை கருத்தில் கொள்க.

மென்பொருள் அனுமதிப்பத்திரம்

மென்பொருள்கள் கொள்வனவுகளின் போது அனுமதிப்பத்தித்திரமும் இணைக்கப்பட்டே இருக்கும். நீங்கள் சடமென்பொருள் பொதியை மாத்திரமே பெறுவதுடன் அதில் உள்ளதை ஒரு சில உபயோகங்களுக்கான அனுமதியை மாத்திரமே பெறுவீர்கள். அது அவற்றிலுள்ள நிபந்தனைகளுக்கு நீங்கள் இணங்காவிடின் அதை திருப்பி ஒப்படைக்கும் **'shrink-wrap அனுமதி வகை'** சார்ந்தவை. பொதியைத் திறப்பதன் மூலம் நீங்கள் அந்நிபந்தனைகளை ஏற்றுகொள்கின்றீர்கள். இல்லாவிடின் **அனுமதிப் பத்திர ஒப்பந்தம்** மென்பொருளினுள் உள்ளடக் கப்பட்டிருக்கும்.

பெரும்பாலும் அனுமதிப்பத்திர ஒப்பந்தம் ஒன்லைனில் **'click-wrap அனுமதி'** முறை யில் காணப்படலாம். அவ்வாறான நேரங்களில் குறிப்பிட்ட இணைய முகவரியை நீங்கள் கிளிக் செய்வதன் மூலம் ஒப்பந்தத்தில் காணப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட மென் பொருளினை உங்கள் நிறுவனத்திலுள்ள பல கணனிகளுக்கு உபயோகிக்க விரும்பின் நீங்கள் **வொலியூம் அனுமதிப்பத்திரம்** ஒன்றை பெறுவீர்கள். அது நீங்கள் தொகையாக கொள்வனவு செய்யும் போது சிறந்த விலைக் கழிவினை தரும்.

அண்மைய ஆண்டுகளில் பல உற்பத்தி யாளர்கள் மேலதிக சலுகைகள் மூலம் பதிப்புரிமை அல்லது அதனோடு இணைந்த உரிமைகளின் எல்லைகளை தாண்டிச் செல்வதால் மென்பொருள் அனுமதிகளின் செல்லுபடியாகும் தன்மை பற்றிய விவாதங்கள் எழுந்தள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பங்களின் நீங்கள் அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தினை கவனமான வாசித்தறிய வேண்டும். எதற்கு அனுமதியுண்டு எதற்கு இல்லை என்பதை தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். எனினும் உங்கள் நாடு களின் சட்டங்களுக்கு அமைய கணனி மென் பொருகளை சிலதேவைகளுக்காக அனுமதிக ளின்றி உபயோகித்துக்கொள்ளும் வாய்ப்பும் உண்டு. பிழைகளை திருத்தல், பாதுகாப்பு செயற்பாடுகளை பரிச்சித்தல் மற்றும் பிற்புலசேமிப்பினை மேற்கொள்ளவே அவ்வனும திகள் ஆகும்.

எவ்வகையான தகவலை அல்லது பொருளை அனுமதிகளின்றி நீங்கள் பயன்படுத்தலாம்?

பதிப்புரிமையாளர்களின் அனுமதி தேவையற்றிப்பது,

- பதிப்புரிமை சட்டத்தினால் பாதுகாக்கப்படாத வேலையொன்றை நீங்கள் பயன்படுத்தின். உதாரணமாக ஆக்க நிர்மாணிப்பாளரின் உரிமைபெற்ற வேலையினை பிரதிசெய்யாமல் அதன் உண்மை தன்மை அல்லது யோசனைகளை உங்களுக்குரித்தான முறையில் வெளிப்படுத்தல்.
- குறித்த ஆக்கம் பொதுப்பாவனையொன்றாக இருப்பின்,
- உங்களின் பாவனை தேசிய பதிப்புரிமை சட்டத்தின் பொது பாவனை அல்லது பொது கொடுக்கல் வாங்கல் அல்லது எல்லையுள்ள அல்லது குறித்த சட்டத்திற்கு உட்பட்டதாக இருப்பின்

நிர்மாணம் பொதுவானதாக இருப்பின்?

குறித்த வேலைக்கு எவரும் உரிமையற்றிருப்பின் அது பொது வழங்கலில் இருக்கும். எவரும் அதை தமது தேவைக்காக சுதந்திரமாக உபயோகிக்கலாம். கீழுள்ளவைகள் பொது வானவையாகும்.

உதாரணமாக:

பெட்ரிக் சோபின் 1849 ஆம் ஆண்டு காலமானார். அவரால் இயற்றப்பட்ட இசைகளும், பாடல் வரிகளும் பொதுப்பாவனையில் உள்ளன.

- பதிப்புரிமை பாதுகாப்பு காலம் காலாவதியாகிய ஆக்கம் (பார்க்க பக் 23)
- பதிப்புரிமையினால் பாதுகாக்க முடியாத ஆக்கம். (பார்க்க பக் 13)
- தமது பாதிப்புரிமையினை இரத்து செய்த ஒருவரின் ஆக்கம்

பதிப்புரிமை அறிவித்தல் இல்லாமையானது அது பொது வழங்கலில் உள்ளதை குறிக்காது. அது இணையத்தில் இருப்பினும் சரியே

ஒருவேலை இன்னமும் பதிப்புரிமையினால் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை எவ்வாறு அறிவீர்கள்?

பொதுவாக உரித்துடையவரின் பெயர் அதில் காணப்படும். காலம் செல்லும் போது அவர் மறைந்திருப்பினும் பொது தகவல் ஏட்டில் அல்லது அவரின் சுயவிபரத்தில் அவரின் பெயர் காணப்படும். உங்களின் தேடலில் சாதகமான விபரங்கள் கிடைக்காவிடின் உங்கள் நாட்டிலுள்ள பதிப்புரிமை அலுவல கத்திலுள்ள பதிப்புரிமை தகவல் ஏட்டை நீங்கள் நாடலாம். அல்லது சம்பந்தப்பட்ட தகவல்களை பெற தொகுப்பு முகாமைத்துவ அமைப்பை அல்லது குறிப்பிட்ட நபரையே நாடலாம். ஒரு வேலைக்கு பல பதிப்புரிமை கள் இருக்கலாம். இவற்றுக்கு பல உரிமையாளாகளும் அவர்களுக்கிடையிலான பாதுகாப்பு காலஎல்லையும் மாறுபடலாம். உதாரணமாக புத்தகம் ஒன்றில் பல மற்றும் மாறுபட்ட உரிமைகளை கொண்ட ஆக்கங்களும் புகைப்படங்களும் இருக்கலாம். அவற்றுக்கான காலவதி திகதி மாறுபட்டிருக்கும்.

எல்லைக்குட்பட்ட, சாதாரண பாவனை அல்லது சாதாரண கொடுக்கல் வாங்கலின் கீழுள்ள பதிப்புரிமத்தினை நீங்கள் எவ்வேளையில் உபயோகிக்கலாம்?

அனைத்து பதிப்புரிமை சட்டங்களும் பல எண்ணிக்கையான வரையறைகளையும், மட்டுப் படுத்தல்களையும் கொண்டது. அவை பதிப்புரிமையினை இலவசமாக உபயோகிக்க அனுமதிக்கும் அல்லது கட்டணம் செலுத்தி பாவிக்க அனுமதிக்கும். இவை தேசத்திற்கு தேசம் மாறுபடும். பொதுவாக வரையறைகளும், மட்டுப்படுத்தல்களும் வெளியான ஆக்கத்தின் அளவினையும் காலத்தையும் உள்ளடக்கும். சிலர் **தனிப்பட்ட தேவைக்காக பிரதியெடுப்பர்** (ஆராய்ச்சி மற்றும் கல்வி தேவைகளுக்கு) சில **நூலகங்களுக்கும் சேகரிப்பிற்குமாக** இருக்கும். (பொதுமக்கள் பெறுவதற்கு சிரமமாக இருப்பின்) மாணவரினால் வகுப்பறையில் உபயோகிக்கப்ப ட்டடை **ஆசிரியர்** மறுபாவனைக்கு உபயோகிக்க எடுப்பதாகவும் இருக்கலாம். அல்லது **அங்கவீனர் களின்** பாவனைக்காகவும் இருக்கலாம்.

பல குழுக்களின் நன்மைக்காக வரையறை களும் மட்டுப்படுத்தல்களும் தேசத்திற்கு தேசம் மாறுபடும். வெகுகுறைவான சந்தர்ப்பங்களி லேயே வரையறைகளும் மட்டுப்படுத்தல்களும் வழிகாட்டல்களுக்காக தேசிய சட்டத்தில் சேர்க்கப்படுகின்றன. இல்லையெனில் நீங்கள் நிபுணர் ஒருவரின் ஆலோசனையை பெற வேண்டும்.

பொதுச்சட்டம் காணப்படும் நாடுகளான அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்க தேசங்களில் வேலைகள் **சாதாரண பாவனை அல்லது சாதாரண கொடுக்கல் வாங்கலின்** கீழுள்ளன. இங்கு சாதாரண பாவனையின் கீழ் குறிப் பிட்ட வகையை சேர்ந்த ஏனையோரின் பதிப்புரிமையால் பாதுகாக்கப்பட்டவற்றை உபயோகிக்க உரிமை யாளரின் அனுமதி தேவையில்லை. அவ்வாறான சந்தர்பங்களில் அவை பதிப்புரிமையாளரின் உரிமைகளை பாதிக்காமலும் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்தாமலும் இருக்க வேண்டும். சாதாரண பாவனைக்கான பொது நிபந்தனைகளை விவரிப்பது சிரமமானது ஏனெனில் உண்மைத்தன்மையுடன் தொடர்பு பட்டது. தமது **தனிப்பட்ட பாவனைக்காக** ஆக்கங்களை பிரதிசெய்பவர்களை காட்டிலும், வர்த்தக தேவைகளுக்காக பிரதியெடுப்ப போருக்கு சாதாரண பாவனை உரிமங்கள் குறைவாகும். சிலர் பத்திகையிலுள்ள புகை படத்தை கல்வித்தேவைக்காக உபயோ கிக்கலாம், வெளியான வேலையொன்றிலிருந்து விலைகூறல் தயாரித்தல், பொறியியல் மென் பொருள் ஒன்றை போட்டித்தன்மையை ஈடுசெய்ய உபயோகித்தல். சாதாரண பாவனை தேசத்திற்கு தேசம் மாறுபட்டிருக்கும்.

ஏனையவர்களின் ஆக்கங்களை அவர்களின் மேற்பார்வையின் கீழ் நீங்கள் செய்த போதிலும் எழுத்தாளரின் பெயரை பல நாடுகளில் குறிப்பிட வேண்டும் என்பதை கவனத்தில் கொள்க.

தனிப்பட்ட பிரதியெடுத்தல்களுக்கான வரி முறை யாது?

சிலர் தமது தனிப்பட்ட பாவனைக்காக பல பதிப்புரிமையுள்ள ஆக்கங்களை பிரதியெடுத் திருப்பர். அவ்வாறான பிரதியெடுப்பு ஊடகங் களுக்கு ஒளிப்பதிவு சாதானங்களை உற்பத்தி செய்வோருக்கும் ஏற்றுமதி செய்வோருக்கும் இலாபகரமான சந்தை யொன்றை ஏற்படுத்து கிறது. தனிப்பட்ட பிரதிகள் அவர்களின் வீடுகளின் அவர்களின் சுதந்திரத்தில் எடுக்கப படுபவை. சில நாடுகளில் தனிப்பட்ட தேவைக்காக பிரதியெடுத்தல் அனுமதிக்கப படுகிறது. முன்னனுமதிகள் தேவைபடுவதில்லை. எனினும் பரிமாற்றல்களில்போது அந்நாடுகள் கலைஞர்கள் நன்மை பெறும் வகையில் வரித்திட்டமொன்றை நடைமுறைபடுத்துகின்றன. வரி திட்டம் இரண்டு காரணிகளை உள்ளடக் கியதாக இருக்கலாம்.

- **உபகரண மற்றும் ஊடக வரி பிரதி யெடுத்தல்:** சீ.டீ, டீ.வீ.டீ தயாரித்தல், வீடீயோ கேசட், ஸ்கேன் செய்தல் உட்பட அனைத்துவிதமான ஒளிப்பதிவு சாதனங்க ளுக்கும் பதிப்புரிமை விலை சேர்க்கப்படும். போட்டோ பிரதியெடுப்பு, வெறுமையான டேப், சீ.டீ. ப்ளாஸ் டிரைவ் என்பவற்றுக்கும் சில நாடுகள் வரியொன்றை வழங்குகின்றன.

- **தொழிற்படல் வரி:** பாடசாலைகள், அரசாங்கம், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழங்கள், நூலகங்கள் மற்றும் உற்பத்தியாளர்களால் பாரிய அளவிலான பிரதியெடுத்தலுக்காக பாவனைக் கட்டணம் ஒன்று செலுத்தப்படுகிறது.

வரி பொதுவாக சேகரிப்பு முகாமைத்துவ அமைப்பினால் உற்பத்தியாளர்கள். ஏற்றுமதியாளர்கள், தொழிற்பாட்டாளர்கள் அல்லது பாவனையாளார்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு குறித்த உரிமையாளருக்கு வழங்கப்படுகின்றது.



பெல்ஜியம் ஓர் உதாரணத்திற்காக.

பெல்ஜியத்தில் பாதுகாக்கப்பட்ட வேலைகளை தமக்கு சொந்தமான உபரகரணங்கள் மூலம் பிரதிசெய்யும் வர்த்தகங்கள் ஊதியம் ஒன்றை செலுத்த வேண்டும். இவ்வூதியம் பெறப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை அமைவாக இருக்க வேண்டும். பெல்ஜியத்தை சேர்ந்த தொகுப்பு முகாமைத்துவ அமைப்பு வரிகளை சேகரித்து வருமானத்தினை முறையான விநியோகம் செய்யும்.

தொழில்நுட்ப ஆற்றலால் பாதுகாக்கப்பட்ட வேலைகளை (TPMs) நீங்கள் உபயோகப்படுத்த முடியுமா?

தொழில்நுட்ப ஆற்றலால் பாதுகாக்கப் பட்டவைகளை வர்த்தக தேவைகளுக்கு உபயோகிக்கும்போது கவனம் தேவை. தந்திரமாக உபயோகிப்பினும் சரியே. பல நாடுகளில் இவ்வாறு செய்தல் சட்டம் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது. அதாவது செயற்பாடு தந்திரமாக அனுமதிகப்பட்டிருப்பினும் பதிப்புரி மைக்கான பொதுவான நிதிகள் இன்னமும் செல்லுபடியாகும். இதன் மூலம் எந்தவகையான எவ்வாறான வேலையும் உரிமையாளரிடமிருந்து முறையான அனுமதி தேவை என்பதை வழியுறுத்துகிறது.

தொழில்நட்ப ஆற்றலால் பாதுகாக்கப்பட்ட ஆக்கங்களை பயன்படுத்தல் உடனடியாக நடக்கலாம். நீங்கள் யாரேனும் ஒருவரின் இலத்திரனியல ் உரிமை முகாமைத்துவ முறை மைக்குள்ளே புகுந்த அதிலுள்ளவற்றை முறையான அனுமதிகள் இன்றி உபயோகி க்கலாம். சில நாடுகளிலுள்ள **தேசிய சட்டங்கள்** தந்திரமான பயன்பாட்டினை சட்டரீதியற்ற ஒன்றாக கருதுவதுடன், அதற்கு மேல் செல்வதையோ அல்லது **தந்திரமிக்க உபகரண ங்களை பெற்று கொள்ள வைப்பதையும்** ஆக்கிரமிப்பாக கருதுகிறது.

மற்றவர்களால் உரிமை கோரப்படும் பாதுகாப்பு பெற்ற வேலைகளின் அனுமதிகளை நீங்கள் எவ்வாறு பெறுவீர்கள்?

பதிப்புரிமை பெற்ற அல்ல அதனோடிணைந்த வேலைகளின் அனுமதிகளை பெற இரண்டு பிரதான முறைகள் உள்ளன. தொடர்பு விபரங்கள் இருப்பின் தொகுப்பு முகாமைத்துவ அமைப்பின் சேவையைப் பெறல்.

குறிப்பிட்ட ஆக்கம் பதிவு செய்யப் ட்டதா என்பதை சம்பந்தப்பட்ட CMO ஊடாக அறிதல். **CMO** வேலையின் தன்மைக்கு ஏற்ப பலவிதங்களில் அனுமதி களை வழங்குகிறது. CMO இலத்திரனியல் அனுமதிகளையும் வழங்குகிறது.

பதிப்புரிமையல்லது அதனோடு இணைந்த உரிமைகள் தொகுப்பு முகாமைத்துவ ஒன்றியத்தினால் முகாமை செய்யப்படாவிடின் நீங்கள் குறிப்பிட்ட உரிமையாளரை நேரிடை யாக அல்லது அவரின் முகவரை தொடர்பு கொள்ள வேண்டும். பதிப்புரிமை அறிவித்த லில் பெயர் குறிப்பிடப்பட்டவரே பொதுவாக பதிப்புரிமையாளராக இருப்பார். எனினும் காலவட்டத்திலும் பொருளாதார காரணங்க ளுக்காகவும் உரிமை இன்னொருவருக்கு மாற்றப்பட்டிருக்கலாம். **தேசிய பதிப்புரிமை பதிவேட்டை** தேடுவதன் மூலம் தற்போதைய உரிமையாளரை அறியலாம். இந்தியா மற்றும் அமெரிக்காவில ் பதிப்புரிமை பதிவு செய்யதல் தொண்டர் சேவையாக செய்யப்படுகிறது. எழுத்தாக்கம் அல்லது இசை சம்பந்தப்பட்ட வேலைக்கு நீங்கள் **வெளியீட் டாளரை அல்லு பதிவு செய்த தயாரிப்பாளரை** தொடர்பு கொள்ள வேண்டும். அவர்கள் அதை மீள்வெளியீடு செய்ய குறைந்த அதிகாரத்தையே கொண்டிருப்பர்.

உரிமைகளில் பல படிவங்கள் காணப்பட லாம், அவற்றிக்கு பல உரிமையாளர்கள் காணப படலாம். உதாரணமாக பாடலொன்று க்கு இசை வெளியீட்டாளர், இசையமைப்பாளர், மற்றும் பாடகர் என பலர் காணப்படலாம்.

முக்கியமான அனுமதிகளுக்கு நிபுணர்களின் ஆலோசனையினை பெற்று நிபந்தனைகளை ஒப்பந்தத்தில் குறிப்பிடுவது விரும்பத்தக்கது. அவ்வொப்பந்தம் நிலையான நிபந்தனைகளை கொண்டிருப்பினும் கூட. நிபுணர் ஒருவரின் கூட்டணி உங்கள் வர்த்தக தேவைக்கு பொருத்தமாக அனுமதியை பெற சிறந்த தீர்வினை வழங்குவார்.



நீங்கள் பாவிக்க விரும்பும் வேலையின் பதிப்புரிமை யாளரின் அனுமதி உங்களுக்கு வேண்டும். எழுத்தாளர்கள் தமது ஆக்களை வெளியீட்டாளர் களுக்கு அல்லது தொகுப்பு முகாமை ஒன்றியத் திற்கு முகாமை செய்ய பொறுப்பளித்திருப்பர்.

உங்களின் வர்த்தகத்திற்கான ஆக்கிரமிப்பு அபாயத்தை எவ்வாறு குறைக்க முடியும்?

நீதிமன்றில் பதிப்புரிமை ஆக்கிரமிப்பு மிகுந்த செலவுமிக்கதாக இருக்கலாம். அது ஆக்கிரமிப் பினை தடுக்கும் கொள்கைகளை செயற்படுத்த உதவலாம். கீழுள்ளவைகள் சிபாரிசு செய்யக் கூடியவை.

- உங்கள் நிறுவன ஊழியர்களை அறிவூ ட்டல், அதன் மூலம் அவர்கள் தமது வேலைகளின் பதிப்புரிமை ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை அறிவர்

- தேவையானபட்சத்தில் ஒப்பங்தங்களை, அனுமதிகளை எழுத்தில் பெறல். ஊழியர் அவ்வாறான ஒப்பந்தங்கள் மற்றும் அனுமதி கள் பற்றி அறிந்திருப்பதை உறுதி செய்தல்.

- பதிப்புரிமை ஆக்கிரமிப்பு செய்யப்படக் கூடிய உபகரணங்களில் (போட்டோ கொப்பி, சீ.டீ, டீ.வீ.டீ பனர்) உபகரணம் பதிப்புரிமை ஆக்கிரமிப்பிற்கு பயன்படுத்த ப்படக் கூடாது என தெளிவான அறிவித்தலை பயன் படுத்தல்.

- உங்கள் ஊழியர்கள் அலுவலகத்தில் இணையம் மூலம் பதிப்புரிமையற்றவை களை பதிவிறக்கம் செய்வதை தடை செய்தல்.

- உங்களின் வர்த்தகம் தொழில்நுட்பத்தி னால் பாதுகாக்கப்பட்டவைகளை அடிக்கடி பயன்படுத்த வேண்டியிருப்பின் ஊழியர் தொழில்நுட்பத்தினால் பாது காக்கப்பட்டவைகளின் உரிமையாளரின் அனுமதியின்றி அவற்றை தந்திரமாக பாவிப்பதிலிருந்தும் தடுக்க கொள்கை களை ஏற்படுத்துங்கள்.

ஒவ்வொரு வர்த்தகமும் அதன் வர்த்தக தன்மைக்கும் பாவனைக்கும் ஏற்றவகையிலான தெளிவான பதிப்புரிமை அனுமதியினை பெறக்கூடியதாக, பதிப்புரிமை செய்கைக்கு விசாலமான கொள்கைகளை கொண்டிருக்க வேண்டும். பதிப்புரிமை செய்கைக்கு ஏற்ற கலாச்சாரம் ஒன்றை ஏற்படுத்தல் உங்களுக்கான பதிப்புரிமை ஆக்கிரமிப்பு அபாயத்தை குறைக்கும்.



சாராம்சத்தினை சரிபார்த்தல்

- **உங்களின் பதிப்புரிமை பாதுகாப்பினை உச்சப்படுத்தல்**: உங்கள் ஆக்கத்தை தொண்டர் பதிப்புரிமை பதிவு வசதியுள்ள தேசிய பதிப்புரிமை அலுவலகத்தில் பதிவுசெய்தல். உங்கள் ஆக்கத்துக்கு பதிப்புரிமை அறிவித்தல் ஒன்றை விடுங்கள். இலத்திரனியல் வேலைகளை பாதுகாக்க இலத்திரனியல் உரிமை முகாமைத்துவ காரணிகளை பயன் படுத்துங்கள்.

- **பதிப்புரிமை உரிமங்களை நிச்சயம் செய்து கொள்ளல்:** உங்களின் நிறுவனத்திற்கு வடிவமைக்கப்பட்ட ஏதேனும் ஆக்கத்தின் யின் பதிப்புரிமை உரிமத்தினை தெளிவுபடுத்தும் எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்றை ஊழியர்கள், ஒப்பந்தக்காரர் மற்றும் சம்பந்தமுடைய ஏனையோருடன் செய்து கொள்ளுங்கள்.

- **ஆக்கிரமிப்பினை தவிர்த்திடுங்கள்:** உங்களுக்கு அல்லது உங்கள் வர்த்தகத் திற்கு உரித்தில்லாத ஏதேனும் பொருளினை நீங்கள் உபயோகிப்பின் அதற்கு முறையான அனுமதி தேவையா என்பதை விசாரித்துக் கொள்ளுங்கள். தேவையெனின் அதை பெற்றுக்கொள்ளுங்கள்.

- சுருக்கமாக கூறின் உங்கள் பதிப்புரிமையின் **அதிகபட்ச பயனை பெறுங்கள்**. அவற்றை விற்பனை செய்வதிலும் பார்க்க அவற்றுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குங்கள். வரையறுக்கப்பட்ட அனுமதிகளை வழங்கிடுங்கள், அப்போது அனுமதி பெறுநரின் தேவைக்கான விதத்தில் மட்டுமே அது தொழிற்படும்.

7. பதிப்புரிமத்தினை நடைமுறைப்படுத்தல்

உங்கள் பதிப்புரிமை எப்போது ஆக்கிரமிக்கப்படுகிறது?

ஏதெனும் செயற்பாட்டென்றின்போது எவரேனும் ஒருவர் உரிமையாளரின் அனுமதியின்றி, உரிமையாளர் மாத்திரம் ஈடுபடக்கூடிய செயலை செயற்படுத்தின், அவர் உரிமையாளரின் பதிப்புரிமையினை அனுமதி இன்மையால், ஆக்கிரமிப்பு செய்தவராவார்.

அனுமதி இன்மையால் பொருளாதார உரிமைகள் ஆக்கிரமிக்கப்படலாம்:

- நீங்கள் மாத்திரம் செய்யக்கூடிய சட்ட மிருப்பினும்,
- சில நாடுகளில் ஆக்கிரமிப்பு கொடுக்கல் வாங்கல்கள் (கடத்தக்பட்ட சீ.டீ விற்பனை) அல்லது
- சில நாடுகளில் ஆக்கிரமிப்பு செயல்கள் சட்டதிட்டங்களுக்கு உட்படவில்லையெனில்

ஆக்கத்தின் ஒரு **பகுதி** உபயோகிக்கப்படினும் பதிப்புரிமை ஆக்கிரமிப்பாகும். எனவே **தரம்** மற்றும் **கணியம்** இரண்டுமே கவனத்தில் கொள்ள ப்படும். எனினும் எந்தளவு ஆக்கம் ஆக்கிரமிப்பு இன்று உபயோகிக்கப்படலாம் என்பதற்கு பொதுவான சட்டமொன்றும் இல்லை. உண்மை நிலவரத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப.

நீதி சம்பந்தமான உரிமைகள் ஆக்கிரமிக்கப் படலாம்.

- எழுத்தாளராக உங்கள் வேலை அடையாளம் காணப்படாவிடின்
- உங்கள் வேலைக்கு திருத்தம் தேவைபட்டு அது உங்கள் கௌரவத்தை பாதிப்பின்

அனுமதியற்ற பாவனைக்கு எதிராக உங்கள் பதிப்புரிமைகளை பாதுகாக்க தந்திர **தொழில் நுட்ப பாதுகாப்பு முறைகளை** கையாண்ட போதிலும் ஒருவரின் தயாரிப்பில் ஏற்றுமதி யில், வர்த்தக செயற்பாட்டில் ஆக்கிரமிப்பு நிகழலாம். உங்களின் ஆக்கத்தின் பதிப்புரிமை சம்பந்தமான **முகாமைத்துவ விபரங்களை எவரேனும் அகற்றினாலோ** அல்லது திருத்த ங்கள் செய்தாலோ ஆக்கிரமிப்பு நிகழலாம்.(பார்க்க பக. 26)



www.wipo.int/sme/

ஒரு நடவடிக்கை பல பதிப்புரிமையாளர் களின் உரிமைகளை உடைத்தெறியலாம். உதாரண மாக ஒளிபரப்பு நிகழச்சிகளின் நாடாக்களை விற்பனை செய்வது ஆக்கிரமிப்பாகும். இச் செய்கையினால் இசை வெளியீட்டாளர். பாடகர், இசை ஒருங்கிணைப்பாளர் என பலரின் உரிமை கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. ஒவ்வொரு துறை உரிமையாளர்களும் தனித்தனி நட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

உங்களின் உரிமங்கள் மீறப்படும் போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

பதிப்புரிமை மீறலால் ஏற்படும் சுமை பதிப்புரிமை யாளரையே சாரும். உங்ககளின் உரிமைகள் மீறப்படுவதை இனங்கண்டு அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் உங்கள பதிப்புரிமையினை நிலைபெறச் செய்வது பற்றி நீங்களே முடிவெ டுக்க வேண்டும்.

நீங்கள் சட்ட நடவடிக்கை எடுக்க விரும்பின் அல்லது தீர்வொன்று காண விரும்பின் உங்களுக்கு பதிப்புரிமை சட்டத்தரணி அல்லது சட்ட நிறுவகம் ஒன்று உங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல் களையும் தரவல்லது. நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்கள் வர்த்தக கட்டமைப் பிற்கும் காரணி களும் சாதகமாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்கள் பதிப்புரிமை மீறப்பட்டு அல்லது ஆக்கிரமிக்கப்பட்டிருப்பின் அதனை தீர்க மீறியவருக்கு **அறிவுறுத்தல் கடிதம்** ஒன்றை அனுப்பலாம். (இக்கடிதத்தை ஆங்கிலத்தில் cease and desist latter என அழைப்பர்) இக்கடிதத்தை வரைய நீங்கள் சட்டத்தரணி ஒருவரின் உதவியை நாடுவது சிறந்ததாகும். சில நாடுகளில் எவரேனும் உங்கள் உரிமைகளை இணையத்தில் ஆக்கிரமித்திருப்பின் கீழுள்ள தெரிவுகள் உங்களுக்கு உண்டு.

- குறிப்பிட்ட சட்டக்கடிதத்தினை இணைய சேவை வழங்குனருக்கு அனுப்பிய குறித்த வேலையினை இணையதளத்தலிருந்து அகற்றவோ, அல்லது உபயோகத்தை தடுக்கவோ வேண்டலாம். அல்லது
- இணைய சேவை வழங்குனர் தமது வாடிக்கையாளர்களுக்கு இணைய ஆக்கிரமி ப்பினை பற்றி தெளிவுபடுத்தலாம்.

அதிர்ச்சி வைத்தியம் மிகப்பெரிய யுக்தியாகும். சட்டரீதியான கடிதம் ஒன்றை வழங்குவது ஆக்கிரமிப்பாளர் தடயங்களை மறைப்பதற்கு அல்லது அழிப்பதற்கு உதவலாம். நீங்கள் ஆக்கிரமிப்பாளரை தண்டிக்க விரும்பின், அவரின் இருப்பிடம் பற்றியும் அறிந்திருப்பின் சட்டரீதியான கடிதத்தினை வழங்காமல் நேரிடையாக நீதிமன்றம் சென்று குறித்த இடத்தினை பரிட்சிப்பதற்கான அனுமதியினை பெற்று நேரிடையாக சென்றால் அதிர்ச்சியை கொடுத்து, தடையங்களையும் கைபற்ற முடியும். அல்லது முடக்க முடியும்.

நீதிமன்ற நடமுறைகளுக்கு காலம் செல்லலாம். இக்காலப்பகுதியில் ஏற்படும் இழப்பினை குறைக்க நீங்கள் ஆக்கிரமிப்பு உரிமை யடங்கியதை, பொருட்களை வர்த்தக சந்தை யினுள் வராமல் தடுக்கலாம். அநேக நாடுகளில் நீதிமன்றங்களின் இறுதித்தீர்ப்பு வரும் வரை ஆக்கிரமிப்பாளர் மேலும் சேதம் விளைவி க்காமலும் தடயங்களை அழிக்காம லம் இருக்க இடைக்கால தடை பிறப்பிக்கப்படு கின்றது.

ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக **சட்ட நடவடிக்கை** எடுக்க சிறந்த சந்தர்ப்பங்கள்: உங்கள் உரிமையினை நிரூபிக்கக் கூடியதாக இருப்பின் உங்கள் உரிமை மீறப்பட்டிருப்பதை அல்லது ஆக்கிரமிக்க ப்பட்டிருப்பதை நிரூபிக்க முடியுமாக இருப்பின், சட்ட நடவடிக்கைக்கு ஆகும் செலவினை விட அதனால் கிட்டும் இலாபம் அல்லது வரப்பிரசாதம் அதிகம் எனில், நீதிமன்றம் ஏற்பட்ட இழப்பு மற்றும் ஆக்கிர மிப்பிற்காக நஷ்டஈடு வழங்க பணித்து மீறப்பட்ட பொருட்களை அல்லது வேலையை உரியவரிடம் கையளிக்கப் பணிக்கும். ஆக்கிரமிப்பாளருடன் அதனை பரப்புவதில் மற்றும் விநியோகம் செய்வதில் மூன்றாம் தரப்பொன்றும் சம்பந்தப்பட் டிருக்கலாம். மேலும் வேண்டுகோள்களுக் கமைய கைபற்றியவற்றை அழிக்கவும் நீதிமன்றம் உத்தரவிடும்.

ஆக்கிரமிப்பு வேலைகள் மூலம் வர்த்தக ரீதியாக செயல்படல் பதிப்புரிமை சட்டத்திற்கு அமைய **குற்றமாக** கருதப்படும். இதற்கான தண்டனை தண்டமாகவோ, சிறையாகவோ இருக்கலாம். கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க நீங்கள் சுங்க இலாகாவினை தொடர்பு கொள்ள வேண்டும். பல நாடுகள் எல்லைகாவல் முறைகளை நடைமுறைப்படுத்துகின்றன. இதன் மூலம் பதிப்புரிமையுள்ளவர்களும், அனுமதிப் பத்திரம் கொண்டிருப்போரும் **சந்தேகத்திற் கிடமான கடத்தல்களை தடைசெய்யவும்,** இனங்காணவும் முடியும்.

நீதிமன்றம் செல்லாமல் பதிப்புரிமை ஆக்கிரமிப்புகளை கையாள்வது எப்படி?

ஆக்கிரமிப்புகளை **தன்னிச்சையாக அல்லது மத்தியஸ்தம்** மூலம் கையாள்வதே சிறப்பான முறையாகும். மத்தியஸ்தம் மூலம் கையாள்தல் முழுஉத்தியோகபற்று அற்ற முறையிலும், குறைந்த செலவிலும், குறுகிய காலஎல்லையில் இலகுவாகவும் செயற்படுத்த முடியும். மத்தியஸ்த முறையில் தீர்வு இருபக்கதாரின் கட்டுப்பாட்டில் இருக்கும். இது பதிய வர்த்தக தொடர்ப்புகளை ஏற்படுத்தவும் புதிய அனுமதிப் பத்திரத்தினை எதிர்காலங்களில் உருவாக்கவும் உதவும். மத்தியஸ்தங்கள் பற்றிய நிபந்தனை களில் ஒப்பந்தகளில் குறிப்பிடுவது சிறந்தது. மத்தியஸ்தம் வகித்தல் அல்லாத தன்னிச சையாக செயல்படுதல் பற்றி விபரங்களை அறிய உலக அறிவுசார் சொத்து நிறுவனத்தின் இணையத்தளத்தினை பாருங்கள்

arbiter.wipo.int/center/index.html.

பின்னிணைப்பு 1

பயன்தரும் இணையத்தனங்கள்

உலக அறிவுசார் சொத்து நிறுவனம்: ***www.wipo.int***

அறிவுசார் சொத்து நிறுவனத்தின் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களின் பிரிவு:
www.wipo.int/sme/en/

பதிப்புரிமை மற்றும் அதனோடு இணைந்த உரிமைகள் பற்றிய அறிவுசார் சொத்து நிறுவனத்தின் இணையத்தளம்: ***www.wipo.int/copyright/en/index.html***

நடைமுறைப்படுத்தலுக்கான அறிவுசார் சொத்து நிறுவனத்தின் இணையத்தளம்:
www.wipo.int/enforcement/en/index.html

அறிவுசார் சொத்து நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து இலத்திரனியல் புத்தகங்களை வாங்க ***www.wipo.int/ebookshop. These include:***

- பதிப்புரிமை மற்றும் அதனோடுணைந்த உரிமைகள் அனுதிகள் பற்றிய பிரசுரம் இல. 897
- பதிப்புரிமை மற்றும் அதனோடுணைந்த உரிமைகள் உடனான தொகுப்பு முமைத்துவம். பிரசுரம் இல. 855

இலவச பிரசுரங்களை பதிவிறக்கம் செய்ய ***www.wipo.int/publications. These include:***

- பதிப்புரிமை மற்றும் அதனோடுணைந்த உரிமைகள் விளங்கிக்கொள்ளல் பிரசுரம் இல. 909
- கலைஞர்கள் மற்றும் பார்வையாளர்களிடமிருந்து: பதிப்புரிமை மற்றும் அதனோடு இணைந்த உரிமைகள் மற்றும் தொகுப்பு முகாமைத்துவ முறைமை பிரசுரம் இல. 922
- தொகுப்பு முகாமைத்துவ முறைமை பிரசுரம் இல. 924

தேசிய பதிப்புரிமை நிர்வாக பதிவேடு:
www.wipo.int/news/en/links/addresses/cr/index.htm

சங்கங்களின் சர்வதேச பணியகம் இயந்திரவியல் பதிவுகளையும் மீளமைத்தலையும் நிர்வாகம் செய்கிறது. www.biem.org

பிஸ்னஸ் சொப்டெயார் அலியன்ஸ் (BSA) www.biem.org

எழுத்தாளர்கள் மற்றும் இசைஒருங்கிணைப்பாளர்களுக்காக சர்வதேச சங்கங்களின் ஒன்றியம் (CISAC; acronym from French name): www.cisac.org

திரைப்பட தயாரிப்பாளர்களின் சர்வதேச சம்மேளனம் (FIAPF; acronym from French name): www.fiapf.org

மீள்உற்பத்தி உரிமை சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் (IFRRO): www.ifrro.org

International Federation of the Phonographic Industry (IFPI): www.ifpi.org

சுயாதீன இசை நிறுவனங்களின் சங்கம் (IMPALA): www.impalasite.org

சர்வதேச வெளியீட்டாளர்கள் சங்கம் (IPA): www.ipa-uie.org

மென்பொருள் மற்றும் தகவல் தொழிற்துறைகளின் சங்கம் (SIIA): www.siia.net

பின்னிணைப்பு 2

தேசிய பதிப்புரிமை நிர்வாகத்தினரின் இணைய முகவரிகள்

அல்ஜீரியா	***www.onda@wissal.dz***
அன்டோரா	***www.ompa.ad***
ஆஜண்டினா	***www2.jus.gov.ar/minjus/ssjyal/autor***
அவுஸ்திரேலியா	***www.ag.gov.au***
பார்படோஸ்	***www.caipo.gov.bb***
பெலோரஸ்	***vkudashov@belpatent.gin.by***
	ncip@belpatent.gin.by
பேலிசி	***www.belipo/bz***
பொஸ்னியா	***www.bih.nat.ba/zsmp***
பிரேசில்	***www.minc.gov.br***
கனடா	***cipo.gc.ca***
சீனா (ஹொங்கொங் -SAR)	***www.info.gov.hk/ipd***
கொலம்பியா	***www.derautor.gov.co***
குரோஷியா	***www.dziv.hr***
செக்குடியரசு	***www.mkcr.cz***
டென்மார்க்	***www.kum.dk***
எல்-சல்வடோர்	***www.cnr.gob.sv***
பின்லாந்து	***www.minedu.fi***
ஜோர்ஜியா	***www.global-erty.net/saqpatenti***
ஜேர்மனி	***www.bmj.bund.de***
ஹங்கேரி	***www.hpo.hu***
ஐஸ்லாந்து	***www.ministryofeducation.is***
இந்தியா	***copyright.gov.in***
இந்தோனேசியா	***www.dgip.go.id***
அயர்லாந்து	***www.entemp.ie***
கிரிகிஸ்தான்	***www.kyrgyzpatent.kg***
லட்வியா	***www.km.gov.lv***
லெபனான்	***www.economy.gov.lb***

லித்துவேனியா	***www.muza.lt***
லெக்ஸம்பேர்க்	***www.etat.lu/EC***
மலேசியா	***mipc.gov.my***
மெக்சிகோ	***www.sep.gob.mx/wb2/sep/sep_459_indautor***
மொனோகோ	***www.european-patent-office.org/patlib/country/monaco/***
மங்கோலியா	***www.ipom.mn***
நியூஸிலாந்து	***www.med.govt.nz***
நைகர்	***www.bnda.ne.wipo.net***
நோர்வே	***www.dep.no/kd/***
பெரு	***www.indecopi.gob.pe***
பிலிபைன்ஸ்	***ipophil.gov.ph***
கொரியக்குடியரசு	***www.mct.go.kr/english***
ரசியா	***www.rupto.ru***
சிங்கப்பூர்	***www.gov.sg/minlaw/ipos***
	www.ipos.gov.sg/
சுலோவேகியா	***www.culture.gov.sk***
சுலோவேனியா	***www.sipo.mzt.si/***
ஸ்பெயின்	***www.mcu.es/Propiedad_Intelectual/indice.htm***
சுவிஸ்சலாந்து	***www.ige.ch***
தாய்லாந்து	***www.ipthailand.org***
துருக்கி	***www.kultur.gov.tr***
உக்ரைன்	***www.sdip.gov.ua***
	www.uacrr.kiev.ua
இங்கிலாந்து	***www.patent.gov.uk***
ஐக்கிய அமெரிக்கா	***www.loc.gov/copyright***

குறிப்பு: துல்லியமான உடனடி தகவல்களை அறிய கீழுள்ள இணைய முகவரிக்கு விஜயம் செய்யுங்கள்.

www.wipo.int/directory

ANNEX III

தனிப்பட்ட பிரசுரிக்கும் உரிமையும் சம்பந்தப்பட்ட உரிமைகளை சம்பந்தமாக பிரதான சர்வதேச உடன்படிக்கைகளின் சுருக்கம்

இலக்கிய கலை பாதுகாப்புக்காக Berne உடன்படிக்கை (Berne) உடன்படிக்கை (1986)
Berne உடன்படிக்கை பிரதான சர்வதேச தனிப்பட்ட பிரசுரிக்கும் உரிமையுள்ள ஒப்பந்தம். Berne உடன்படிக்கை மற்ற விடயங்களுடன் தேசிய முறை அதாவது ஒவ்வொரு நாட்டிலும் அந்நிய நாட்டு கதாசிரியர்கள் தேசிய கதாசிரியர்களை போல அதே உரிமைகளை அனுபவிக்கின்றனர். இந்த உடனபடிக்கை தற்போது 162 நாடுகளில் அமுல் நடுத்தப்படுகிறது. உடன்படிக்கை செய்யும் கட்சிகளினதும் உடன்படிக்கையின் மூலவாக்கியங்களும் www.wipo.int/treaties/en/berne/index.html. கிடைக்கிறது.

நடிகர்களுக்கும் ஒலி தயாரிப்பாளர்களுக்கும் ஒலிபரப்பு தயாரிப்பாளர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கும் சர்வதேச உடன்படிக்கை (The Rome Convention) (1961)
ரோம் ஒப்பந்தம் அயலவரின் உரிமைகளுக்கு பாதுகாப்பளிக்கின்றது. நடிகர்கள் அவர்களது நடிப்புக்கு உரிமைகளை அனுபவிக்கின்றனர். ஒலிதயாரிப்பாளர்கள் அவர்களுடைய ஒலிபதிவுக்கும் வானொலி தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் அவர்களின் ஒளிரப்பிற்கு உரிமையை பாவிக்கின்றனர். இந்த ஒப்பந்த அங்கத்துவம் தற்போது 83 நாடுகளால் கைசாத்திடப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் முழு விபரங்களையும் ஒப்பந்த கட்சிகளை www.wipo.int/treaties/en/rome/index.html காணலாம்.

சட்ட விரோதமாக ஒலி தயாரிப்பாளர்களிடம் இருந்து ஒலி தயாரிப்பாளர்களை பாதுகாக்கும் ஒப்பந்தம். (The Phonograms Convention) (1971)
ஒவ்வொரு ஒப்பந்தம் செய்யும் நாடு இன்னாரு ஒப்பந்தம் செய்யும் நாடு தயாரிப்பாளரின் அனுமதியின்றி நகல்களை அறக்குமதி செய்து பொது மக்களுக்கு விநியோகிப்பதிலிருந்து பாதுகாக்கிறது. பிரோகிராம் என்பது கேட்பதற்கு (சினிமா, வீடியோ சேகட்டினை) ஒலி அல்ல (Disc or tape) இந்த ஒப்பந்தம் 75 நாடுகளில் அமுல் நடத்தப்படுகிறது. ஒப்பந்த கட்சிகளும் ஒப்பந்தத்தினை முழுவாக்கியங்களும் www.wipo.int/treaties/en/phonograms/index.html காணப்படுகின்றது

சர்வதேச வியாபாரம் போதியளவு நற்பயனளிக்கும் IP உரிமை குறிவைத்து TRIPS ஒப்பந்தம் (1994)

சரியான தரம் கொள்கைகள் வியாபர சம்பந்தமான IP உரிமைகளுக்கு பாதுகாக்க வரையப்பட்டது. இந்த ஒப்பந்தம் உரிமைகளை அமுல் நடத்த உறுதி படுத்துகிறது. இது உலக வியாபார சங்கத்தின் எல்லா 149 அங்கத்தவர்களையும் சேர்த்துள்ளது. இது http://www.wto.org/english/docs_e/legal_e/27-trips.doc. *வாசிக்க கூடியதாக உள்ளது.*

WIPO WCT and WIPO performance WPPT (1996 WIPO **ஒப்பந்தம்** (WCT)

WIPO நடிப்பு ஒலி ஒப்பந்தம் கதாசிரியர் நடிகர்கள் ஒலிப்பதிவாளர்கள் Digital world சவாலில் பாதுகாக்கப்படுவதற்காக 1996 இல் முடிவடைந்தது.

தகவல்கள் சங்கத்தின் புதிய தேவைகளுக்கு பாதுகாப்புக்கு Berne ஒப்பந்தத்தை WCT சேர்த்துக் கொள்கிறது. இதனால் கருதப்படுவது Berne ஒப்பந்தத்தில் எல்லா விதி முறைகளும் டிஜிட்டல் சூழ் நிலைக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

எல்லா WCT ஒப்பந்த கட்சிகளை Berne ஒப்பந்தகடி உள்ள கட்சியாயிருந்தாலும் கணிசமான Proovision எதிர் நோக்க வேண்டும்.

கதாசிரியர்களுக்கு WCT மூன்று உரிமைகளை கொடுக்கிறது

மூலநூல்களை அல்லது பிரதிநிதிகள் பொது மக்களுக்கு விநியோகிப்பதை அல்லது விற்பனை செய்ய அனுமதித்தல் அல்லது தடை செய்தல்.

வர்த்தக வாடகைக்குறிய கணணி நிகழ்ச்சிகளை திரைப்பட வேலைகள் (இவைகளை அதிகமாக பிரதியெடுத்தல், மீண்டும் பிரதி பண்ணலை பாதிக்கும். பொது மக்களுக்கு மூலம் அல்லது பிரதிகளை பொது மக்கள் தனியாக ஒரு நேரத்தில் ஒரு இடத்தில் பெற்றுக் கொள்வர். இதை அனுமதிப்பது அல்லது தடை செய்வது WCT மாச் 6ந் திகதி 2002 அமுலுக்கு வந்து 59 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

WPT க்கு எதிர்மாறாக WPPT சம்பந்தப்பட்ட உரிமையுள்ளவர்களுடன் வியாபாரம் செய்யும். இதன் நோக்கம் தகவல் துறையிலுள்ள நடிகர்கள், ஒலிப்பதிவாளர்களுக்கு பாதுகாப்பு. ஆனால் ஆடியோ விஷ்வல் நாடகங்களுக்கு இது செல்லாது. நடிகர்கள் பாடுபவர்கள் வாத்தியம் வாசிப்பவர்கள் ஆகியோருடைய பொருளாதார ஆளுமை உரிமைகளை பாதுகாக்கும். அவைகள் ஒலிநாடாவில் பதிவு செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒலிபதிவு செய்ய தைரியம் பொறுப்பேற்பவர்களை உதிவு செய்யும்.

பொது மக்களுக்கு மூலம் அல்லது பிரதிகளை பொது மக்கள் தனியாக ஒரு நேரத்தில் ஒரு இடத்தில் பெற்றுக் கொள்வர். இதை அனுமதிப்பது அல்லது தடை செய்வது WCT மாச் 6ந் திகதி 2002 அமுலுக்கு வந்து 59 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றனர். (பார்க்க : www.wipo.int/treaties/en/ip/wct/index.html).

WPPT க்கு எதிர்மாறாக WPPT சம்பந்தப்பட்ட உரிமையுள்ளவர்களுடன் வியாபாரம் செய்யும். இதன் நோக்கம் தகவல் துறையிலுள்ள நடிகர்கள், ஒலிப்பதிவாளர்களுக்கு பாதுகாப்பு. ஆனால் ஆடியோ விஷ்வல் நாடகங்களுக்கு இது செல்லாது. நடிகர்கள் பாடுபவர்கள் வாத்தியம் வாசிப்பவர்கள் ஆகியோருடைய பொருளாதார ஆளுமை உரிமைகளை பாதுகாக்கும். அவைகள் ஒலிநாடாவில் பதிவு செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒலிபதிவு செய்ய தைரியம் பொறுப்பேற்பவர்களை உதிவு செய்யும்.

WPPT உரிமையுள்ளவர்களை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஒலிப்பதிவை திரும்ப செய்வதை அனுமதிப்பது அல்லது தடை செய்வது
ஒலிநாடாவின் மூலப் பிரதிகளை அல்லது நகல் பிரதிகளை விற்பனை மூலம் உரிமையாளரை மாற்றுவது பொது மக்களுக்கு கிடைக்கச் செய்வது அனுமதிப்பது அல்லத தடை செய்வது
அல்லது பிரதிகளை பொது மக்களுக்கு ஊழஅஅநசஉயைட சநவெநட செய்வதை அனுமதிப்பது அல்லது தடை செய்வது.
தந்தி மூலமோ கம்பி இல்லாத தந்தி மூலமோ பொது மக்களுக்கு அறிவித்து நிலையான நிகழ்ச்சிகளுக்கு அவர்களை விரும்பிய இடத்திற்கும் நேரத்திற்கும் செல்வதை அனுமதித்தல் அல்லது தடை செய்தல்.

ஒலிநாடாவில் பதிவு செய்யப்படாமல் நேரடிய நாடகங்களுக்கு ரூீ நடிகர்களுக்கு உரிமை கொடுத்துள்ளது.

பொது மக்களுக்கு ஒலிபரப்பு செய்ய
மக்களுக்கு அறியத் தருவது
ஒலியை பதிவு செய்வது

WPPT மே மாதம் 20 ஆம்திகதி 2002 ம் ஆண்டு அமுலுக்கு வந்து 58 நாடுகள் அங்கம் வகிக்கின்றனர். அங்கத்துவ நாடுகளை அறிய விஜயம் செய்யுங்கள் (பார்க்க: www.wipo.int/treaties/en/ip/wppt/index.html).

Cyber Crime **ஒப்பந்தம்** (2001)

ஐரோப்பிய சபையால் வரையப்பட்ட Cyber Crime ஒப்பந்தம் சமூகத்தை Cyber Crime இருந்துபாதுகாக்கிறது. இது குற்றச் செயல்கள் இணையத்தில் மற்றும் கணணி மூலம் தனிபிரசுரிமையை மீறல். கணணி சம்பந்தமான வஞ்சனை சிறுவர் துஷ்பிரயோகம் பாதுகாப்பு மீறல். இவைகளிலிருந்து சமூகத்தை பாதுகாத்தல் இதில் அதிக அதிகாரங்களும் செயல் முறைகளும் அடங்கும்.
conventions.coe.int/Treaty/en/Treaties/Html/185.htm.

Copyright Directive (2001)

ஐரோப்பிய Community Directive பிரதி அமைப்பு சம்பந்தப்பட்ட உரிமைகளை தகவல் துறையில் முக்கிய இடங்களில் இணைய வர்த்தகம் டிஜிட்டல் டெக்னொலஜி சவால்களை எதிர்நோக்கும் போது அமைதியை உண்டாக்கிறது. இந்ம உரிமைகளுக்கு விதி விலக்கு அளித்து சட்ட பாதுகாப்பு அளிக்கிறது.

அனுபந்தம் IV

எழுத்தாக்க மற்றும் கலையாக்க உரிமைகளை பாதுகாக்கும் பேர்னி கன்வன்சனை சேர்ந்த நாடுகளின் பட்டியல் (Status as of June 16, 2006)

அல்பேனியா
அல்ஜீரியா
அந்தோர
ஆன்டிகுவா மற்றும் பார்புடா
ஆர்ஜன்டினா
ஆர்மேனியா
அவுஸ்திரேலியா
ஆஸ்திரியா
அசர்பைஜான்
பஹாமாஸ்
பஹ்ரைன்
பங்களாதேஷ்
பார்படோஸ்
பெலாரஸ்
பெல்ஜியம்
பீலிஜி
பெனின்
பூட்டான்
பொலிவியா
பொஸ்னியா மற்றம ஹெர்சிகோவினா
பொஸ்வானா
பிரேசில்
புரூனே டருஸ்ஸலாம்
பல்கேரியா
பார்கினா பாசோ
கமரூன்
கனடா
கேப்வெர்டா
மத்திய ஆபிரிக்க குடியரசு
சாட்
சிலி
சீனா
கொலம்பியா
கொமரோஸ்
கொங்கோ
கொஸ்டாரிக்கா
ஐவரி கோஸ்ட்
குரோஷியா
கியூபா
சைப்பிரஸ்
செக்குடியரசு
கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு
கொங்கோ ஜனநாயக குடியரசு
டென்மார்க்
டிஜிபோட்டி
டொமினிகா
டொமினிக் குடியரசு
ஈக்குவடோர்
எகிப்து
எல்-சல்வாடோர்
எக்குவடோரியல் ஜினியா
எஸ்தோனியா
பிஜி
பின்லாந்து
பிரான்ஸ்
காபொன்
கம்பியா
ஜோர்ஜியா
ஜேர்மனி
கானா
கீரீஸ்
கிரேணாடா
கோத்தமால
கியூனியா
கியூனியா பிசாவு
குயானா
ஹெய்ட்டி
ஹோலி சீ
ஹொன்டோரஸ்
ஹங்கேரி
ஐஸ்லாந்து
இந்தியா
இந்தோனேசியா
அயர்லாந்து
இஸ்ரேல்
இத்தாலி
ஜெமேக்கா
ஜப்பான்
ஜோர்டான்
கசகஸ்தான்
கென்யா

கிரிகெஸ்தான்
லத்வியா
லெபனான்
லீசோதோ
லைபேரியா
லிபிய அரபு ஜமாஹிரியா
லிசென்டெனின்
லிதுவேனியா
லக்ஸம்பேர்க்
மடகஸ்கார்
மாலாவி
மலேஷியா
மாலி
மல்டா
மவ்ரிடானியா
மெரிசியஸ்
மெக்ஸிகோ
மிக்ரோனிசியா (கூட்டாட்சி நாடுகள்)
மொனோகோ
மொங்கோலி
மொரோக்கோ
நமிபியா
நேபாளம்
நெதர்லாந்து
நியூசிலாந்து
நிக்ராகுவா
நைகர்
நைஜீரியா
நோர்வே
ஓமான்
பாகிஸ்தான்
பனாமா
பெரகுவா
பெரு
பிலிபைன்ஸ்
போலாந்து
போர்த்துக்கல்
கட்டார்
கொரிய குடியரசு
மொல்டோவா குடியரசு
ரோமேனியா
ரஷ்யா
ருவான்டா
சேயிண்ட் கீட்ஸ் மற்றும்
நெவிஸ்
செள் லூசியா
சென் வின்சன்ட் மற்றும்
கிரினாடின்ஸ்
சவூதி அரேபியா
சமோஹா
செனகல்
சேர்பியா மற்றும்
மொண்டெனீக்ரோ
சிங்கப்பூர்
ஸ்லோவேகியா
ஸ்லோவேனியா
தென் ஆபிரிக்கா
ஸ்பெயின்
இலங்கை
சூடான்
சூரிநேம்
சுவாசிலாந்து
ஸ்வீடன்
சுவிஸ்லாந்து
சிரியன்அரபு குடியாசு
தாஜிக்ஸ்தான்
தாய்லாந்து
முன்னாள் யூகோஸ்லாவிய
குடியரசு மாசிடோனியா
டோகோ
டொன்கா
டிரினிடாட மற்றும்
டொபாகோ
டியுனிசியா
துருக்கி
யுக்ரைன்
ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
ஐக்கிய ராஜ்யம்
டான்ஸானியா ஐக்கிய
குடியாசு
அமெரிக்கா
உருகுவே
உஸ்பெகிச்தான்
வெனிசுலா
வியட்னாம்
சாம்பியா
ஜிம்பாப்வே

(மொத்தம் : 162 நாடுகள்)

குறிப்பு : உடனுக்கு உடன் தகவல்களை பெற்றுக் கொள்ள இந்த இணையத்தளத்தை நாடவும்
url: www.wipo.int/treaties/en/ip/berne

அனைத்து வெளியீடுகளும் அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் (WIPO) இணைய புத்தக தளத்தில் பார்வைக்குள்ளது www.wipo.int/sme/en
அத்துடன் சிறிய நடுத்தர தொழிறதுறையாளர்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகளை
www.wipo.int/sme/en/documents/wipo_sme_newsletter.html
தளத்திலும் பார்வையிடலாம். எந்தவித கட்டணமும் அறவிடபட மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

முகவரி :
உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு
34, செமின் டெஸ் கொழம்பெட்டெஸ்
தா.பெ 18
சீ.எச். -1211 ஜெனீவா 20
சுவிஸ்சர்லாந்து.

தொலைபேசி :
+41 22 338 91 11

பெக்ஸ் :
+41 22 733 5428

மின்னஞ்சல் :
wipo.mail@wipo.int

அல்லது நியூயோர்க் ஒருங்கிணைப்பு அலுவலம்

முகவரி :
2, யூனைட்டட் நேஷன்ஸ் ப்லாஸா
34, செமின் டெஸ் கொழம்பெட்டெஸ்
சுயிட் 2525
நியூயோர்க்கள என். வய் 10017
அமெரிக்கா.

தொலைபேசி :
+1 212 963 6813

பெக்ஸ் :
+1 212 963 4801

மின்னஞ்சல் :
wipo@un.org

அல்லது சிறிய நடுத்தர கைத்தொழில் பிரிவு

முகவரி :
34, செமின் டெஸ் கொழம்பெட்டெஸ்
தா.பெ 18
சீ.எச். -1211 ஜெனீவா 20
சுவிஸ்சர்லாந்து.

பெக்ஸ் :
+41 22 338 87 60

மின்னஞ்சல் :
sme@wipo.int

வலைத்தளம் :
www.wipo.int/sme

தமிழ் மொழிபெயர்ப்புக்கான மேலதிக விபரங்களுக்கு அல்லது புத்தகங்களை கொள்வனவுசெய்ய

சிறிய அல்லது நடுத்தர கைத்தொழில் அபிவிருத்தி திட்டம்
53, வொக்சோல் லேன்
கொழும்பு 02
இலங்கை.

தொலைபேசி
+94 11 230 4287 -9

பெக்ஸ்
+94 11 230 4291

மின்னஞ்சல்:
projsmed@slt.lk

User Guide
WIPO Publication No.918 SK / TA (Tamil)
முதல் பதிப்பு

ISBN 978 -92-805-2119-1